இந்திரா சௌந்தர்ராஜன்




# நூறாவது கடத்தல்

# 1. நூறாவது கடத்தல்

சுந்தர வடிவேல் படு சோகத்தில் இருந்தான். அவன் முதலாளி ரங்கராஜன் இந்த வருஷமும் தீபாவளி போனஸ் இல்லை என்று சொல்லிவிட்டார்.

'தொழில் நஷ்டத்தில் நடக்கிறதாம். சம்பளம் கொடுப்பதே பெரும்பாடாக இருக்கிறதாம். இதில் போனஸ் கொடுக்க வேண்டுமென்றால் அவர் நோட்டு தான் அடிக்க வேண்டுமாம்!' இது அவன் முதலாளி சொன்னது. சுந்தர வடிவேல் அவரோடு மோதிக்கூட பார்த்தான். ஊஹூம் பலனில்லை. சின்னதாய் ஒரு ஸ்டவ் பேக்டரி தான் நடத்துகிறார் ரங்கராஜன். இந்த கேஸ் அடுப்பு யுகத்தில் யார் ஸ்டவ் வாங்குகிறார்கள்.

புணுக்கென்று லைட்டரை அடித்தோமா அடுப்பும் எரிந்ததா என்று தான் பார்க்கிறார்களே ஒழிய, மண் எண்ணெய்க்கு க்யூவில் நின்று அதை வாங்கி வந்து ஊற்றி ஸ்டவ்வை எரிக்க யாரும் தயாராயில்லை. காலம் மிக மாறி விட்டது. டி.வி வந்து சினிமா தியேட்டர்களை கல்யாண மண்டபம் ஆக்கிவிட்ட மாதிரி, கேஸ் அடுப்பு வந்து ஸ்டவ் அடுப்பை அழித்துவிட்டது.

இருந்தும் சில கிராமங்களில் இன்னமும் சிலர் ஸ்டவ் தான் வாங்குகிறார்கள்.

அவர்களால் ஏதோ நொண்டிக் கொண்டாவது நடக்கிறது தொழில்.

அதற்காக வருஷத்திற்கு ஒரு முறை வரும் தீபாவளிக்கு ஒருமாச சம்பளத்தைக் கூட போனசாகத் தராவிட்டால் எப்படி? சுந்தர வடிவேல் முதலாளியோடு சண்டை கூட போட்டான்.

'சட்டியில இருந்தா தானே அப்பா அகப்பைல வரும்?' என்று எதிர் கேள்வி கேட்டு அவரும் அவனை அடக்கி விட்டார்.

சுந்தரவடிவேலின் நண்பர்களோ ஆளுக்கு ஆள் போனஸ் வாங்கி விதம் விதமாய், கலர் கலராய் துணி மணிகள் வாங்கிக் கொண்டார்கள்.

சிலர் தீபாவளி லீவில் திருப்பதி போய் வரக்கூட திட்டம் போட்டிருந்தார்கள்.

அதை எல்லாம் நினைக்க நினைக்க சுந்தரவடிவேலுக்கு அழுகையாக வந்தது. பிறந்து வளர்ந்ததே தப்பு என்று கூட தோன்றியது.

"எலேய் இப்படி புலம்பறதை விட்டுட்டு அந்த ஆளை மடக்கறதுக்கு ஒரு வழிய யோசிடா வெண்ணெய்" என்றான் சுந்தரவடிவேலின் நண்பன் மூர்த்தி என்பவன்.

"மடக்கறதுக்கு அந்த ஆள் என்ன மாடா... அதான் முடியாதுன்னுட்டாருல்ல?"

"போனஸா கேட்டா தானே இல்லங்கறாரு. வேற ரூட்ல யோசி..."

"வேற ரூட்லையா.... எப்படி?"

"அவருக்கு ஒரு பொண்ணு இருக்கால்ல...?"

"ஆமா. சிவகாமின்னு ஒரு பொண்ணு இருக்குறா."

"அதுவும் உன்னைப் பார்த்த ஜொள்ளு விடும் தானே?"

"அதுக்கு பேர் ஜொள்ளு கிடையாது மூர்த்தி. பாவம் அது... அதுக்கு சரியா மனவளர்ச்சி கிடையாது."

"பைத்தியம்னு சொல்லாம சொல்றியா?"



"வெச்சுக்கையேன்..."

"என்னத்த வெச்சுக்க... அதான் உண்மை."

"சரி இப்ப அதுக்கென்ன... விஷயத்துக்கு வா."

"நான் சொல்ற மாதிரி கேள். ஒரு மாச போனசுக்கு உனக்கு அல்வா கொடுத்த உன் முதலாளி, அப்புறமா பார் நீ எவ்வளவு கேட்டாலும் தருவாரு."

"நீ என்னடா சொல்றே... எப்படி அவர் தருவாருங் கறே?"

"கிட்ட வா சொல்றேன்..." மூர்த்தி சுந்தரவடிவேலுவின் காதைக் கடித்தான்.

அவன் முகத்திலும் பட்டாசு வெடித்த மாதிரி பலத்த மாறுதல்கள்!

ரங்கராஜன் தன் புல்லட் பைக்கை நிறுத்தி விட்டு வீட்டுக்குள் நுழைந்த போது சோகமாய் இருந்தாள் அவர் மனைவி காமாட்சி.

"ஏண்டீ ஒரு மாதிரி இருக்கே... என்ன விசயம்?"

"நம்ம சிவகாமியை ரொம்ப நேரமா காணலீங்க?"

"ரொம்ப நேரமான்னா...?"

"மத்யானத்துல இருந்து..."

"எங்கடி போய்ட்டா... நல்லா தேடிப்பார்த்தியா?"

"தெரு பூரா தேடிட்டேன். புள்ளையார் கோவிலுக்கும் போய் பார்த்துட்டேன்."

"என்னடி இது குண்டைத் தூக்கிப் போடுறே... எனக்கு போன் பண்றதுக்கென்ன?"

"பண்ணேன். நீங்க பேங்க்குக்கு போய்ட்டதா பேக்டரில் சொன்னாங்க."

காமாட்சி கண்ணைக் கசக்க தொலைபேசி செருமியது. ரங்கராஜனும் ஓடிப்போய் எடுத்தார்.

''யாரு லயன்ஸ் ஸ்டவ் ரங்கராஜனா?''

''நீங்க யாரு...?''

''அது அப்புறம்.... மகளைக் காணோம்னு தேடிக்கிட்டு இருக்கியா?''

''ஆ... ஆமாம்... ஆமாம்... நீங்க யாரு...?''

''அது உனக்கு அநாவசியம். உன் மக இப்ப எங்ககிட்ட தான் இருக்கா. அவ உயிரோட திரும்பணும்னா பத்தாயிரம் ரூவாயோட நீ நாங்க சொல்ற இடத்துக்கு வரணும்....''

''ஏய்... யாருடா நீ... என்ன நினைச்சிட்டிருக்கே உன் மனசுல. நான் யாரு தெரியுமா?''

''புடலங்கா.... உதார்லாம் கொடுக்காதே. ரங்கராஜா எவ்வளவு சினிமா பார்த்துருப்பே...? நாங்க ஒண்ணும் கத்துக் குட்டிங்க கிடையாது. போலீஸ், கீலீஸ்னு போய் பத்தாயிரத்துக்காக உன் மகளை இழந்துடாதே. நாங்க பயங்கரமான குரூப். சொல்லப்போனா எங்களுக்கு போலீசும் பக்க பலம்....''

''அடப்பாவி நீ நல்லாயிருப்பியா?''

''இதெல்லாம் அநாவசியமான டயலாக். பணத்தோட எங்க வரதுன்னு கேள். அப்ப தான் நீ புத்திசாலி.''

''..........''

''என்ன மவுனமாயிட்டே.... யோசிச்சே ஆபத்தாயிடும். இது எங்களுக்கு நூறாவது கடத்தல். ஞாபகம் வச்சுக்கோ...''

''நூறாவது கடத்தலா?''

''ஆமாம். வளவளன்னு பேசாம எங்க வர்றதுன்னு கேள்.''

''சரி சொல்லித் தொலைங்க...''

மறுமுனையில் பேசியவனும் சொல்லி முடித்தான். ரங்கராஜனும் முத்துமுத்தான வியர்வையுடன் அதைக் குறித்துக் கொண்டார்.



காமாட்சி மலங்க மலங்கப் பார்த்தான்.

''என்னங்க... யாருங்க போன்ல?''

''நம்ம மகளை எவனோ கடத்திட்டு பணம் கேட்கறான் காமாட்சி.''

''அய்யோ... அவ ஒரு அப்புராணிங்க. ஏற்கனவே கொஞ்சம் புத்தி சுவாதினமில்ல. இதுல கடத்தல்ல அவ சிக்கினான்னு வெளியே தெரிஞ்சா அவளைக் கட்டிக் கொடுக்கவே முடியாதுங்க...''

''புலம்பாதே... எல்லாத்துக்கும் ஒரு முடிவு கட்றேன்.''

-ரங்கராஜன் தீர்மானமாக ஒரு முடிவுக்கு வந்த மாதிரி எழுந்தார்.

அமைதியாகத் தென்பட்டது அந்த தென்னந்தோப்பு. பெரியதோப்பு... ஆயிரக்கணக்கில் மரங்கள், அதன்முடிவில் வைகை ஆற்றின் குறுக்குப் பாய்ச்சல். அதற்கும் அப்பால் ஆற்றின் மேல் ஒரு பாலம். அந்த பாலத்துக்குக் கீழே தான் வரச் சொல்லியிருந்தான் கடத்தல்காரன்.

தன் புல்லட்டில் அந்த பாலத்தின் மேல் போய் நின்றார் ரங்கராஜன். வண்டியை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி விட்டுசுற்றிலும் பார்த்தார். ஒருவரைக் கூட காணவில்லை.

பாலத்துக்குக் கீழே ஆற்றுக்குள் நிறைய கோரைப் புதர்கள். அதில் ஒன்றில் ஒரு சிவப்புக்கொடி பறந்தபடி இருந்தது.

அங்கே தான் பணத்தை ரங்கராஜன் வைக்க வேண்டும்.

வைத்துவிட்டு புல்லட் பைக்கிடம் வந்தால் மகள் நின்று கொண்டிருப்பாள்!

இதுதான் கடத்தல்காரன் சொன்னது...

ரங்கராஜனும் அந்த புதர் அருகே சென்று சலவை நோட்டாக உள்ள ஒரு கட்டை வைத்தார். திரும்பிப் பார்த்தபடி

நடந்து புல்லட்டிடம் வந்தார். சிவகாமியும் நின்று கொண் டிருந்தாள்.

அப்பாடா! அவர் பெருமூச்சு விட அவர் வைத்த பணத்தை புதரில் இருந்து எடுக்க ஒரு கை நீண்ட போது இன்னொரு கை பாய்ந்து பிடித்தது.

அது சப்-இன்ஸ்பெக்டர் ரத்தினத்தின் கரங்கள்! நீண்ட கைக்குச் சொந்தக்காரனோ சுந்தரவடிவேல்.

''சார்...!'' -சுந்தரவடிவேலு அலறி விட்டான்.

**ஸ்**டேஷனில் ரங்கராஜனின் காலில் மாறி மாறி விழுந்து எழுந்து நின்றான் சுந்தரவடிவேல். ஆனாலும் ரங்கராஜன் மசியவில்லை.

''சப்-இன்ஸ்பெக்டர் சார்... இவன் தான் என் மகளை கடத்துனான்கறது ஊர் பூரா தெரிஞ்சு போச்சு. இந்த நிலை யில் அவளை யார் சார் கட்டுவா?'' ரங்கராஜன் முரண்டு பிடித்தார்.

''அதுக்கு என்ன பண்ணச் சொல்றீங்க?''

''நான் போனஸ் தராத கோபத்தை இப்படியா என் மக மீது காட்டறது...''

''தப்பு தான்... என்ன பண்ணலாம்னு சொல்லுங்க.''

''என்ன பண்ணலாம்னா... என் மகளை இவனே கட்டிக் கட்டும். அப்படி செய்யறதா இருந்தா, இந்த குற்றத்தை நான் மன்னிக்கிறேன். இல்லாட்டி கிட்நாப் கேஸ்ல ஏழு வருஷம் உள்ள போடுங்க...''

-ரங்கராஜன் எடுத்துக் கொடுக்க சப்-இன்ஸ்பெக்டரும் சுந்தரவடிவேலைப் பார்த்தார்.

''அய்யோ ஏழு வருஷமா...?'' அலறினான் அவனும்.

''அப்ப தாலிகட்றேன்னு சொல். கல்யாணம் பண்ணிக் கத்தான் கடத்திக்கிட்டுப் போனேன்னு சொல்லி கேஸை குளோஸ் பண்ணிடுறோம். ஏன்னா நீயும் மேஜர்- அந்தப்



பொண்ணும் மேஜர்'' -சப்-இன்ஸ்பெக்டர் சுருக்கு முடி போட்டார்.

பேந்த பேந்த விழித்தவன் இறுதியாகச் சரி என்று தலையை ஆட்டினான்.

**ர**ங்கராஜன் முகத்தில் வெற்றிப் புன்னகை! சுளையாக பத்தாயிரம்!

மூர்த்தி அதை வாங்கிக் கொண்டு ரங்கராஜன் முன்னே பணிவாகக் கை கூப்பினான்.

''உன்னால தான் இந்தக் கல்யாணம் நடந்துச்சு. என் தொழில் தெரிஞ்ச ஒருத்தனே எனக்கு மாப்பிள்ளை ஆயிட்டான். நான் நேரா முயற்சி பண்ணியிருந்தா அவன் இதுக்கு ஒத்துக்கிட்ருக்க மாட்டான். அதான் போனஸ் கொடுக்காம இழுத்தடிச்சேன். நீயும் அவனை நல்லா திசை திருப்பிவிட்டே. இப்ப என் மகளையே கொடுத்துட்டேன். இதுல எனக்கும் போனஸ்-அவனுக்கும் போனஸ்- ஏன் உனக்கும் கூட போனஸ். சரிதானே?''

-ரங்கராஜன் கேட்டபடி சிரித்தார்.

''உண்மைதாங்க. மூணு மாச போனஸ் பத்தி கேள்விப் பட்டிருக்கேன். மூணுவிதமான போனஸை இப்பத்தான் பார்க்கிறேன்'' என்று மூர்த்தியும் சிரிக்க, வெளியே தீபாவளி பட்டாசு வெடிக்கும் சப்தம்.

சுந்தரவடிவேலு எதுவும் தெரியாத அப்பாவியாக பட்டாசு விட்டுக் கொண்டிருந்தான். அதுவும் ரங்கராஜன் வீட்டில்

தலை தீபாவளியல்லவா?

## 2. ஒரு நடிகையின் தீபாவளி

செட்டில் எல்லோரும் தயார்!

காமிராமேன் காமிராவின் லென்ஸைத் துடைத்துத் துடைத்து அலுத்துப் போய் விட்டார். ஹீரோ பதினாலாவது சிகரெட்டுக்குத் தாவி ஊதித் தள்ளிக் கொண்டிருக்கிறார். ஏறத்தாழ மூன்று மணி நேர காத்திருப்பு.

ஹீரோயின் இந்துப்ரியாவுக்காக!

இந்துப்ரியா!

இன்றைய திரையுலக மின்னல் கொடி. இளைஞர்களின் ரத்தத்தில் அவள் பெயர் தான் குளூகோஸாய் கரைந்து கொண்டிருக்கிறது.

ஆயிரத்து ஐநூறு மன்றங்கள் அவள் பெயரில்! அவளை அடுத்த முதலமைச்சர் என்கின்றன சில பத்திரிகைகள்.

பிரதமரே, "நான் இந்துப்ரியா ரசிகன்" என்று அறிவித்து விட்ட பிறகு, அவள் புகழ் சொல்ல முடியாத உயரத்திற்குப் போய்விட்டது.

இந்துப்ரியா தாமதமாக வந்தாலும், வராமலே போனாலும் அது குறித்து கேள்வி கேட்க யாருக்கும் திராணியில்லை.

ஹீரோ லஷ்மண் கூட சூப்பர் ஸ்டார் தான். ஆனால் இந்துப்ரியா எனும் இமயம் முன் ஊட்டி, கொடைக்கானல் உயரம் கூட இல்லாமல் சிறுத்துப் போய் விட்டான்.



அதையெல்லாம் நினைக்க... அவனுக்குள் கோபம் கொப்பளித்தது...

இந்துப்ரியாவின் கார் உள்ளே நுழையவும் "மேடம் வந்துட்டாங்க... மேடம் வந்துட்டாங்க..." உற்சாகமாய் சிலர் குரல் ஒலிக்க,

"அப்பாடா..." என்று தயாரிப்பாளர் பெருமூச்சுவிட, சிக்கென்று சந்திர பிம்பமாய் தென்பட்டு பூந்தென்றலாய் நடந்து வரத் தொடங்கினாள் இந்துப்ரியா.

இதுவரை அவளைப் பற்றிப் பேசிய பேச்சும் ஏச்சும் அவளது அந்தத் தரிசனம் முன் அப்படியே அடிபட்டுப் போய், லஷ்மண் உள்பட சகலரும் ஜொள்ளுவிட, இந்து ப்ரியாவுடன் அவளது நிழலாய் வழக்கம் போல் வர்தன்!

அவனைப் பார்த்த மாத்திரத்திலேயே இந்துப்ரியா கிளப்பிய சந்தோஷ உணர்வு வற்றி கசப்பாக மாறத் தொடங்கியது.

"யார்யா இந்த வர்தன்?"

"இந்துப்ரியா காதலனோ?"

"இருக்காது.. இந்துவோட அழகென்ன, அறிவென்ன.. . இவனைப் பார்த்தாலே ரவுடி மாதிரி இருக்கானே...?"

இவன் யாரா இருந்தா நமக்கென்ன... ஆனா இவன்தான் இந்துவை ஆட்டி வைக்கிறான். அது ரொம்ப நல்ல பொண்ணு..."

இப்படிப் பலவிதமான முணுமுணுப்புகளில் இருந்து ஒவ்வொருவரும் மீளுமுன் மேக்கப்போடு செட்டுக்குள் காலை வைத்தாள் இந்துப்ரியா...

"சாரி ஃபார் டிலே..." என்றாள் லஷ்மணிடம். அவன் உச்சி குளிர்ந்து போனான். தயாரிப்பாளருக்கு அப்போது தான் நிம்மதி ஏற்பட்டது."

''எவ்வளவு நேரம் லேட்டா வந்தேனோ, அவ்வளவு நேரத்தை ஓவர் டைம் போட்டு நடிச்சுக் கொடுத்துட்டுப் போறேன்...

நீங்க கவலையே படவேண்டாம்'' என்றாள் தயாரிப்பாளர் பக்கம் திரும்பி.

''அதனால் பரவால்லம்மா... நீ இவ்வளவு சொல்றதே பெரிசு என்றார் தயாரிப்பாளர்.

''இந்து நல்லா தூங்கி நாலு நாளாச்சு. அது உடம்புக்கு ஏதாவது வந்தா'' உங்களை நான் சும்மா விட மாட்டேன்'' -என்று வர்தன் தன் பங்குக்கு வாசித்தான்.

தயாரிப்பாளர், வர்தனின் இந்த வாசிப்பால் ஆடிப் போனார்.

''தம்பி... நான் லட்சக் கணக்குல பணத்தைப் போட்டுட்டு தவிச்சிட்டு இருக்கிறவன். இப்பவே விடாம ஷூட்டிங் நடத்துனா கூட, படத்தை பொங்கலுக்கு ரிலீஸ் பண்ணமுடியுமாங்கறது சந்தேகம்...''

''ஏய்யா... என்னையே எதிர்த்துப் பேசறியா நீ? இந்து உடம்புக்கு நான் கவலை பட்றேன். நீ உன் படத்தைப் பத்தியே கவலைப் படறியே...''

''இன்னிக்கு மொத்த ஷூட்டிங் நடந்தாதானே? இந்து கிளம்பு...'' -என்று இந்துவின் பக்கம் திரும்பினான் வர்தன்.

இந்துப்ரியா அவன் பேச்சைக் கேட்டு சலனப்பட்டுப் போனாள். எதுவும் பேசாமல் அவனையே சோகமாகப் பார்த்தாள்.

''கிளம்பு இந்து... இவங்களை எல்லாம் போட்டு பார்த்தாத்தான் வழிக்கு வருவாங்க...'' என்ற வர்தன் எழுந்து போய் காரில் உட்கார்ந்து கொண்டான்.

ஹீரோ லஷ்மண் கூட வந்து சமாதானப்படுத்திப் பார்த்தான். ஊஹூம் பலனில்லை! கார் இந்துப்ரியாவோடு



பறந்து விட்டது. தயாரிப்பாளர் தன் நாக்கை எண்ணி நொந்தபடி சோர்ந்து போய்விட்டார்.

காரில் இறுகிப் போய் உட்கார்ந்திருந்தாள் இந்து! காரை வர்தன் தான் டிரைவ் செய்ய ஆரம்பித்தான்.

''ஏன் இந்து ஒரு மாதிரி இருக்கே... அந்த புரொட்யூசர் பேசினதை நினைச்சா?'' என்று பேச்சை ஆரம்பித்தான்.

அவனிடம் மௌனம்.

''நாம கொஞ்சம் சரிசரின்னு போனாலும் போதும் நம்ப தலையில ஏறிடுவாங்க இவங்க. இப்பப் பாரு எப்படிக் கதறி அடிச்சுக்கிட்டு வரப்போறாங்கன்னு...''

அவன் பேசிக் கொண்டே போனான். அவள் இறுகிக் கொண்டே போனாள். அவனிடம் பேசுவதில் துளியும் பலனில்லை என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும்.

எதிலும் ஒரு முடிவை அவன் எடுத்தால் எடுத்ததுதான்...

இந்துப்ரியா இன்று இப்படி கவலைப்பட மட்டும் அவன் காரணமில்லை... இன்று அவள் இத்தனை பெரிய ஸ்டாராக இருக்கவே அவன் தான் காரணம்!

அவளுக்காக அவன் ஏறி இறங்காத கம்பெனி படிக்கட்டுகளே கிடையாது... இந்துவின் ஒவ்வொரு அங்குல உயர்வுக்குப் பின்னாலும் அவன் இருக்கிறான்.

சமயங்களில் இப்படிப்பட்ட பிணக்குகளிலும் அவனே இருப்பதையும் அவள் உணர்கிறாள்.

''பாவங்க அந்த புரொட்யூசர்...''

''யாரைப் பார்த்து பாவப்படணும்னு எனக்குத் தெரியும். நீ சும்மா இரு...''

''அது சரி... தீபாவளி வரப் போகுதே என்ன பண்ணப் போறீங்க?''

பண்றதுக்கு என்ன இருக்கு... ஆரியபவன்ல ஸ்வீட் வாங்கித்தரேன் சாப்பிடு. சிவகாசி பட்டாஸ் இருக்கு. வெடிச்சு தள்ளு...''

''இது இரண்டு மட்டும் தானா தீபாவளி...?''

''நீ சுத்தி வளைச்சு எங்க வரேன்னு எனக்குத் தெரியும். உனக்கு இந்த ஆசையெல்லாம் வேண்டாம். நீ இந்துப்ரியா அதை மறந்துடாதே. ரசிகர்களின் கனவுக்கன்னி இந்துப்ரியா அது முக்கியமா ஞாபகத்துல இருக்கட்டும்.''

அவள் அவன் பதிலால் சோர்ந்து போனாள். அவள் இறுக்கம் மிகவும் கூடிப் போனது. வீட்டிற்குள் நுழைந்து படுக்கையில் விழுந்தாள். அழ வேண்டும் போல் தோன்றி யது. அப்பொழுது பார்த்து டெலிபோனில் அழைப்பு.

கையில் எடுத்தாள். மறுமுனையில் தயாரிப்பாளர்.

''அப்படி என்னம்மா நான் தப்பா சொல்லிட்டேன். அவர் வர்தன் இப்படிப் பண்ணிட்டாரே... உங்களுக்கே இது நல்லா இருக்கா?'' என்று விசும்பாத குறையாக வெடித்தார்.

''சாரி சார்...''

''உன் சாரியால எனக்கு ஆகப்போறதென்னம்மா, ஷூட்டிங்குக்கு வாம்மா...''

''கவலைப்படாதீங்க. வர்தனைச் சமாதானப்படுத்தி விட்டு கிளம்பி வரேன்.''

''ரொம்ப சந்தோஷம்மா... இன்னிக்கு நாலாவது நாள் தீபாவளி வருது. தயது செய்து தீபாவளிக்கும் கால்ஷீட் கொடும்மா, எனக்கு வேற வழியே தெரியலை.

தயாரிப்பாளர் தயங்கித் தயங்கித்தான் பேசினார். ஆனால், இந்துப்ரியாவோ அதைக் கேட்டு உற்சாகமானாள்.



''என்னது தீபாவளிக்கு ஷூட்டிங்கா, தலை தீபாவளி கொண்டாடற மாதிரி காட்சியா?''

''ஆமாம்மா. முடியாதுன்னு சொல்லிடாதம்மா. இன்னிக்கு கேன்சல் ஆனதெல்லாம் கூட அன்னிக்கும் ஷூட்டிங் நடந்தாதான் அட்ஜஸ் ஆகும்.''

''ரொம்ப சந்தோசம். நான் கட்டாயம் கலந்துக்கிறேன்'' என்றவள் வர்தனிடம் போனாள். ''தயாரிப்பாளர் போன் பண்ணினார்-ரொம்ப ஃபீல் பண்றாரு'' என்றாள்.

''நல்லா பண்ணட்டும்''-என்றான் தெனாவெட்டாக அவன்.

''உங்ககிட்ட பர்சனலா மன்னிப்பு கூட கேட்டாரு'' அவன் அதைக் கேட்டு இளகினான்.

''ஏன் எங்கிட்ட நேரில கேட்டா என்ன?''

''மன்னிப்புன்னு கேட்டாச்சு யார்கிட்டே கேட்டா என்ன?'' ஒரு பொய்யை லாவகமாக வேறு சொன்னாள்.

''சரி சரி ஷூட்டிங்குக்குப் போய்ட்டு வா, அந்த ஆள் முகத்துல நான் முழிக்க தயாரா இல்லை.''

''தீபாவளியன்னிக்கு கூட ஷூட்டிங் இருக்கு.''

''அந்த ஆள் என்ன விளையாட்றானா?''

''நான் இங்க தீபாவளி கொண்டாடினாதான் என் இமேஜ் கெட்டுப் போயிடுமே. ஷூட்டிங் போனால் என்ன?''

அவன் அவளை முறைத்துப் பார்த்தான், ''சரி சரி போய்ட்டு வா...'' என்றான் கடுமையாக.

தீபாவளியன்றும் ஷூட்டிங்! தலைதீபாவளி கொண்டாடுவது போல் காட்சிகள், ஒருவழியாக காட்சிகள் முடிய இந்துப்ரியாவுக்கு எதையோ இழந்தது போல் ஒரு உணர்வு.

-கண்களில் ஏனோ கண்ணீர்.

-காரில் ஏறிய கையோடு முதல் காரியமாக வர்தனால் கட்டப்பட்ட தாலியை ஜாக்கெட்டுக்கு வெளியே எடுத்து விட்டுக் கொண்டாள்.

ஆறு மாசத்துக்கு முன்புதான் கட்டினான். "என் தலைதீபாவளி கொண்டாட்டம் கூட நடிப்பாகி, அதுக்குக் கூட பாராட்டு கிடைச்சாச்சு. ஒரு நடிகைன்னாபல சமயங்கள நடிப்புலேயே நிஜங்களைக் கலந்துக்க வேண்டி யது தான் வேற வழி...?

-விரக்தியோடு அவள் அழத் தொடங்கினாள்.

# 3. தொழில் தர்மம்

ஒருகாலத்தில் பொட்டைக்காடாக இருந்த இடம், இன்று வானத்து மேகத்தைப் பிடித்து பாக்கெட்டில் போட்டுக் கொள்ளுமளவிற்கு உயரமான கட்டடங் களோடு நிற்பதைப் பார்க்கும் போது மலைப்பாகத்தான் இருக்கிறது.

ஆடும் மாடும் மேய்ந்த இடமெல்லாம் கட்டிடங்கள்... நெல்லும், புல்லும் விளைந்த இடமெல்லாம் கட்டிடங்கள்... மனிதக் கூட்டத்தின் பெருக்கத்தால் இப்படி கட்டிடம் பெருகுவதால் தான் அருணகிரியின் பிழைப்பும் ஏதோ இன்று வரை பழுதில்லாமல் ஓடிக் கொண்டிருக்கிறது. நாளொன்றுக்கு ஐம்பது ரூபாய்க்குப் பழுதில்லாத வருமானம். வயிற்றுப் பாட்டுக்குச் சிக்கலில்லை.

ஆனால், அக்காள் மகள் ராங்கியத்தையே கட்டிக் கொண்டு குடும்பஸ்தனான பிறகு, அந்த ஐம்பது ரூபாய் அரை வயிற்றுக்கும் கீழே போய்விட்டது. அதன் எதிரொலி யாக ராங்கியமும் அவனோடு கட்டிட வேலைக்குக் கிளம்பத் தயாரானாள். ஒரு ஆண் குழந்தைக்குத் தாயாகி, அது பள்ளிக்கூடம் போக ஆரம்பித்த பிறகு பொறுப்பு இன்னும் அதிகமாகி விட்டது. தூக்கு வாளியில் பழைய சோற்றையும், பச்சை மிளகாயையும் எடுத்துக் கொண்டு கட்டுமானம் நடக்கும் இடத்திற்கு வந்தால், சூரியன் சாய்ந்து படுக்கும் வரை வேலை சரியாக இருக்கும்.

இதில் மேஸ்திரியின் கள்ளப் பார்வையைப் புறங் காணுவதில் இருந்து, கலவை சட்டி கவிழாமல் நடப்பது வரை எத்தனையோ இடர்பாடுகள்...

புதிதாக ஒரு இடர்பாடு-கருணாகரன்!

காண்ட்ராக்டர் கருணாகரன் என்றால் ஏரியா பிரசித்தமாம். இது அவர் தனக்குத்தானே சொல்லிக் கொள்ளும் ஒன்று.

நாலு நாளாய் அந்த நபர் அருணகிரிக்காக அலையாய் அலைகிறார். அருணகிரியின் தொழில் சாதுர்யம் அவரை அந்த அலை அலைய விடுகிறது.

''தோ பாரு... அருணகிரி, எத்தினி நாளைக்கு இப்படி எடுபிடியாவே இருந்து செங்கல்லும், இரும்புச் சட்டியும் தூக்கி, சாந்து பூசியே சாகப் போறே...? நீ ஒரு சிற்பியா பொறந்திருக்க வேண்டிய ஆளு. சித்தாளா போயிட்டே! என்னை மாதிரி பெரிய காண்ட்ராக்டரா நீ வர முடியாட்டியும், ஒரு நல்ல மேஸ்திரியாக் கூடவா உன்னால் வரமுடியாது?''

இப்படித்தான் அவரது ஆரம்பப் பேச்சு, அவனுக்குள் நங்கூரம் போட்டது.

''பேசாம என் காண்ட்ராக்டுல மேஸ்திரியா வேலைக்குச் சேர்ந்துடு. நா சொல்ற மாதிரி கேளு. ஊருக்கெல்லாம் ஊடுகட்ற நீ, உனக்காக ஒரு வீட்டை ஒரே வருஷத்துல கட்டிக்கறாப்பில பண்றேன்.'' -என்று அந்த நபர் ஆசை நெருப்பை மூட்டியபோது, அது கொழுந்து விட்டு அவனுக்குள் எரியவும் தொடங்கிவிட்டது.

ஆனால், அவரோடு இணைந்து செயல்பட பயமாக இருக்கிறது. ராங்கியமும் தடுக்கிறாள்.

''மச்சான் வேணாம். அவன் பார்வையே சரியில்லை. ரொம்ப மோசமான காண்ட்ராக்ட் ஆளுன்னு ஒரு காலத்துல அவன்கிட்டே சித்தாள வேலை பார்த்த முனியம்மா சொன்னா... கலவையை பிராடு பண்றதுல மன்னனாம்.''



ராங்கியமும் தடுத்துப் பார்த்தாள். முடியாது போல் தெரிகிறது. அருணகிரி மனது கருணாகரன் பின்னால் ஓடிவிடத் துடிக்கிறது.

மேஸ்திரி ஆக வேண்டும்... மோதிரம் தரித்து, வெற்றிலை குதப்பின வாயோடு சுற்றிச் சுற்றி வந்து அதிகாரம் பண்ண வேண்டும். கைதட்டினால் காப்பி, டீ வரும். வாங்கி வாங்கிக் குடிக்கலாம்.

டப்பாவில் பணத்தை மொத்தமாக வைத்துக் கொண்டு கூலிப் பட்டுவாடா பண்ணலாம். வயசுப் பெண்கள், வந்தால் சில்மிஷமாகச் சிரித்து தனியாய் வரச் சொல்லலாம்.

அருணகிரி புத்தி இப்படித்தான் எப்படியெல்லாமோ போகிறது. ஒரு கட்டத்தில் கருணாகரனின் பைக்கின் பின்னால் ஏறிக் கொண்டு, உன் இழுப்புக்கு நான் வந்து விட்டேன் என்று அவன் கிளம்பியும் விட்டான்.

ராங்கியத்துக்குப் பதறியது.

''எங்கவே போறான் உன் புருஷன்? மேஸ்திரி ஆக்கறேன்னு அந்த தில்லுமுல்லு சொல்லவும் போயிட்டானா?'' -நடப்புக் கட்டிட மேஸ்திரி நடராஜன் கேட்டபடி முன் வந்தார்.

ராங்கியத்துக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

''உலகத்துல விதவிதமா தொழிலாளிங்க. செருப்பு தைக்கறவங்கள்ள இருந்து ஆகாய விமானம் ஓட்ற வரை எவ்வளவோ தொழில். ஆனா நம்ம தொழில் திறமை மட்டும்தான் காலகாலத்துக்கும் பேசப்படற ஒண்ணு. நம்ம வம்சா வழியில எத்தனையோ தலைமுறைக்கு முந்தி வாழ்ந்தவங்க கட்டின கட்டடங்கள் கோபுரங்களா, அரண்மனையா இப்பவும் இருக்குன்னா, அதுக்கு அவங்க தொழில்ல காட்டின ஈடுபாடு தான் காரணம். நம்ம தொழில்ல தான் தப்பே பண்ணக் கூடாது. தப்பு பண்ற ஆள் அவன். அவனோட சேர்ந்து உன் புருஷன் தப்பா

யிடப் போறான்.'' -மேஸ்திரி செய்த எச்சரிக்கை வீண் போகவில்லை. புதிதாக ஒரு கட்டிட காண்ட்ராக்டுக்குத் தான் அந்த கருணாகரன் அருணகிரியைப் பிடித்திருந்தார்.

பள்ளிக்கூட காண்ட்ராக்ட்!

ஜென்மாஜென்மமாக ஓலைக் குடிசையாகவே இருந்த கார்ப்பரேஷன் பள்ளிக்கூடத்துக்கு விமோசனம் பிறந்திருக்கிறது.

யாரோ ஒரு பணக்காரர் நன்கொடையாய் கட்டித்தர முன்வந்து விமோசனம் பிறந்திருக்கிறது. நியாயத்துக்குப் பார்த்தாலே லட்ச ரூபாய்க்கு மேல் போகும். அதை எழுப தாயிரத்தில் முடிப்பதாக கருணாகரன் ஒப்புக் கொண்டு வேலையும் தொடங்கப் போகிறார்.

சொச்சமெல்லாம் லஞ்சமாக நாலாபக்கமும் சிதறி விட்டது. எழுபதாயிரத்தில் ஏறத்தாழ 700 சதுர அடியைக் கட்டித் தந்தாக வேண்டும். அருணகிரியிடம் அந்த பொறுப்பை விட்டபோது முதலில் மலைத்தான். பிறகு தேற்றிக் கொண்டு இறங்கி விட்டான். சிமெண்டை பெயருக்கு கலந்து, சுண்ணாம்பை ஏகமாய் சேர்ந்து கலவை என்று பெயர் பண்ணி தன் தொழில் சாதுர்யம் மொத்தமும் காட்டி கட்டிடம் கட்டி முடிந்தாகிவிட்டது.

ராங்கியம் கேட்டாள்...

''இதெல்லாம் தொழில் தர்மமா?''

''தர்மம் பார்த்து நாம என்ன பெரிசா சொத்து சேத்திட் டோம்?''

''சொத்து சேத்து தர்மம் பார்க்கறதில்லய்யா... அது நம்ம கடமை.''

''சாமர்த்தியம்தான் எப்பவும் கடமை புள்ள... பொழைக்கத் தெரியாதவளா இருக்கியே...?''



''நீ தொழில் சாமர்த்தியத்தைச் சொல்றியா, ஏமாத்துற சாமர்த்தியத்தைச் சொல்றியா?''

''இந்தக் காலத்துல எல்லாம் தான் சாமர்த்தியம்.''

''வேண்டாம்யா நம்ம இனத்து பேரைக் கெடுத்து டாதே...''

''ஏய் என்ன நீ பெரிசா உபதேசம் பண்ண வந்துட்டே: இந்தக் காலத்துல யார் தப்பு பண்ணல? புட்டிப்பால்ல கூட கலப்படம் புள்ள. அப்படி செஞ்சாத்தான் பொழைக்க முடியுங்கற நிலை...''

''நாம அதை வெய்யறோமே...? நாமளே அந்த மாதிரி நம்ம தொழில்ல தப்பு பண்ணலாமா?''

''நா ஒரு தப்பும் பண்ணல. சிக்கனமா பண்ணிக் கொடுக்கிறேன். அவ்ளோதான்.''

''பாங்குல கடன் வாங்கி நகை நட்டை வித்து, குந்தி யிருக்க ஊடு கட்றாங்க பாரு. அவங்களுக்கு நீ சிக்கனமாக நல்லவிதமா கட்டிக் கொடு. பொது வேலை எல்லாம் வேண் டாம்யா. அதுலயும் பள்ளிக்கூடம்கறது கோயில் மாதிரி.

நாம எந்தக் காலத்துல கோயில் எல்லாம் கட்டப் போறோம். ஏதோ கட்டிக் கொடுக்கிற சந்தர்ப்பம் வந்துருக்கு. அதைத் தொழில் சுத்தமா பண்ணாட்டி அந்த சாமி நம்மளை சும்மா விடாதுய்யா...'' -என்று ராங்கியம் பேசியது எதுவும் அவன் காதிலேயே ஏறவில்லை. அதேசமயம் அவள் சொன்னது போல சாமியும் அவனை விடத்தயாராக இல்லை. அருணகிரி அடித்துப்பிடித்துக் கட்டிய புதிய பள்ளிக் கட்டடத்தில் வகுப்பு நடக்கும் போது திடீரென்று கட்டுமானம் இடிபட்டதில் நிறைய குழந்தைகளுக்குக் காயம்.

குறிப்பாக அருணகிரியின் மகனுக்கு உயிரே போய் விட்டிருந்தது.

அருணகிரி ஸ்தம்பித்துப் போய் நின்றிருந்தான்!

## 4. பட்டு மனசு

மழை வரும் போலத் தெரிந்தது.

வானத்தில் மின்னலின் அட்டகாசம்.. அடிக்கொரு தடவை இடி சப்தம். மேக்கூட்டத்தில் மழை நீரை உலுக்கி விடப் பார்த்தது.

இலேசான தூறல் ஆரம்பமாகி விட்டது... மழை போகப் போக வலுத்து விடும் போலத் தெரிந்தது. அண்ணாந்து பார்த்துவிட்டு ஆயாசத்துடன் பெருமூச்சு விட ஆரம்பித்தான் ராமானுஜம்.

''நாசமாப் போன மழை... பொழப்பக் கெடுத்துக் கிட்டு...'' என்று சலித்தும் கொண்டான். அது அவனுக்கு அருகில் நிற்கும் கெங்கம்மாள் காதிலும் விழுந்திருக்க வேண்டும்.

''டேய் ஏண்டா மழையைப் போய் திட்றே? ஊரே தண்ணி கிடைக்காம தடுமாறிக்கிட்டு இருக்கு... தண்ணிக்காக தமிழகமும் கன்னடமும் சண்டை வேற போட்டுக்கிட்டு இருக்கு. இந்த நேரத்தில மழை வந்தா சந்தோஷப்பட்றதை விட்டுட்டுச் சபிக்கிறியே...?'' என்று எகிறுதலான கோபத்துடன் காட்டமாகவே கத்தினாள் அவள்.

''அட ஏன் அத்தை நீவேற...? நம்ம பொழப்புக்கு மழை எவ்வளவு இடைஞ்சல்னு தெரிஞ்சுமா இப்படிப் பேசறே?'' அவளைப் பார்த்துத் திருப்பிக் கேட்டான்.



''பெரிய்ய இடைஞ்சல். இன்னிக்குப் பொழப்புப் போனா நாளைக்குச் சேர்த்து உழைச்சிட்டுப் போயிடலாம். ஆனா மழை அப்படி இல்லை. அது பருவத்துக்குப் பெய்ய லைன்னா ததிங்கிணத்தோம் போடணும் ஞாபகத்துல வெச்சுக்கோ...''

பேச்சுக்குப் பேச்சு என்று இருவர் குரலும் வலுத்துக் கொண்டே போன மாதிரி மழையும் வலுக்க ஆரம்பித்து விட்டது.

அதுவரை வீதியில் நின்று வாதம் செய்த இருவரும் உடனடியாக அருகில் உள்ள ஓட்டு வீட்டுக் கூரையின் முன்பு உள்ள திண்ணைச் சரிவை அண்டி நின்று கொண் டார்கள்.

வீட்டின் உள்ளே ராஜம் தறி நெய்து கொண்டிருந்தாள். எட்டிப் பார்த்தபோது அவள் தறி மேடையில் அவள் கை வண்ணத்தில் நூல் வேட்டி ஒன்று வளர்ந்து கொண்டிருந் தது.

''பேசாம நானும் நூல் வேட்டித் தறியே போட்டுருக்க லாம். பவிசா பட்டு நெய்யறேன்னு பட்டுத் தறியைப் பூட்டிப்பிட்டு இப்ப முணுக்குன்னு மழை பெஞ்சா கூட என்னால அதை நெய்ய முடியலை. நாலு நாளா இதே ரோதனை.''

அவன் குரல் ராஜத்தை எட்டியிருக்க வேண்டும். திரும்பிப் பார்த்தாள். உள்ளே அழைத்தாள். அவனைச் சற்று பொறாமையோடு பார்த்தாள்.

''ஏன் ராஜம் அப்படிப் பார்க்கறே?''

''உனக்கென்ன நீ பட்டு நெய்யறவன். என்னை மாதிரி கொண்டி நூலில்லையே...''

''பெரிய்ய பட்டு... மழைக் காத்துன்னா தொழில் செய்ய முடியலையே...''

''ஏன்?''

''என்ன தெரியாத மாதிரி கேக்கறே! காத்து ஜில்லிட்டுப் போனா பட்டு நூல் ஒட்டிக்கிட்டுப் பிரிஞ்சு கொடுக்காமப் பட்டு பட்டுன்னு அறுந்து போகும், தெரியாதா உனக்கு?''

''ஹூம்.. முன்னே பின்ன பட்டு நெஞ்சிருந்தா தானே தெரியும்?''

''என்ன ராஜம் பெரிய பட்டு... உசுர் போகுது! கூலி நிறைய கிடைக்கும்னு ஆசைப்பட்டுத் தெரியாத்தனமா அதைத் தொட்டுட்டேன். பாத்துப் பாத்து நெய்ய வேண்டி யதா இருக்கு. துளி அழுக்கு பட்டாலும் அவ்வளவு தான். நாராயண முதலாளி சவட்டி எடுத்துடுவாரு...

''அவர் ஏன் சவட்டணும்?''

''அவர் தானே பட்டு நூல், கோரா, ஜரிகை எல்லாம் வாங்கப் பணம் தந்தவர்...''

''ரொம்பப் பணம் ஆனிச்சோ?''

''இல்லையா பின்னே... உன் தறிக்கு ஐநூறு செலவானா என் தறிக்கு எட்டாயிரம்...''

''அடேங்கப்பா... ஆமா எத்தினி புடவை?''

''மூணு... மூணு புடவையும் ஒரே மாதிரி புட்டா பார்டரோட இருக்கும். ராமர் கலர்...''

''உனக்கு எவ்வளவு கூலி?''

''ஒரு புடவைக்கு நானூறு ரூபா. இந்த நானூரு ரூபாய்க்கு நான் பதினைந்து நாள் சாக வேண்டியதா இருக்கு...''

''போகப் போக ஒரு வாரத்துக்கு ஒரு புடவை நெய்ய மாட்டியா என்ன?''

''காஞ்சிபுரத்துல இரண்டு நாளைக்கு ஒரு புடவை நெய்யறவன் இருக்கான். நம்ம ஊர் க்ளைமேட் ரொம்ப மோசம் ராஜம்...''



இருவரும் பேசுவதைக் கங்கம்மாள் கன்னத்தில் கை வைத்தபடி கேட்டுக் கொண்டிருந்தாள். மழையோ விடுவதாகத் தெரியவில்லை.

ராமானுஜத்தையே ஊன்றிப் பார்க்கிறாள்.

ஐம்பது வயதைத் தொட்டு விட்டவன். கல்யாண வயதில் பெண் ஒருத்தி இருக்கிறாள். பத்மாவதி என்றால் போதும் அந்தத் திருச்சானூர் பத்மாவதி போலத் துள்ளிக் கொண்டு வருவாள்.

''என்ன பாட்டி?'' என்று நைச்சியமாக விசாரிப்பாள்.

ராமானுஜத்தின் உடல் பொருள் ஆவி எல்லாமே அவள் தான். அவளுக்காகத்தான் இந்த வயதிலும் இப்படிப் பட்டுத் தறி, நூல்தறி என்று அல்லாடிக் கொண்டிருக்கிறான் ராமானுஜம்.

மனைவியைக் காசநோய்க்கு எழுதிக் கொடுத்து விட்ட வன். வீட்டு வேலை எல்லாமே பத்மாவதிதான்! அப்பன் தறிக்கு நூல் எடுத்துக் கெண்டை சுற்றிக் கொடுப்பதில் இருந்து வீடு கூட்டிச் சமைத்துத் துணி துவைத்துச் சகலமும் செய்வது வரை எல்லாம் பத்மாவதிதான்.

ராமானுஜம் சம்பாதிக்கும் அல்ப சொல்ப சம்பாத்தியத்தி லும் மிச்சம் மீதி கண்டு காதுக்கு ஒரு தோடும், மூக்குக்கு ஒரு மூக்குத்தியும் செய்துகொண்டு விட்ட சாமர்த்தியசாலி அவள்.

கெங்கம்மாள் நினைப்பு, பத்மாவதி வரை போய் விட்டுத் திரும்பின சமயம் இலேசாக மழையும் இளைத்து விட்டிருந்தது.

''டேய் கிளம்புடா... மழை விட்றுச்சு...'' என்றபடி முணுங்கலுடன் நிமிர ஆரம்பித்தாள் கெங்கம்மாள்.

''ஆமா எங்க வந்தீங்க?'' -ராஜம் முதலிலேயே கேட்க வேண்டியதை இப்போதுதான் கேட்கிறாள்.

''நாராயண முதலாளியைப் பார்க்கத்தான். இந்தத் தெருவுக்கு வந்தோம். அவரைக் காணோம்- பஜாருக்குப் போயிருக்காராம்...''-என்றான் ராமானுஜம்.

''வந்த இடத்துலதான் மழை பிடிச்சுகிச்சு.. உன் வீட்ல நுழைஞ்சு இவன் பட்டோட புராணம் படிக்க ஆரம்பிச் சுட்டான்...'' -என்றாள் கெங்கம்மாள்.

''ஆமா பத்மாவதி நல்லா இருக்காளா?'' -ராஜம் ஆவலாகக் கேட்டாள்.

''ஏதோ அந்தப் பெண்ணாலதான் இவன் குடும்பமே படுக்காம நடந்துகிட்டிருக்கு...'' -என்றபடி வாசற்பக்கம் நடையிட ஆரம்பித்தாள் கெங்கம்மாள்.

''அவளுக்குக் கல்யாண ஏற்பாடு எதுவும் பண்ணலியா?'' -ராஜத்தின் அத்தக் கேள்வி முன் ராமானுஜம் நெக்குருகிப் போனான்.

''ஒரு நல்ல இடம் வந்துருக்கு. ஆனா கல்யாணத்தை எப்படிப் பண்றதுன்னுதான் தெரியலே...'' என்று பெருமூச்செறிந்தாள்.

''வீடு கட்டறவங்களும், கல்யாணம் பண்றவர்களும் பணம் காசைக் கையில வெச்சுக்கிட்டா இறங்குறாங்க? இறங்குங்க தானா வரும். பத்மாவதி நல்ல பொண்ணு. காலாகாலத்துல எல்லாம் நடந்தா தானே நல்லது!''- ராஜம் ஊக்கி விட்டாள். ''பார்ப்போம்.'' என்று தலையாட்டிய படி கிளம்பினான் ராமானுஜம். வீதியில் மழை நீரின் குதூகலமான பாய்ச்சல்!

மெள்ள அவனைப் பின் தொடர்ந்தாள் கெங்கம்மாள். புருஷன் பிள்ளை குட்டி என்று ஒருவரும் இல்லாத அனா தரவான அவளுக்கு அண்ணன் மகன் ராமானுஜம்தான் எல்லாம்.

''டேய் என் கழுத்து சங்கிலி பத்மாவுக்குத் தாண்டா! கவலைப்படாம காரியத்துல இறங்கு. நாராயண முதலாளிய



பார்த்து ஒரு பட்டுப் புடவைக்கு வழி பண்ணிக்கலாம்னு பார்த்தா அவரைக் காணோம்.''-புலம்பினாள்.

''ஆமாம். நீ எல்லாம் பட்டு உடுத்தி தான் தாலி கட்டிக் கிட்டியா? பெரிய பட்டு! அத்தை நமக்கெல்லாம் நார்ப் பட்டு போதும் அத்தை...''

ராமானுஜம் அப்படிச் சொல்லவும் வீடு வரவும் சரியாக இருந்தது. உள்ளே அதிசயமாகத் தறி நெய்யும் சப்தம்.

பத்மாவதிதான் நெய்து கொண்டிருந்தாள்; அதிலும் பட்டுத் தறியை!

''பாவி மகளே...'' -அலறியபடி உள்ளே ஓடினான்.

''தறியை விட்டு இறங்குடி... இது என்ன அஞ்சு ரூவா பத்து ரூவா வேட்டி சமாச்சாரமா? எல்லாம் ஆயிரம் பத்தா யிரம் விஷயம்... எறங்கு கீழே...'' கத்தினான்.

''அட ஏன்ப்பா மெரட்றே? நான் நல்லாத்தானே நெய்ய றேன் என்று திமிசு மிதிப்பதை நிறுத்தி விட்டு பார்த்தாள்.

''நீ நல்லா கிழிச்சே...'' என்று பட்டுப் பாவின் ஒட்டத் தைப் பார்வையிட்டான். ஆங்காங்கே இழை அறுந்து, தற்கொலைப் பிணம் போல் தொங்கிக் கொண்டிருந்தன.

அதைப் பார்க்க பதறியது ராமானுதஜத்திற்கு.

''மூதேவி... பார், மழை பெய்தபோது நெஞ்சதால இழை யெல்லாம் அறுந்துருக்கறதை'' என்றபடியே கத்தத் தொடங் கினான். அவள் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்திருந்தாள்.

ஒருவழியாக அனைத்தையும் செய்வதற்குள் அவனுக்குப் போதும் போதுமென்றாகி விட்டது.

இதற்குள் பத்மாவதியும் உள்ளோடிப் போய் சுக்கு மல்லிக் காபி போட்டு எடுத்து வந்தாள்.

அதை ரசித்து உறிஞ்சும் அப்பனை ஆசையாகப் பார்த்தாள்.

அப்பொழுது பார்த்து நாராயண முதலாளி அழைப்பதாக ஒருவன் வந்து சொல்லி விட்டுப் போனான்.

''முதலாளி கூப்பிட்றாரு. போய் என்னன்னு பாத்துவிட்டு வந்துட்றேன். நீ தறியைக் கெடுத்துடாதே ஜாக்ரதை...''

வீதியில் இறங்கி ஓட ஆரம்பித்தான் ராமானுஜம்.

செங்கம்மாள் பத்மாவதியை நெருங்கி வந்து நின்றபடி வெறிக்கத் தொடங்கினாள்.

''ஏன் பாட்டி அப்படி பாக்கறே?''

''உன்னைக் கல்யாணப்பெண்ணா முகூர்த்த பட்டோட கற்பனை பண்ணிப் பார்த்தேண்டா...'' என்றாள் செங்கம்மாள்.

''பட்டுப் புடவை கனவெல்லாம் வேண்டாம் பாட்டி. அது பணக்கார கனவு...'' என்று திருத்தினாள் பத்மாவதி.

''நாம நெய்யற ஒண்ணு நமக்குச் சொந்தமில்லை பாத்தியா... பாத்துப் பாத்துச் சின்னக் குழந்தையைப் பெரிய மனுஷியாக்கற மாதிரி கவனிச்சு கவனிச்சு நெய்யறோம். ஆனா ஒரு புடவை நமக்குன்னு வாங்கிக்க வக்கில்ல பாத்தியா?'' உடைந்த குரலில் அழ ஆரம்பித்தாள் செங்கம்மாள்.

நாராயண முதலாளி பட்டு வஸ்திரத்தில் பஞ்சகச்சம் உடுத்தி நாமம் எல்லாம் போட்டிருந்தார். ஊஞ்சலில் ஆடியபடி வெற்றிலை போடும் அவர் அருகில் அவர் சகதர்மிணி.

''ஆமா ராமானுஜம் வந்தானாமே?'' கேட்கிறார். ''ஆமா அவனோட அத்தையும் வந்திருந்தா?''

''என்ன சேதி?''



''பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணப் போறான் போல இருக்கு. கல்யாண முகூர்த்தப் பட்டுக்கு நம்ம பட்டுப் புடவையில ஒண்ணைச் சகாயமா வாங்கிக்கலாமான்னு பாக்கறான்.''

''சகாயமான்னா?''

''பாதிக்குப் பாதி பணம் தர பிரியப் படறான். மிச்சம் நம்ம நன்கொடை போலத் தெரியுது.''

''ஏன் முழுசா ஒரு புடவையே கொடுத்தா கசக்குதோ?'' -நாராயண முதலாளியின் அந்தக் கேள்வி முன் திக்குமுக் காடிப் போனாள் அவர் மனைவி.''

''பத்மாவதி நல்ல பொண்ணு. தாராளமா செய்யலாம். நானே சொல்லணும்னு இருந்தேன்'' என்றாள்.

''அவன் நெய்யற மூணு புடவையில ஒண்ணு பத்மாவதிக்கு. இன்னொன்னு உனக்கு, மூணாவது உன் மகளுக்குச் சரிதானே?''

''ரொம்ப சந்தோசம்.''

''ஆனா அவன் வந்தா சொல்லாதே. கொஞ்சம் தண்ணி காட்டுவோம். என்ன பண்றான்னு பாப்போம். ஓசைப் படாம கல்யாணத்துக்கு முதல் நாள் கொண்டு போய்க் கொடுப்போம். என்ன சொல்றே?''

நாராயண முதலாளி அப்படிச் சொல்லும் போதே ராமானுஜம் வந்து விட்டான். கும்பிட்டபடி கைகட்டி நின்றான்.

''வா ராமானுஜம். புடவை தயாராயிடிச்சா.?''

''ஆகிகிட்டிருக்கு...''

''ஆமா என்ன விஷயம்? என்னைப் பாக்க உன் அத்தையோட வந்தியாமே...?''

''ஆமா முதலாளி'' -ராமானுஜம் இப்படி ஆரம்பித்து வந்த எண்ணத்தைச் சொல்லி நிறுத்தவும், நாராயண முதலாளியின் உதட்டில் செயற்கையான சிரிப்பு.

''ஒரு புடவைக்கு ஆயிரம் ரூபா தள்ளி கேக்கிறியே உனக்கே நியாயமா படுதா?'' என்று திரும்பிக் கேட்டார்.

ராமானுஜம் முகம் இலேசாக இறுகிற்று.

''நான் முதல்ல உனக்குப் புடவையையே விக்கிறதா இல்லை. அந்த மூணு புடவையும் என் மனைவி மக்களுக்கு. நல்லபடி முடிச்சு உடனே கொண்டுவா'' என்றார் சற்று அதட்டலாக.

ராமானுஜம் சோகமாக அங்கிருந்து நடக்க ஆரம்பித்தான்.

''நில்லு ராமானுஜம்.. அதுல ஒரு புடவை முகூர்த்தப் புடவை! வேலைப்பாடு நல்லா இருக்கணும். ஏனோ தானோன்னு இருக்கக்கூடாது. ஒரு கரை கண்ணுல பட்டாலும்கூட புடவையை வேணாம்னு சொல்லிடுவேன். பணத்தை நீ எண்ணி வெச்சாகணும். ராமானுஜம் தலை அதைக் கேட்டு அதிர்ச்சியோடு ஆடியது.

வீடு திரும்பிய ராமானுஜம் சொன்னதைக் கேட்டுக் கெங்கம்மாள் ஆடிப்போனாள். பத்மாவதி முகத்தில் ரத்தமே செத்து விட்டிருந்தது.

''போகட்டும் போப்பா... இந்தப் பட்டுப் புடவை இல்லேன்னாதான் செத்துடுவேனா... எல்லாம் நார்ப்பட்டு போதும் போ...'' -அவனைத் தேற்றப் பார்த்தாள்.

ராமானுஜம் வேறுவழியின்றி தன்னைத் தேற்றிக் கொண்டு அந்தப் புடவையை நெய்து முடிக்க ஆரம்பித்தான்.



சில நாட்களுக்குப் பிறகு...

நெய்து முடித்த புடவையைக் கெங்கம்மாள் ஆசையாகப் பார்த்தாள். முறைப்படி மடிக்காமல் தறி மரத்தில் அந்தச் சதுரக் கட்டையில் அது சுருண்டிருந்தது.

இனிதான் மடிக்க வேண்டும். அதற்கு முன் ஐந்து வட்டிக்குக் கல்யாணக் கடனாக ஒருவர் இரண்டாயிரம் தருவதாகச் சொன்னதை நம்பிக் அதை வாங்கிவரக் கிளம்பிக் கொண்டிருந்தான் ராமானுஜம்.

''அப்பா கடன் வாங்கியாவது எனக்குக் கல்யாணம் பண்ணணுமா?'' பத்மாவதிதான் இப்படிக் கேட்டவள்.

''நமக்கெல்லாம் வேற வழி ஏதும்மா?'' -ராமானுஜமும் திருப்பிக் கேட்டான்.

''எனக்குக் கல்யாணமே வேண்டாம்பா...''

''அப்படிச் சொல்லாத தங்கம்... இதெல்லாம் ஒரு தகப்பன் கடமை...''

பத்மாவதியின் கண்ணில் நீர் துளிர்த்துவிட்டது.

''உன் கல்யாணத்துக்காக ராவுபகல் பாக்காம அவன் நெசவு செய்ததுல காலெல்லாம் கொப்பளம்மா...'' என்று கெங்கம்மாள் வேறு இடையில் நுழைந்தாள். பத்மாவதிக்கு முள்குத்தின மாதிரி வலித்தது.

''அப்பா...'' -என்று அலறியபடி காலைப் பார்த்தாள். ஆனால் ராமானுஜம் அவளிடம் காலைக் காட்டாமல் நடக்க ஆரம்பித்து விட்டான்.

உள்ளே தாயின் இறுமல் சப்தம், தொடர்ந்து பத்மாவதியை அவள் அழைத்தாள்.

''அம்மா கூப்டையா?'' போய்க் கேட்டாள்.

''ஆமாண்டா கண்ணு... ஆமா அந்தப் பட்டுப் புடவை நெஞ்சு முடிஞ்சாச்சா, எப்படி வந்துருக்கு?''

"அதன் பின்புலம் தெரியாது அவளுக்கு. ஆர்வமாகக் கேட்டாள். என்ன பதில் சொல்வது இவளுக்கு?" பத்மா வதி மௌனமாக நின்றாள்.

"அருமையா வந்திருக்கு. உன் மகளைப் பட்டு உடுத்திப் பாத்தா அசந்து போயிடுவே..." கங்கம்மாள் எடுத்துக் கொடுத்தபடி வந்தாள். பத்மாவதியைப் பார்த்து ஏதோ சமிக்ஞை செய்தாள்.

நோயாளியான அவளிடம் எந்த நெருப்பான நிஜத்தை யும் பேசாதே என்பது போன்ற அந்தச் சமிக்ஞை பத்மா வுக்குப் புரிந்து போயிற்று.

"அப்படியா... பத்மா, பத்மா ஒரு தடவை அதை உடுத்திக்கிட்டு என் எதிர்க்க வாயேன். கண்குளிர நான் பாக்கணும்..." என்றாள் இருமலுடன் அவள் தாய்.

தூக்கி வாரிப் போட்டது பத்மாவதிக்கு.

ஆனால் கெங்கம்மாள் பதற்றப்பட்ட மாதிரி தெரிய வில்லை.

"போய் உடுத்திக்கிட்டு வா..." என்றாள் சாதாரணமாக.

"அத்தை அது நாராயண முதலாளியோடது..." -காதோரமாகப் பதறினாள் பத்மாவதி.

"இருக்கட்டுமே ஒரு தடவை கட்டிட்டு மடிச்சுக் கொடுத்தா தெரியவா போகுது? நாம நெஞ்ச புடவை இது. உடுத்திப் பார்த்தா ஒரு தப்பும் இல்லை..."

இருவரும் சேர்ந்து பத்மாவதியைப் பிடித்து தள்ளினர். ஒரு வழியாக உடுத்திக் கொண்டு தேவதை போல் எதிரே வந்தாள் பத்மாவதி.

ஆஹா என்ன அழகு?

இருவரும் மாய்ந்து மாய்ந்து போயினர்.

தாய்க்காரி ஆசையோடு தழுவிக் கொண்டாள். திடும் மென்று இருமல் பீறிட்டது. வாய் வழியாக ரத்தம் கொப்



பளித்துப் புடைவையின் தலைப்பை முற்றிலுமாக நனைத்தது.

பத்மாவதிக்குக் கால் நரம்பே அறுந்த மாதிரி ஆகி விட்டது.

"ஐயோ அத்தை... அஞ்சு வட்டிக்கும், பத்துவட்டிக்கும் அப்பா பணம் வாங்கப் போயிருக்காரு, இங்கு இப்படி ஆயிடிச்சே... இதுக்குப் பணத்துக்கு அவர் எங்கே போவாரு? என்னை கொல்லப் போறார்..." கத்தி விட்டாள் பத்மாவதி.

கெங்கம்மாளிடம் பதில் இல்லை. அவளும் திணறத் தொடங்கியிருந்தாள்.

தாய்க்காரியோ ஒன்றும் புரியாமல் இடைவிடாமல் இருமிக் கொண்டிருந்தாள்.

பத்மாவதியின் இதயம் காதை அடைப்பது போல் அந்தப் பட்டுப் புடைவையையே பார்த்தபடி துடிக்கத் தொடங்கி யிருந்தது. "சே... எப்படிப் எல்லாம் தகப்பனைக் கஷ்டப் படுத்துகிறோம்... இப்படி ஒரு பெண் ஜென்மமாய்ப் பிறந்திருக்கவே வேண்டாம்..." குமுறிற்று அவள் மனது.

பணம் வாங்கப் போன இடத்தில் எதிர்பாராத விதமாகத் தட்டுப்பட்டார் நாராயண முதலாளி.

அவரைப் பார்க்கவே ராமானுஜத்திற்குப் பிடிக்கவில்லை. ஆனால் நாராயண முதலாளியோ அவன் கோபத்தை வெகுவாக ரசித்தார். மெல்ல அருகே சென்று, "புடவை முடிஞ்சிருச்சா என்றார்.

"எல்லாம் முடிஞ்சாச்சு... வீட்டுக்குப் போய் மடிச்சு எடுத்து வந்து முதல்ல உங்க மூஞ்சியில விட்டெறிஞ்சிட்டு நான் வேலை பாக்கறேன்..." என்றான் கோபமாக அவன்.

"ஏன் என் மேல் இவ்வளவு கோபம்? என் புடவையை தானே நான் கேக்கிறேன்..."- என்றார் நாராயண முதலாளி.

''வாஸ்தவம்தான். நெய்ய மட்டும் நாங்க. உடுத்திக்கிறதெல்லாம் நீங்கதான். ஏழைக்கெல்லாம் பட்டு ஆசை வரலாமா என்ன?'' என்று ராமானுஜன் வெடித்தபோது அவனையறியாமல் அழுதே விட்டான். நாராயண முதலாளிக்கு, அதற்கு மேல் அவனைச் சோதிக்க பிடிக்கவில்லை.

உண்மையைப் போட்டு உடைத்த போது ராமானுஜத்திற்குத் தலைகால் தெரியவில்லை.

''முதலாளி... அந்தப் புடவை என் பொண்ணுக்கேவா? நிஜமாவா? ஒரு பைசா கூட உங்களுக்கு வேண்டாமா?'' -திக்கலும் திணறலுமாகக் கேட்டான்.

''ஆமாண்டா... அவளும் என் பொண்ணுதானே? நீ எதுக்கு வட்டிக்குக் கடன் வாங்கறே? நான் தரேண்டா வட்டியில்லாத கடன்.'' -என்ற அவரை நன்றிப் பெருக்கோடு கும்பிட்டு விட்டுச் சந்தோஷ வெள்ளத்தோடு வீட்டை அடைந்தவன் அப்படியே ஸம்பித்து நொறுங்கிப் போனான்.

பத்மாவதியின் கால் மாட்டில் அந்தப் பட்டு! அவள் உடலோ விரைத்துக் கிடந்தது. பத்மாவதி தற்கொலை செய்து கொண்டுவிட்டிருந்தாள்.

# 5. உயிர்ப் பரிசு

கடலை வயல்மேல் காற்று விளையாடிக் கொண்டிருந்தது. எலிப்பட்டாளங்களின் நமைச்சல் வேறு? மதர்த்த வேர்களாய்ப் பார்த்து சடை சடையாய் காய்த்துக் கிடக்கும் கடலைகளின் தொந்திகளை அநியாயத்துக்குச் சுரண்டிக் கொண்டிருந்தன அந்த எலிகள்.

தொலைவில் ஒரு வளையினுள் ஒரு எலியின் வால் மட்டும் வெளியே தெரிய, சுப்பிரமணிக்குக் கோபம் சிவுசிவு என்று அப்பளம் பொறிக்கத் தொடங்கியது.

ஓடிப்போய் அதன் வாலைப் பிடித்து இரத்தம் சொட்டும் அதைத் தூக்கியபடி நடக்கத் தொடங்கினான்.

சிக்கத்தா அதைப் பார்த்துவிட்டு ஓடி வந்தாள். "ஒண்ணக் கொன்னா வயலு தேறிடுமா? ஒராயிரம் இருக்குது உள்ள. அம்புட்டையும் மம்பட்டியால் அடிச்சுக் கொல்ல முடியுமா?" -கேட்டாள்.

இருவரும் பேசிக்கொண்டிருக்கும் சமயம் சிலேட்டுப் பலகையும் கையுமாக அவர்களின் செல்லச் சிசு வள்ளிப் பொன் அங்கு வந்தாள். ரத்தம் சொட்டியபடி துடிக்கும் எலியைப் பார்த்து விதிர்த்துப்போய் விழியை அகட்டித் திறந்தாள்.

"அப்பு... புள்ளையார் சாமி உன் கண்ணைக் குத்தப் போகுது பாரு..." -என்றாள்.

"ஏம் புள்ள...?"

''எலி அதோட வாகனமுல்ல?''

''ஏ.. அது மூஞ்சூறு புள்ள..''

''மூஞ்சூறு வேற, எலி வேறயா?''

''அக்காம்.. நீ போய் பாடம் படி, ஓடு.. ஓடு..''

''பாவம் அப்பு.. எலிக்கு எப்படி வலிக்கும், இனி அடிக்காதே.''

''எல்லாம் எனக்குத் தெரியும். நீ போய்ப் படி..''

வள்ளிப்பொன் உச்சு உச்சு கொட்டியபடியே அந்த இடத்தைக் கடந்தாள். மனதுக்குள் ரத்தம் சொட்டும் அந்த எலியின் உடல் எகிறி எகிறி விழுந்தது.

ரத்த நாளங்களை ஒருவகை பச்சாத்தாபம் புகுந்து தள்ளியது. தொலைவில் களத்துமேட்டை ஒட்டித் தெரிந்தது குடிசை. அதன் மேல் தாவி விளையாடும் சுரைக்கொடிப் பக்கமாய் நெடு நெடுவென்று வேப்ப மரம்! அதன் கீழே கழுத்தில் மணியோடு துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது வள்ளிப் பொன்னின் பிரியம் மிகுந்த ஆட்டுக் குட்டி.

அதற்கு அவள் வைத்த பெயர் பொன்னன்.

புசுபுசுவென்று உடம்பெல்லாம் நீலம் போட்டது போன்ற வெள்ளையில் மெத்தென்ற முடி. கேரட்டைச் சீவிச் செய்த மாதிரி இளம்சிவப்பில் கால்கள்.

கருந்திராட்சை கணக்காய் கண்கள். விடுவிடுவென்று துடித்தபடி இருக்கும் வாலும், கவிழ்ந்து போன காகிதக் கப்பல் போல தென்படும் காதுமாய் அது நிலம் மேல் ஆடிக்களிக்கும் விதமே தனி.

வள்ளிப் பொன்னுக்கு அதைப் பார்த்துவிட்டால் குஷி பீறிட்டுக் கொண்டு விடும்.

அட அதற்கும்தான் எத்தனை உற்சாகம்.

பின்னங்கால்களை மட்டும் தூக்கி ஒரு குதி குதித்து விட்டு கழுத்து மணி சப்திக்க அது வள்ளிப்பொன்னைச்



சுற்றிச் சுற்றி வரும். மடி மேல் ஏறி முன் காலைச் சரித்தபடி அமர்ந்து கொண்டு அவளை வேடிக்கை பார்க்கும். மனுஷ அன்பு இத்தனை மகத்தானதா என்கிற ஆச்சரிய விரிவை அதில் காட்டும்.

'எனக்கு பேசும் சக்தி இல்லை. இருந்தால் எனக்குத் தெரிந்து உனக்குத்தான் என் முதல் அர்ச்சனை' என்று சொல்லாமல் சொல்லும்.

அவள் கழுத்தோடு கட்டிக் கொள்வாள்.

பள்ளிக்கூடத்தில் விளையாடும் போது தன்னைச் சேர்த்துக்கொள்ள மறுத்த நண்பர்களின் உதாசீனத்தை அந்த அணைப்பில் மறப்பாள்.

பக்கத்தில் மாட்டுத்தொழுவம்! அதில் சக்தி என்னொரு பசுவும், சதாசிவம் என்றொரு காளையும் கட்டப் பட்டிருக்கும். (எல்லாம் வள்ளி வைத்த பெயர்தான்!) அதன் கழனித் தொட்டியைக் கழுவி நீரை நிரப்பி பொன்னுவைக் கொண்டு சென்று நீர் குடிக்க விடுவாள்.

''என்னா சதாசிவம் நல்லா புல்லு தின்னியா?'' -என்று அந்த காளையிடம் குசலம் விசாரிப்பாள். யார் வந்தாலும் மிரண்டு முட்டத் தயாராகும் அந்த முரட்டுக்காளைகூட வள்ளிப்பொன்னைக் கண்டால் அங்குசம் தொட்ட யானை போல் அடங்கிச் சுருண்டுவிடும்.

அவளின் கள்ளம் கபடமற்ற அன்பின் கதிர்களில் வசப் பட்டு வாலைச் சுருட்டி நிற்கும். சமயத்தில் நாவால் நக்கியும் கொடுக்கும்.

கலகலவென்று அதனால் உண்டான கூச்சத்தோடு வாய்விட்டுச் சிரிப்பாள் வள்ளிப்பொன்.

இன்றும் அதுபோல் ஒரு ஏகபோக சூழல்! ''என்னா சக்தி, ஒழுங்கா கழனி குடிச்சியா? என்னா சொல்றான். உன் புருஷன் சதாசிவம்? ஏய் பொன்னா ஒழுங்கா நில்லு. நீ குளிச்சு நாலு நாளாச்சு, வா பக்கத்து கவுண்டர் காட்டுல

மோட்டார் தண்ணி பாய்ச்சுது நின்னு குளிச்சிப்பிட்டு வருவோம்...'' -என்று குசலம் விசாரித்துவிட்டு பொன்ன னுடன் குளிக்கக் கிளம்பி விட்டாள். இடுப்பில் பானையும் நீருமாய் எதிரே வந்தாள் சிக்கத்தா.

''எங்கடி கிளம்பிட்டே?''

''சும்மா வெளிய..''

''சும்மாவா.. இல்ல, கவுண்டர் வீட்டு மோட்டார் தண்ணில விழுந்து அளப்பறை பண்ணவா?''

''ஆத்தா, பொன்னு ஒரே அழுக்கா இருக்குது அதான்.''

''பொன்னு.. பெரிய பொன்னு.. ஒரு நா அதை நான் வெட்டி உப்பு கண்டம் போடப் போறேன் பாரு. இப்படி ஆடுமாடுங்களோட அலையற சோலியெல்லாம் வேணாம். போய் படிக்கற வேலையைப் பாரு. ஆமா பள்ளிக்கூடத்துல ஒழுங்கா சோறு போட்டாங்களா?''

''போட்டாங்க'' -வள்ளிப் பொன் உடைந்த குரலில் பதில் சொல்லி விட்டு பொன்னனைப் பார்த்தாள்.

''ண்ணங்.. ணங்'' அது கழுத்து மணி சப்திக்க கிளம்பு என்றது.

''வேண்டாண்டா பொன்னு. ஆத்தா வய்யுது. நாளைக் குப் போகலாம்'' -என்றபடி நடந்தாள் அவள்.

மனதில் சிக்கத்தா சொன்னது ஊர்வலம் போனது.

''வெட்டிக் கூறு போட்டு...

வெட்டிக் கூறு போட்டு...'' -எதாலோ உந்தப்பட்ட மாதிரி பொன்னுவைப் போய் கட்டிக் கொண்டாள்.

திடீரென்று சில சிறுவர்கள் கூச்சலிடும் சப்தம்.

எட்டிப் பார்த்தாள். தொலைவில் வெங்கடாசலக் கவுண்டர் தோப்பில் அரை டிராயர் சிறுசுகளின் கூட்டம்.



எல்லோரும் சொல்லி வைத்த மாதிரி ஓட்டாஞ்சில்லை களை ஒரு நொணா மரம் மேல் எறிந்து கொண்டிருந் தார்கள்.

பக்கமாய் சென்று உற்றுப் பார்த்தாள்.

மரக்கிளை ஒன்றின் மேல் ஒரு ஓணான்.

''ஏன் அதை அடிக்கறீங்க?''

''அதுவா? அது நம்ம புள்ளையார் சாமிக்கு குடிக்க தண்ணி கேட்டப்போ இது ஒண்ணுக்கை பிடிச்சுக் கொண்டு போய் கொடுத்துச்சாம்; அதனாலதான்.''

''ஆரு சொன்னா?''

''எங்க பாட்டி.''

''அவரு எதுக்கு ஓணாங்கிட்ட தண்ணி கேக்கணும்?''

''அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. பாட்டி சொன்னிச்சு.''

''வேணாம் பாவம்.. அதுக்கு வலிக்கும்.''

''அதுக்கு வலிச்சா உனக்கென்ன?''

''நம்பளை மாதிரி தானே அதுவும்?''

''இல்ல. அது ஓணான். திமிறு பிடிச்சது. அப்படித்தான் அடிப்போம்.''

-அவர்கள் பேச்சோடு கூடி கற்களை பறக்கவிட, அந்த ஓணான் அசமந்தமாக அடிபட்டால்தான் அசைவேன் என்பதுபோல் வெறித்துக் கொண்டிருந்தது.

வள்ளிப்பொன் திரும்பி நடந்தாள்.

உலகமே தனக்கெதிராக நடக்கிற மாதிரி ஒரு பிரமை. அவளையும் மீறி, எல்லா உயிர்களும் தன்னைப் போல் தான் என்கிற உணர்வு உள்ளே எப்படியோ அரும்பியிருந் தது.

மற்றவர்களுக்கு இதெல்லாம் தெரியவில்லையா?

இல்லை தெரிந்துகொள்ள மறுக்கிறார்களா?

அவன் தனக்குள் புரிபடாமல் நின்ற சமயம் வீதியில் ஒரு கழுதை வாலில் டப்பாக்களைக் கட்டிவிட்டு யாரோ துரத்தி விட்டிருந்தார்கள். அது தடதடவென்று அவளைப் பயமுறுத்தியபடி கடந்து ஓடியது.

அதன் பின்னால் கேலிச் சிரிப்போடு சிலர்!

கொல்லையில் சதாசிவம் மாட்டை சுப்பிரமணி அவிழ்த்துக் கொண்டிருந்தான். வாசலில் மாடு வெட்டி உளியன் நின்று கொண்டிருந்தான். சுப்பிரமணி அவிழ்க்கும் மாட்டைப் பார்த்துவிட்டு "என்னண்ணே ரொம்ப கிழடு தட்டிப் போச்சே.. தோலும் கறியும் ரெண்டு நூறு போகும் அவ்ளோதான்!" - என்றான்.

"வெட்டியா இதுக்கு வெக்கலைப் போட்டு, கழனி காட்டிச் செலவழிச்சு கிட்டு இருக்கிறதுக்கு ஏதோ இரண்டு நூறு வந்தாலும் சரிதான்" என்றான் சுப்பிரமணி.

உளியன் சதாசிவத்தைப் பத்திக் கொண்டு அகல, அதை பார்த்த வள்ளிப்பொன் சுப்பிரமணியை வெறித்தாள்.

"அப்பா சதாசிவம் எங்க போகுது."

"உம்.. அதோட மாமியார் ஊட்டுக்கு."

"எங்கப்பா போகுது?"

"அடிமாட்டு கொட்டாரத்துக்கு புள்ள. நீ எதுக்கு இதைக் கேக்கறே.."

"அப்ப நம்ம சதாசிவத்தை அந்த உளியன் கொன்றுவானா?"

"பின்ன அடி மாட்டை என்ன கொஞ்சுவாங்களா?"

"பாவம்பா சதாசிவம்."

"பாவமாவது பறங்கிக்காயாவது. போ புள்ள அப்பால."

"வேணாம்பா, சதாசிவம் நல்லவன்பா.."



"ஏய்... உன்கூட பெரிய ரோதனையா போச்சே. சின்னப் பிள்ளையா லட்சணமா போய் பாடம்படி போ."

"நீ சதாசிவத்தைத் திரும்ப கூப்பிடுப்பா."

"அத்த வித்தாச்சு. அது ஒண்ணுக்கும் உதவாத மாடு புள்ள. வயசாயிருச்சு."

"அப்ப உனக்கு வயசானாலும் நாங்க உன்னை வெட்டலாமா?" எப்படியோ அந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டாள் வள்ளிப்பொன். அவனுக்கும் நெற்றியில் சுட்டது அந்தக் கேள்வி.

ஒரு வினாடி திணறிப் போய் விட்டு வாய் திறந்தான்:

"நாம மனுசங்க, அதுங்க ஆடு மாடுங்க. ரெண்டு பேத்துக்கும் வித்யாசம் இருக்கு புள்ள."

-வள்ளிப் பொன்னுக்கு அதற்கு மேல் கேள்வி கேட்கத் தெரியவில்லை. சதாசிவத்தை எண்ணி ஏனோ மனது கலங்கியது. அது நின்று கொண்டிருந்த தொழுவப் பகுதி வெறுமையாக இருந்தது. அப்படியே போய் திண்ணை மேல் விழுந்தாள். மணி குலுங்க பொன்னன் வந்தான். சோகமாகத் தென்படும் வள்ளிப்பொன்னைப் பார்த்து விட்டு அவனும் சோகமானான்.

ஏனோ வள்ளிப்பொன்னின் உடம்பில் உஷ்ணம் அலை மோதத் தொடங்கியது. சிக்கத்தா எதார்த்தமாகப் பார்த்தவள் நெருங்கி வந்து நெற்றியில் கை வைத்துப் பார்த்து விட்டு விதிர்த்துப் போனாள்.

"அடி ஆத்தி...ஜொரம் இப்படி கட்டு விட்டுத் தெரிக்குதே." -என்றபடி கஷாயம் போட்டு எடுத்து வந்தாள்.

"தண்ணிய கண்டா எறங்கி அளப்பறை பண்ணுனா இப்படித்தான் காச்ச வரும். தட்டுவாணி இனியாச்சும் சொன்ன பேச்சு கேளு." -என்றாள்.

இரண்டு நாள் சென்றுவிட்டது.

காய்ச்சல் வற்றவில்லை. சுப்பிரமணி போய் நாட்டு வைத்தியரை அழைத்து வந்தான். அவர் சூரணம் தந்து பார்த்தார். ஊஹூம் மசியவில்லை.

"எலே சுப்பிரு.. இது விஷக் காச்சலு. டவுனு பெரிய ஆஸ்பத்திரிக்கு எடுத்துகிட்டுபோ.."- என்றார்.

சுப்பிரமணியும், சிக்கத்தாவும் பதறிப் போனார்கள்.

"நம்ம ஊர் சுடலைமுனிக்கு நேர்ந்துக்குங்க. எல்லாம் சரியாயிடும். அடுத்த வாரம் திருவிழா ஆரம்பமாகுது. சக்தி மிகுந்த சாமி நம்ம முனி. அதுக்கு ஒரு ஆட்டையோ மாட்டையோ பலி போடுங்க. எல்லாம் சரியாயிடும்."

-வைத்தியர் எடுத்துக் கொடுக்க சுப்பிரமணி கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

"அதுக்கென்ன செஞ்சிட்டா போச்சு. என்கிட்டகூட ஒரு ஆட்டுகுட்டி இருக்குது. அதையே வெட்டிப் போட்டுட்றேன்." -காய்ச்சல் வேகத்திலும் அந்த வார்த்தைகள் வள்ளிப்பொன் காதில் திராவகமாய்ப் பாய்ந்தன.

"அப்பு வேணாம் அப்பு... என் பொன்னுவை ஒண்ணும் பண்ணிடாத அப்பு. வேணாம் அப்பு." -உதடு தந்தியடிக்கப் பதறினாள் அவள்.

-சுப்பிரமணி அதை லட்சியமே செய்யவில்லை. தூக்கிக் கொண்டு டவுன் ஆஸ்பத்திரிக்குக் கிளம்பினான்.

ஆஸ்பத்திரியில்...

"சதாசிவம்.. பொன்னு. சதாசிவம் பொன்னு... டேய் அந்த ஒணானை அடிக்காதீங்கடா! அதுக்கு வலிக்கும்" காய்ச்சல் வேகத்தில் வள்ளிப் பொன் உளறுவதில் ஏதோ ஒரு அர்த்தமிருப்பதாகப் பட்டது டாக்டருக்கு."

"யாரு இந்த சதாசிவம்? பொன்னு" -டாக்டர் கேட்டார்.



"ஒண்ணு கிழட்டு மாடு! இன்னொண்ணு குட்டி ஆடு!"

"புரியலை எனக்கு..."

"இது ஒரு பொச கெட்ட புள்ள டாக்டர். எங்கிட்ட ஒரு ஆடும், மாடும் இருக்குது. அதுக்கு இது பேர் வெச்சு கூப்பிடும். அதுங்கன்னா இதுக்கு உசிரு! அந்த சதாசிவம் மாட்டை அடிமாடாக்கிட்டேன். ஆடு மட்டும்தான் இருக்குது. அதையும் அடுத்த வாரம் சுடலைமுனிக்குப் பலி கொடுக்கப் போறேன்.."

-சுப்பிரமணி பாதி சொல்லும் போதே டாக்டருக்கு மீதம் புரிந்து போனது. வள்ளிப்பொன்னின் மனது இயற்கையாகவே கருணை மனதாக அமைந்துவிட்டதிலிருந்து, அது அந்த ஜீவன்களின் பிரிவை முன்பே உத்தேசித்து பயத்தால் ஜுரவயப் பட்டுவிட்டதாக மிகச்சரியாகக் கருதியவர், சுப்பிரமணியைத் தனியே அழைத்துச் சென்று பேசினார்.

"தோ பாருங்க... உங்க பொண்ணு காய்ச்சலுக்கு அதுக்கு ஏற்பட்டிருக்கிற மன பாதிப்புதான் காரணம். பிராணிகள் கிட்ட அது அன்பா இருக்கறதுல உங்களுக்கு என்ன கஷ்டம்?"

"எனக்கு ஒண்ணுமில்லீங்களே..!"

"அப்ப அதை அதும்போக்குல விட்டுடுங்க. சிறு வயசுல மனுச மனசு ஒரு ஆத்தோரத்து பூமி மாதிரி. நல்லதோ கெட்டதோ எதுவானாலும் கெட்டியா பிடிச்சுக்கும். அதனால சொல்றேன். உங்க பொண்ணுக்கு இயல்பாவே மென்மையான மனசா இருக்கு. அன்பு, கருணைங்கற விஷயங்க, அபூர்வமாயிட்டு வர்ற இந்த நாள்ல உங்க பொண்ணு ஒரு அதிசயம். அது எதுக்க நீங்களே முரட்டு காரியங்கள்ளாம் பண்ணாதீங்க..."

"அப்படீன்னா?"

"இந்த ஆடு, மாடு வெட்றது மாதிரி விஷயங்களைச் சொல்றேன்."

''அது எப்படிங்க முரட்டுக் காரியம் ஆகும். ஆடும் மாடும் நாம தின்னத் தானே?''

''இது ரொம்ப சிக்கலான கேள்வி. ஆடு மாடைத் தின்னுத்தான் ஜீவிக்கணும்கற கட்டாயத்துல நாம இல்ல. பூமியில் ஆயிரம் பயிர் விளையுது- உங்ககிட்ட பேச எனக்கு நேரமில்லை. உங்க குழந்தையை நீங்கதான் கவனமா வளக்கணும். அதுங்களோட மனசு பூ மாதிரி. நல்லதைச் சொல்லியும் காட்டியும் வளக்கணும், நாமளே நம்ம அறியாமையில் கெடுத்துடக்கூடாது.''

-டாக்டர் பேசிவிட்டுப் போய் விட்டார். சுப்பிரமணி வள்ளிப் பொன்னைப் பார்த்தான். அவள் டாக்டர் போட்ட ஊசியில், ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். உதட்டு உளறல் அடங்கியிருந்தது.

அந்த பிஞ்சு முகம் அவனை என்னவோ செய்தது. ஒரே பெண். பாசம் மனசைப் பிசைந்து வலிக்க விட்டது. உலகமே இந்த மாதிரியான உயர்ந்த உணர்ச்சிகளால்தான் ரசமுள்ளதாக இருக்கிறது என்பது மெள்ளப் புரிய ஆரம்பித்தது. இதெல்லாம் இல்லாத மனிதன் பாறை போல் இறுகிப் போனவன், மிருகம் போல் சிந்தனை அற்றவன் என்பது வரை எண்ணம் மேவியது. அப்படியே அமர்ந்து வள்ளிப்பொன்னின் தலையைக் கோதிவிட்டான். ஜுரம் குறையத் தொடங்கியிருந்தது.

டும். டும்- சட்டிப்பானை சப்திக்க ஊரைச் சுற்றிவந்து கொண்டிருந்தான் வப்பாளத்தான்.

''வார பங்குனி மொத நா நம்ம சுடலை முனிசாமிக்கு திருநா ஆரம்பமாவுது. ஒரு வாரம் கோலாகலமா திருநா நடக்கப் போவுது. அக்னிமெதி, கடாவெட்டு ரவையில கூத்து அம்புட்டும் உண்டு.



ஊர் மக்க எல்லை தாண்டாம கங்கணம் கட்டி சுடலை முனி அருளுக்கு உள்ளாவணுமின்னு நாட்டாமை நடராச கவுண்டர் உத்தரவு. டும்.. டும்..''

-புழுதி பறக்கும் வீதியில் அவன் அப்பால் அகல, மாவிலை தோரணம் மேலேறிக் கொண்டிருந்தது. ஊர் முழுக்க பரவசம் பரவ ஆரம்பித்திருந்தது.

சுப்பிரமணி வயல் வேலை முடிந்து வந்து கொண்டிருந்தான். எதிரே தென்பட்டார் வைத்தியர்.

''எலே சுப்புரு எப்படிடா இருக்கு உன் மவ உடம்புக்கு?'' -கேட்டார்.

''இப்ப தாவலை. இருந்தும் ஜுரம் இருந்துகிட்டிருக்கு.''

''கவனமாக பாத்துக்க, ஆமா சுடலை முனிக்கு நேர்ந்து கிட்டியா?'' -சுப்ரமணி அரை மனதாக தலையை ஆட்டினான்.

''நேர்த்திக்கடனைப் பாக்கி வெக்காதேடா... நம்ம சாமி பொல்லாத சாமி; அப்புறம் நம் பொண்ணு ரத்தம் கக்கி செத்துப் போவா...''

-பயமுறுத்திவிட்டுப் போய் விட்டார் அவர். சுப்பிரமணி சஞ்சலத்துடன் வீடு திரும்ப பொன்னு விளையாடிக் கொண்டிருக்க, பொன்னுவை உற்றுப் பார்த்தான் சுப்ரமணி. அது வள்ளிப் பொன்னே உலகம் என்கிற மாதிரி குதூகலத்தில் தென்பட்டது. அவன் முகம் வாடிப் போனது. வாட்டம் பார்த்து சிக்கத்தா கேட்டாள்.

''ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?''

''சுடலைமுனி திருநா ஆரம்ப மாயிடுச்சு, அதான்..''

''சந்தோஷமுள்ள படணும் அதுக்கு.?''

''ஆனா பொன்னுவைப் பலி போடணுமே..''

''பொன்னு என்ன- பொன்னு நம்ம வள்ளிப் பொன்னா?''

"நீ டவுனு டாக்டர் சொன்னதைக் கேக்கலியா?"

"அவரு ஆயிரம் சொல்வாரு. நம்ம சாமி சக்தி நமக்குத் தானே தெரியும்?"

"வாஸ்தவம்தான். நம்ம பொண்ணுக்குத் திரும்பவும் பெரிசா காச்ச வந்தா?"

"எல்லாம் முனுசாமி விபூதி போட்டா பறந்துடும். இதுக்குதானா இத்தினி கவலை?"

"வள்ளி சம்மதிக்குமா?"

"அது கிடக்குதய்யா சின்னப் பொண்ணு. கிழக்கு மேற்கு தெரியுமா அதுக்கு. அழுது அடம் பிடிச்சா இன்னொரு ஆட்டுக் குட்டி வாங்கித் தந்துட்டா போச்சு."

"கிழக்கு மேற்கு தெரியற நாம பண்றதும் ஒண்ணும் சரியில்லை சிக்கத்தா. பாவம் ஒரு உசிரு!"

"அட ஏய்யா இப்படி மாறிப்போனே.. சாமி விஷயம்யா, புலம்பாம காரியத்தைப் பார்."

படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள் வள்ளிப் பொன். வாய்க் கசப்பும், ஜுர வேகமும், உடம்பைச் சளைத்துக் கொண்டிருந்தன. தலைமாட்டில் சிக்கத்தா.

"ஆத்தா அப்பா எங்க?"- ஈன சுரத்தில் கேட்டாள்.

"திருநா இல்லியா... அதான் சாமி கும்பிடப் போயி ருக்கு.."

"எம் பொன்னு...?" -தன் சினேகிதனைப் பற்றிக் கேட்கவும் சிக்கத்தா முகம் மாறிப் போனது.

"அது மேச்சலுக்குப் போயிருக்கு..." -தடுமாற்றத்துடன் ஒரு பொய்யை சிக்கத்தா சொல்ல, அந்தப் பிஞ்சுக்கு உடனே அது புரிந்து போனது. மார்புக் கூட்டில் வெட்டி வெட்டி இழுத்தது விக்கல் கலந்த விசும்பல்.



"ஏ அழுவாத புள்ள.. ஒரு ஆட்டுக்குப் போயி உயிரை எடுத்துக்கிட்டு.."

"ஏ ஆத்தா பொன்னுவை வெட்டிப் புடுவாங்களா? நா பென்சில் சீவையில என் கையை பிளேடு அறுத்து ரத்தம் வந்திச்சே, அந்த மாதிரி ரத்தம் வருமா? ஐய்யோ வலிக்குமே ஆத்தா- பொன்னு பாவம் ஆத்தா..."

-வள்ளிப்பொன் சிலிர்ப்போடு புலம்ப, சிக்கத்தா தலையில் கை வைத்துக் கொள்ள ஆரம்பித்தாள்.

மஞ்சள் நீர் பட்டு உடம்பைச் சிலிர்ப்பி விட்டுக் கொண் டான் பொன்னு. கழுத்தில் அலறிப்பூ மாலை. பக்கமாய் உடுக்கை சப்தம். சுற்றிலும் ஊர் ஜனம். பூசாரியின் கையிலும்கூட பளபளப்பான அரிவாள். பொன்னுவைப் போலவே பல ஆடுகள் வேறு! எதிரே மிரட்டும் கோழி முட்டை விழிகளோடு முனுசாமி. பொன்னுவின் பக்கத்தில் பயபக்தியோடு சுப்பிரமணி நின்று கொண்டிருந்தான்.

பூசாரி பக்கமாய் வந்து வேறு ஒரு குட்டி ஆட்டின் வயிற்றில் வாளை வைத்து ஒரு கீறு கீற.. அந்த ஆட்டுக் குட்டி அலறிப் புடைத்தபடி ஓடத் தொடங்கியது. கோயி லைச் சுற்றி வட்டம் கூட்டி நிற்கும் மனிதக் கூட்டத்தைப் பார்த்துத் தப்பிக்க வழியின்றி கோயில் சுவற்றைச் சுற்றி வந்து ரத்தம் சொட்ட ஓரிடத்தில் விழுந்து கண்கள் செருக துடிக்க ஆரம்பித்தது. பொன்னு அவ்வளவையும் பார்த்து வெறித்தது. எங்கள் பிறப்புக்கே இயற்கை மரணம் கிடை யாதா? என்கிற தவிப்பு அதனிடம் தென்பட்டது. கூட்டம் பரவசமாய்ப் பார்த்தது.

முனுசாமிக்கோ எல்லாம் புதிராக இருந்தது.

தன் பெயரை வைத்து நடக்கும் இந்த மாதிரி செயல்களில் அவருக்கு உடன்பாடா இல்லையா என்பது தெரியாத முழிப்பு முனுசாமியிடம்..

"பாத்தியா அது முனுசாமியைச் சுத்தி வந்ததை?"

-கேள்வியோடு கன்னத்தில் போட்டுக் கொண்டாள் ஒருத்தி.

இதற்குள் குடல் வெளியே தள்ளவும், ஒரு வழியாக அதன் பிராணன் அடங்கவும், அந்த குடலை எடுத்து பூசாரி மாலையாகப் போட்டுக் கொண்டு சாமி ஆட ஆரம்பித்தான்.

பிரசாதத்துக்கு எல்லோரும் மண்டி போட விபூதியை அள்ளி வீசினான். அருள்வாக்கு என்று ஏதேதோ சொன்னான்.

சுப்பிரமணி கையிலும் விபூதி வந்தடங்கியது. அவனும் அருள்வாக்கு கேட்டான்.

"சாமி எம்மக மேலுக்கு முடியாம அவதிப்படுது. ஒரே காச்ச.. விஷக்காச்சலு- பொழக்கறது சிரமம்னுட்டான் வைத்யன்."

"பலியை முதல்ல போடு. அப்படியே இந்த விபூதியைக் கொண்டு போய்ப் பூசு. ஒட்டப் பந்தயக்காரன் மாதிரி எழுந்து ஓடுவா. பயப்படாம போ.."

அதைக் கேட்க மனது நிறைந்த மாதிரி ஆனது சுப்பிரமணிக்கு. பொன்னனைப் பார்த்தான். அது பூசாரியின் செயலைப் பார்த்து மிரண்டு போயிருந்தது. அப்பொழுதே அங்கே திடும் மென்று சிக்கத்தாளின் பிரவேசம்!

"ஏனுங்க" -அவள் குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான் சுப்பிரமணி.

"பொன்னனைக் பலி போட்டீங்களா?"- வேகமாக கேட்டாள்.

"இல்ல.."

"நல்லவேளை. பொன்னனைத் தூக்கிட்டு ஓடியாங்க. நம்ம பொண்ணு மூச்சுக்காத்து முட்டி மோதிக்கிட்டு இருக்கு."



"ஐயோ... சாமி கோவிச்சுக்குமே.."

-மொதப்புள்ளைய காப்பாத்துவோம். பொறகு பலி போடுவோம். அது பொன்னு பொன்னுன்னு புலம்புது."

அவர்கள் உடனேயே பொன்னனை அள்ளிக்கொண்டு திருவிழாக் கூட்டத்தைக் திருகியபடி வீட்டை எட்டினார்கள். பொன்னன் குடிசையைப் பார்த்த மாத்திரத்தில் சுப்பிரமணி கையில் இருந்து பாய்ந்து குதித்து உள்ளே ஓடினான்.

அவிழாத அலறி மாலையோடு மஞ்சள் நீரின் வண்ணத் திப்பிகளோடு ஓடிய பொன்னன் படுக்கையில் தகித்த படி கிடக்கும் வள்ளிப்பொன்னை எட்டி தன் நாவால் வருடத் தொடங்கியது. மெள்ள கண் விழித்து பார்த்தாள். வள்ளிப் பொன் கண்களில் பரவசமான பரவசம்.

"பொன்னு உன்னை வெட்டலியா?" -உதடு நடுங்கக் கேட்டாள்.

"உன் அன்பு என்னை வெட்டவிடலை வள்ளி..." -என்று அது காதைச் சாய்த்து பேசாமல் பேசியது.

முடியாத நிலையிலும் எழுந்து அதன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். அதன் கண்ணாடி விழிகளில் நீரின் பனிப்பு.

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?"

வினாடிகள் நிமிடங்களாக, நிமிடங்கள் மணிகளாக வள்ளிப்பொன்னின் உடல்நிலையில் அபார மாற்றம். உஷ்ணம் ஓடிப் போய் விட்டிருந்தது.

சகஜ நிலையில் திகட்டவில்லாத ரத்த ஓட்டம் தொடங்கிட அவளைத் தொட்டுப் பார்த்த சிக்கத்தாளுக்கு வியப்பான வியப்பு.

"என்ன ஆச்சரியம் பாருங்க. மாத்திரை மருந்துக்குக் கட்டுப்படாத உடம்பு, இந்த பொன்னனைப் பார்த்ததும் மாறிடுச்சே.."

"ஆமா புள்ள என்ன அதிசயம். அதுசரி வள்ளிதான் நிமிந்துட்டாளே. பொன்னனைப் பலிக்கு எடுத்துப் போவோமா?" சுப்பிரமணி தயங்கித்தான் கேட்டான்.

சிக்கத்தாளிடம் ஒரு நீண்ட மௌனம்.

"ஆமா பலி போடாட்டி என்ன ஆகும்?" -மெல்லிய குரலில் கேட்டாள்.

"சாமி கோவிச்சுக்கும்.."

"சரி கோவிச்சா என்னா நடக்கும்..?"

"ஆருக்கு தெரியும். நடக்கக் கூடாததெல்லாம் நடக்குமோ என்னவோ.."

"அத இன்னமும் நீங்க நம்பறீங்களா...?"

"நம்பாம என்ன பண்ண..?"

"ஜீவனைக் கொடுக்க வந்த ஆட்டுக்குட்டியாத்தான் அது எனக்கு படுது. அது ஜீவனை நாம எடுக்க வேண்டாம். அப்படி எடுத்தாத்தான் நடக்கக் கூடாததெல்லாம் நடக்கும்..." -சிக்கத்தாளின் தீர்க்கம் சுப்பிரமணியைப் பெரிதாகப் பாதித்தது.

ஊடே பொன்னன் ஓடி வந்தான். பின்னாலேயே அவனைப் பிடிக்க வள்ளிப்பொன் ஓடி வந்தாள். இருவரும் வாசல் பக்கம் ஓடினார்கள். தூய கலப்பில்லாத அந்த அன்பு விளையாட்டை ஒரு வினாடி ஊன்றிப் பார்த்தவன், முனுசாமியை முதலில் மறந்தான். பிறகு தன்னை. அதற்கும் பிறகு உலகத்தை என்று சர்வத்தையும் மறந்தான்.

அன்பின் ஒரு புதிய பரிமாணத்தில்.. அரக்கம் விலகிய அந்த இடத்தில் முதல் தடவையாக ஒரு வாயில்லா ஜீவன், மானுட அன்பு ஒன்றில் இரண்டறக் கலந்து கொண்டிருந்தது.

# 6. கடவுள்?

விஸ்வத்தைப் பார்த்தபோது குமாரதாசுக்கு அதிர்ச்சியாக இருந்தது. பட்டையும் கொட்டையுமாக சபரிமலைக்கு மாலை போட்டிருந்தான். கருப்பு வேட்டி, காலிலும் செருப்பு இல்லை. கன்னத்தில் முதல்நாள் மழையில் மறுநாள் முளைத்த மாதிரியான புற்களைப் போன்ற இளம் தாடி!

குமாரதாசின் நெஞ்சில் அதிர்ச்சிகளை ஏராளமாகவே ஏற்றினான் விஸ்வம்.

''டேஸ் விஸ்வம்... என்னடா இது வேஷம்?''

''குமார்... நான் இப்ப சாமி! மரியாதையா பேசு.''

''அதெல்லாம் சாமி உண்டுன்னு சொல்றவங்களுக்கு தானேடா? உன்னளவுல இந்த பூமி சூரியனோட ஒரு ஒளிச்சிதறல். காத்து தண்ணியெல்லாம் அந்தச் சிதறலுக்குள்ள இருந்து வந்த சமாசாரங்கள் அவ்வளவுதானே?''

குமாரதாஸ் விஸ்வத்தின் இருபது வருஷத்து கடவுள் மறுப்பை நாலு வரியில் சொல்லி, அவனை வளைத்துக்கட்டி விட்டான். ஆனால் விஸ்வம் அதற்கெல்லாம் அயர்ந்த மாதிரி தெரியவில்லை.

''டேய், இது ஒரு டீல்டா... உனக்கே தெரியும். நான் நல்ல வேலை இல்லாம கஷ்டப்படறது. என்ன பண்றதுன்னு

தெரியாம குமைஞ்சுகிட்டு இருந்தப்பதான் நம்ம பாஸ்கர் எனக்கு இந்த ஐடியாவைக் கொடுத்தான்...''

''சபரிமலை விரதம் உனக்கு நல்ல வேலைக்கான ஐடியாவா?''

''அப்படிங்கறது அவனோட நம்பிக்கை. நான் இப்ப ஒரு பரிசோதனைக்காக இதை அடாப்ட் பண்ணிகிட்டு இருக்கேன். நீ ஐயப்பனுக்கு மாலை போடு. நல்ல படியா விரதம் இரு. அப்புறம் பாரு. உனக்கு வேலை கிடைக்குதா இல்லையான்னு... லட்சக்கணக்குல மலைக்குப் போயிட்டு வர்றவங்கல்லாம் என்ன கிறுக்கனுங்களா? ஐயப்பனைப் பிடி... உனக்கு பிடிச்ச நடிகரான ரஜினியிலிருந்து அமிதாப் வரை எல்லாரும் ஐயப்ப பக்தர்கள்தானேன்னு கேட்டான்... சரி. ஒரு தடவை போய்தான் பார்ப்போமேன்னுதான்...''

விஸ்வம் பேசியதிலிருந்து அவன் மாறவில்லை, மாற்றப் பட்டிருக்கிறான் என்பது குமாராதாசுக்கு விளங்கியது.

''இப்ப தாண்டா புரியது!''

''என்னடா?''

''சபரிமலைக்கு ஏன் இவ்வளவு கூட்டம்னு... சாமி மனுஷனைச் சோதிக்கும்னு கேள்விப்பட்டிருக்கேன். ஆனா, சாமியையும் மனுஷன் சோதிக்க முடியும்ங்கறத நான் இப்ப உன்கிட்டதான் பாக்கறேன்.''

குமாரதாசிடம் கொஞ்சம்போல அனல் மூச்சு.

''நீ ஏன்டா பெருமூச்சு விடறே... ஐயப்பன் இருந்தா நிச்சயம் நான் உணர்ந்துட்டுப் போறேன். இல்லாட்டி மனுஷ சக்திதான் உலகத்துலயே பெருசுன்னு நான் பலகாலமா சொல்லிகிட்டிருக்கறத நீங்க கேட்டுட்டு, இந்த வேஷத்தை நீங்க போடறத விடப்போறீங்க. அவ்வளவுதான்.''

விஸ்வம் பேச்சில் ஒரு சர்வ அலட்சியம். ஒரு கடையில் இல்லை என்று சொன்ன சாமானை, அடுத்த கடையில்



போய் கேட்டு வாங்கிக் கொள்வது போல, ஒரு சாதாரண விஷயமாகக் கருதிப் பேசினான்.

இறைபக்தி என்பது நம்பிக்கையைப் பிரதானமாகக் கொண்டது. இவனிடமோ அது துளிகூட இல்லை. இவன் எப்படி அந்த சாமியை உணர முடியும். நாற்பது வருஷமாக மலைக்குப் போய் வரும் தன் மாமாவின் முகம் குமார தாசுக்குள் முந்தியது. அவர் போடும் சரண கோஷம் தெரு முனைக்குக் கேட்கும். வீட்டில் பூஜை முடிந்து இருமுடியைத் தூக்கி தலையில் வைத்தால். அந்த இருமுடியை சன்னிதானத்தில்தான் கீழே இறக்குவார். அப்படி ஒரு பக்தி... அப்படிப்பட்டவராலேயே ஐயப்பனைக் காண முடியவில்லை.

''என் பாவக் கணக்கு இன்னும் தீரலை போல இருக்கு. அவன் எனக்குக் காட்சி தர மாட்டேங்கிறான்'' என்றுதான் புலம்பிக் கொண்டிருக்கிறார்.

இப்படி குமாரதாசின் மாமாவை எல்லாம் அந்த மலை பார்த்தாகிவிட்டது. அதுவும் லட்சக் கணக்கில் கோடிக் கணக்கில்... யாருமே ஐயப்பனைப் பார்த்த மாதிரியே தெரியவில்லை. இருந்தாலும் கூட்டதுக்குக் குறையில்லை. வருஷா வருஷம் ஏறிக்கொண்டேதான் போகிறது.

ஒரு நாளில், 'ஒரு நண்பர் வீட்டுக்குப் போயிருந்தேன். அங்கே நம் எம்.பி. வந்திருந்தார். நன்றாக மனம் விட்டுப் பேசினார்' என்று, குமாரதாஸ் தன்ஆபீஸ் சகாவிடம் சொன்னதையே அவன் நம்பவில்லை.

''எம்.பி. இவனைப் பார்த்து பேசினாராம்...! காதுல பூ சுத்தறான் பார்...'' என்று இளக்காரச் சிரிப்பு சிரித்தான். நடக்க முடிந்த ஒரு விஷயம்தான் அது. அதையே நம்ப அந்த நண்பன் தயாராக இல்லை. மனிதர்கள் இன்று இப்படித்தான் இருக்கிறார்கள். எல்லாரிடமுமே ஒரு சந்தேகம் இருந்துகொண்டேதான் இருக்கிறது. சமயங்களில் அது

அவர்களது நிழலைக்கூட விகாரமாகக் கருதி பயந்துபோய் விழுகிறது... இப்படிப்பட்ட மனிதர்கள் எப்படி திருப்ப திக்கும், சபரிக்கும் கோடிக்கணக்கில் போகிறார்கள் என்பதும் விளங்கவில்லை.

தெருமுனையில் இருக்கும் பார்பர்ஷாப்புக்குள்கூட டூவீலரில் போகுமளவு சொகுசாகிப் போனவர்கள் இருமுடி களைச் சுமந்து கொண்டு இருநூறு, முந்நூறு மைல் பயணிப்பதை எல்லாம் எந்தக் கணக்கில் எடுத்துக் கொள்வது என்றும் தெரியவில்லை.

இந்த மாதிரி சிந்தனைகளின் போதெல்லாம் தான் விஸ்வம் மாதிரி நபர்கள் கோல் போடுகிறார்கள்.

''உலகத்துலயே ஒரு இரண்டும் கெட்ட சமூகம் ஒண்ணு உண்டுன்னா அது இவங்கதாண்டா.'' என்றபடியே ஒரு தம்மைப் பத்தவைத்து அவன் ஒரு ஊது ஊதும்போது குமாரதாசுக்கு ஏறி மிதிக்கலாமா என்று இருக்கும்.

ஆனாலும், அவன் கேட்பதிலும் நியாயம் இருப்பதால் மனதுக்குள் புழுங்கத்தான் முடியும். இந்த முறை அந்த மாதிரி கேள்வி கேட்கும் ஒரு நபர் களப்பரிசோதனைக்கே தயாராகி விட்டான். என்ன நடக்கப் போகிறதோ?

பம்பை!

மலைகளுக்கு நடுவில் தொட்டிபோல் இருந்த அந்த நிலப் பரப்பில் நிலம் தெரியாதபடி மனிதத் தலைகள்... அவ்வளவு தலையிலும் இருமுடி. அது இருமுடியாகத் தெரிய வில்லை. ஐயப்பனிடம் சுமந்து வந்து கொடுத்துவிட்டுப் போகவந்த அவர்களின் வாழ்க்கைச் சுமைகளாகத்தான் தெரிந்தது.

விஸ்வமும் அந்தக் கூட்டத்தில் இருந்தான். ஒருவரை எதிர்பார்த்துக் காத்திருப்பவரைப் போலவே இருந்தது



அவன் முகபாவம். கூடவே பாஸ்கர்! அவ்வப்போது சரண கோஷம் போட்ட குமாரதாஸ். பாஸ்கர் இருவரும் விஸ்வத் தையும் கோஷம் போடச் சொன்னார்கள்.

''ஐயப்பன் என்ன செவிடா ஊமையா? எதுக்குடா இப்படிக் கத்தறீங்க? பக்தின்னா ஒருபக்கம் அமைதின்னு சொல்லிட்டு இங்க ஆர்ப்பாட்டம் பண்றீங்களே?'' என்று பேசி வாயை அடக்கிவிட்டான். அப்படியே சுழலில் ஊடுரு விக் கொண்டே இருக்கிறது பார்வை. குமாரதாசும் கவனித்துக் கொண்டே வந்தான்.

''என்னடா... யாரைத் தேடறே.''

''ஐயப்பனைத்தான்...''

''இந்தக் கூட்டத்துலயா?''

''அப்ப உன் வரையில அவர் இங்க இல்லையா?''

விஸ்வம் கேட்கும் தொனியே சரியில்லை. குமார தாசுக்கு அவன் தர்க்கத்தில் இறங்கிவிட்டது மட்டும் துல்லியமாக விளங்கியது. இனி வாயைக் கொடுக்கக் கூடாது. அவன் போக்கில் விட வேண்டும். அதே சமயம் இவனுக்கு அந்த ஐயப்பன் ஒரு பதில் சொல்லியே தீர வேண்டும் என்றும் ஒரு தீர்க்கம் அவனுக்குள் துளிர்த்தது. அப்படியே விஸ்வத்தைவிட்டு நழுவி பாஸ்கரை நெருங்கி யவன்.

''ஏன்டா.. எந்த நம்பிக்கைலடா இவனைக் கூட்டிகிட்டு வந்தே... நம்ம அவ்வளவு பேரையும், நம்ம நம்பிக்கை அவ்வளவையும் முட்டாள்தனமானதுன்னு நிரூபிக்கப் போறவன்மாதிரி என்ன தெனாவெட்டா பேசறான் தெரியுமா அவன்...''

''குமாரதாஸ்... உனக்குக் கூடவா நம்ம ஐயப்பசாமி மேல நம்பிக்கை இல்ல. பேசாம வா! அவன் பாத்துக்கு வான்!''

''என்னமோடா... எனக்கு எதுவுமே சரியா படலை. இதெல்லாம் எங்க போய் முடியப்போகுதோ... ஹும்!''

குமாரதாசுக்குள் மீண்டும் ஒரு சலிப்பு. விஸ்வம் சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டே நடந்தான்.

எப்பொழுதுமே காடு காடுதான் சில மரங்கள் நூல் பிடித்தமாதிரி நேராக வளர்ந்திருந்தன. அப்படியே வெட்டி எடுத்து அந்த மாதிரி ஒரு ஐம்பது மரத்துண்டுகளை நட்டு வைத்தாலேகூட போதும். அதுவேகூட ஒரு கண்காட்சி மாதிரி விளங்கும். நிறைய வசூல் செய்யலாம் என்று தோன்றியது.

அப்போது 'டோலி டோலி' என்று ஒரு குரல். ஒரு பிரம்பு நாற்காலியை இரண்டு நீண்ட மூங்கிலில் கட்டி அதை நான்கு பேர் சுமந்தபடி வந்து வழிகேட்டனர். நாற்காலியில் ஒரு வயதானவர்!

நடக்க முடியாதவர்கள் இப்படி டோலியில் அமர்ந்து மேலே சொல்ல முடியும் என்பதையே அப்போதுதான் பார்த்தான் விஸ்வம். கொஞ்சம் ஆச்சரியம். கொஞ்சம் அதிர்ச்சியாகக்கூட இருந்தது.

அவர்கள் சாதாரணமாக மேலே ஏறினார்கள். அதுவும் ஒரு சுமையோடு... ஆனால், சரங்குத்திவரை போவதற்கே நாக்கு தள்ளியது. அவ்வளவும் நெட்டுக்குத்தான மேடுகள். தொடை இரண்டும் மீட்டிவிட்ட தந்திக் கம்பி போல நடுங்கிற்று.

இவ்வளவு சிரமப்பட்டு, அடுத்தவர்களையும் சிரமப் படுத்தி, அந்த சாமியைப் போய் பார்ப்பதில் நமக்குத்தான் என்ன கிடைக்கிறது? இல்லை அவருக்குத்தான் என்ன கிடைக்கிறது? என்றெல்லாம் அடுக்கடுக்காய் கேள்விகள்.



விஸ்வம் கோயிலுக்குள் நெளிந்த படி இருக்கும்போதே டோலிகள் கடந்து போனார்கள். வழியிலேயே ஒரு டோலிக்காரர் வழிமறித்தார். 'புஸ் புஸ்' என்று பெருமூச்சு விடும் விஸ்வத்தைப் பார்த்து, "''சாமி டோலியில் ஏறிக் கிறீங்களா?'' என்றும் கேட்டார்.

''எவ்வளவுப்பா?''

''பம்பைல இருந்துன்னா ஆயிரத்து ஐந்நூறு... கிட்டத் தட்ட பாதி தூரம் வந்துட்டீங்க. எழுநூத்தி ஐம்பது ரூபாய் கொடுங்க.''

''எழுநூத்து ஐம்பதா.'' பெரிதாக வாயைப் பிளந்தான் விஸ்வம்.

''நாலு பேர் தூக்கறோம் சாமி... தேவஸ்தானத்துக்கு வேற பணம் கட்டணும். தலைக்கு நூத்தம்பது ரூபா கிடைச்சா ஜாஸ்தி.''

''ஒரு நாளைக்கு எவ்வளவு தடவை ஏறி இறங்குவே?''

''என்ன ஒரு அஞ்சு தடவை...''

''அப்ப தலைக்கு ஆயிரம் ரூபா வரை சம்பாதிப்பீங் கன்னு சொல்லு...''

''ஏங்க சாமி... இப்படி சீசன்ல சம்பாதிச்சாதான். இந்த கோயில் என்ன வருசம் பூரா திறந்துருக்கற கோவிலா என்ன? மாசத்துக்கு நாலஞ்சுநாள்தான். அதுலயும் கார்த் திகை, மார்கழிலதான் நல்ல கூட்டம் வரும். மத்த மாச மெல்லாம் இந்த பாதைல ஈ எறும்புங்ககூட நடமாடாது...''

''இவ்வளவு சிரமப்பட்டு தினம் ஏறி இறங்குறீங்களே... உங்களைக் கேக்கறேன். நிஜமா ஐயப்பன் இருக்கானா.''

விஸ்வம் அவர்களிடமும் ஆரம்பித்துவிட்டான். டோலிக் காரன் முகத்தில் ஒரு தடுமாற்றம். மாலை போட்டு இரு முடிகளோடு வந்திருக்கும் ஒருவனா இப்படிக் கேட்பது?

''ஏன் சாமி... சாமி இல்லாமலா இவ்வளவு பேர் வர்றாங்க? நீங்களும் வந்திருக்கீங்க?''

''நீ பார்த்துருக்கியா.''

''ஏங்க சாமி, கூலிக்குத்தானே மாரடிக்கிறோம். பக்தி யோட வர்ற சாமிங்க கிட்டயே, வயித்துப்பாடுன்னு கூலி வாங்கறோம. எப்படி எப்படியோ பொழைக்கறோம். எப்படிசாமி நாங்க அதைப் பாக்க முடியும்? அந்த சாமி மவுனமாக இருக்கறவரைதான் எங்க பொழப்பு. அது கண்ணுக்குத் தெரியாத நிலையிலேயே இவ்வளவு கூட்டம். நடக்க முடியாட்டியும் டோலி ஏறிப் போற அளவுக்கு ஆர்வம். அது கண்ணுக்குத் தெரிஞ்சுட்டா, இந்த மலை தாங்குமா சாமி? உலகமே இங்கதானே இருக்கும்?''

டோலிக்காரன் விஸ்வம் வரையில் ஒரு புதிய கோணத்தைக் காட்டினான்.

''நீ என்ன சொல்றே... சாமி இருக்கு... அதே சமயம் அது கண்ணுக்குத் தெரியாமதான் இருக்கணுங்கிறியா?''

''அதுதான் நல்லதுங்கறேன். எப்படியோ கும்பிட்டா சரின்னு நினைக்கறதாலதான் நடக்க முடியாதவங்கல்லாம் கூட இப்படி டோலில வர்றாங்க. சாமி நேர்லையே நடமாடுதுன்னு தெரிஞ்சா அவ்வளவுதான். அது எங்கள்ல ஒருத்தனாகூட இருக்கலாம்னு யாரும் டோலியையே ஏற மாட்டாங்க. தவழ்ந்துதான் மேல ஏறுவாங்க. அப்புறம் எங்க பொழப்பு அவ்வளவுதான்...''

டோலிக்காரனின் பேச்சு சாதாரணமாகத்தான் இருந்தது. ஆனால், விஸ்வம் வரையில் அதில் ஏராளமான உட்பொருள் இருப்பதுபோல் தோன்றியது. பாஸ்கரும், குமார்ரதாசும் வெகுதூரம் முன்னே போய்விட்டிருந்தார்கள்.

அந்த நொடி விஸ்வத்தின் அருகில் ஒரு நபர், மெல்லிசான புன்னகையோடு,



''ஹலோ...''

''நீங்க?''

''நீங்க பேசினது, அவர் பேசினது எல்லாம் கேட்டுகிட்டு தான் இருந்தேன். நல்லா கேள்வி கேட்கறீங்க. இந்த மலைல இவ்வளவு தைரியமா யாரும் சிந்திச்சு நான் பார்த்த தில்லை.''

''நீங்க யாருன்னு சொல்லலையே...''

''நான் ஒரு பத்திரிகை ஆசிரியர், 'நாம்'னு ஒரு பத்திரிகை வருதே...''

''ஆ... ஆமாம். நான் உங்க ரெகுலர் ரீடர்சார்.''

''சந்தோஷம். என்ன செய்யறீங்க.''

''சும்மாதான் சார் இருக்கேன். என் பேர் விஸ்வம்.''

''உங்ககிட்ட நிறைய 'ஃபயர்' இருக்கு. ஆனா சும்மா இருக்கேன்னு சொல்றீங்களே...''

''ஃபயர் இருக்கு சார்... அதுதான் அடுத்தவங்க பயப்படற துக்கும் காரணமா இருக்கு.''

''நான் பயப்படலை. எங்க பத்திரிகைல சேர்ந்து இந்த மாதிரி துணிச்சலான கேள்விகளைக் கொண்ட கட்டுரை எழுதத் தயாரா?''

''ஐய்யோடா... நிஜமாவா சார்?''

''ஷ்யூர்... இங்க பேசினது, அந்த டோலிக்காரர் சொன்ன தையேகூட ஆர்ட்டிகிள் ஆக்கலாம். நானேகூட அதுக்குத் தான் வந்தேன். இங்க நான் பக்தியைப் பார்க்கலை. பக்தி வீக்கத்தைத்தான் பாக்கறேன். இங்க புத்திசாலிகள் டோலி கள்தான். அப்புறம் வியாபாரிகள். அவங்க வரையில் நிஜமா ஐயப்பன் இல்லாட்டியும் இருந்தாதான் நல்லது. அப்பதானே கூட்டம் வரும்? அவங்க பொழப்பும் நடக்கும்...?

''ஷ்யூர் சார்...!'' விஸ்வம் படு உற்சாகமானான்.

''உங்க எழுத்து எல்லார் கண்ணையும் திறக்கணும்.'' அவர் அங்கயே அப்போதே விஸ்வத்தை அங்கீகரித்துத் தன் நம்பிக்கையையும் தெரியப்படுத்தி விட்டார்.

''பக்திங்கறது ஒரு பலவீனம் மிஸ்டர் விஸ்வம். எப்பவும் நம்ம ஜனங்களுக்கு எதையாவது ஒண்ணைப் பிடிச்சுகிட்டே நிக்கணும். இல்லாட்டி விழுந்துடுவோம்னு பயப்படறாங்க.

அப்பறம் சாமியை ஒரு சுப்ரீம் பவரா ஆக்கிட்டதால, அவராலதான் தன் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்னு ஒரு எண்ணம். ரொம்ப முக்கியமான விஷயம்... சாமிகிட்ட மானசீகமா எல்லா ரகசியங்களையும் சொல்லலாம். அவர் போய் யார்கிட்டயும் போட்டுக் கொடுத்துட மாட்டார். இவங்களுக்கும் மனசுல சுமக்கறது ஒரு பாரமா இருக்குது. நடக்குதோ, நடக்கலையோ இப்படி மலை ஏறி இறங் கிட்டுப் போகும்போது ஒரு சுமையை இறக்கிவிட்டு, போற திருப்தி அவ்வளவுதான். சைக்காலஜிகலா பார்த்தா உண்மைல எங்கேயும் எதுவும் இருந்து, அது யாருக்கும் எதையும் தரலை. அவங்க வந்து அவங்கவங்க மனசுக்குள் ளயே எல்லாத்தையும் பண்ணிக்கறாங்க. இவன் வீட்டுக்குப் போற நேரம் தற்செயலா ஒரு நல்லது நடந்திருந்தாலும் அதுக்கு சாமிதான் காரணம்னு முடிச்சு போட்டுக்கறான். இவ்வளவுதான் விஷயம்...''

ஆசிரியர் பேச்சு விஸ்வத்தை வசீகரித்தது.

''ரொம்ப சரிசார்... இதைத்தான் நானும் என் நண்பர்கள் கிட்ட சொல்றேன். அவங்களோ கேக்க மாட்டேங்கிறாங்க. நீ மாலை போட்டு மலைக்கு வா. உனக்கு வேலை கிடைக் கும். மேல வருவே... ஹை அப்புக்கு கொண்டுபோற தெய்வம்தான் ஐயப்பன்னு கவிதையெல்லாம் பேசறாங்க. சரி, அதையும் பார்த்துடுவோம்னுதான் நானும் கிளம்பி வந்தேன்.''



''சரி இப்ப உங்களுக்கு என்னால வேலை கிடைச்சுடிச்சு. அப்ப இதுக்கு, காரணம் ஐயப்பனா...?''

அவர் கேட்ட கேள்வியே அவனைத் திக்குமுக்காட வைத்தது. பதில் சொல்லத் தெரியாமல் சுவரை வெறித்தான்.

''என்ன விஸ்வம்... என்ன தயக்கம்?''

''இல்ல சார்... எனக்கு என்ன பதில் சொல்றதுன்னு தெரியல...''

''சரிதான்... உங்க ஃபயர் அவ்வளவுதானா. இது ஒரு தற்செயல் சம்பவம். இதுக்கும் ஐய்யப்பனுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. உங்க எண்ணங்கள் உங்களை எனக்குக் காட்டி கொடுத்துச்சு. என் தேவை உங்களை நான் தேர்ந்தெடுக்கறேன். அவ்வளவுதான். சாமியை இதுல போட்டு இழுக்கறது டூ மச்சா தெரியல?''

''ஆமாம் சார். ஆமாம்... நீங்க சொல்றதுதான் சரி'' ஒரு வழியாக ஒப்புதலுக்கு வந்தான் விஸ்வம்.

''சரி... என்ன பண்ணப் போறீங்க அடுத்து?''

''என்ன சார் கேள்வி இது... நண்பர்கள் முன்னால போய்கிட்டு இருக்காங்க. அவங்களோட சேர்ந்து ஐயப்பனைப் பார்த்துவிட்டுத் திரும்ப வேண்டியதுதான்.''

''எதுக்கு, அப்புறம் நீ சாமி கும்பிடப் போய்தான் வேலை கிடைச்சதுன்னு பேசுவாங்க. அவங்க நம்பிக்கையும் அதிகமாகும். இப்படியே திரும்புங்க. அப்பதான் அவங் களும் யோசிப்பாங்க.''

அவர் சொன்னதும் அவனுக்கு சரி என்றுதான் பட்டது. முன்னோக்கி சென்றுவிட்ட நண்பர்களை கூட்டத்தில் பார்வையால் துழாவியபடியே அவரோடு சேர்ந்து இறங்க ஆரம்பித்தான். இப்படி பாதியில் திரும்புவது என்னவோ போல்தான் இருந்தது. தலையில் உள்ள இருமுடியை அவன் தாய் பார்த்தபோது ஆனந்தக்கண்ணீர் விட்டிருந்தாள்.

''உனக்கு நல்ல புத்தி வரணும்னு நான் வேண்டாத நாள் இல்ல. என் வேண்டுதலை அந்த சாமி நிறைவேத்திடிச்சு'' என்று சொல்லியிருந்தாள். அதெல்லாம் அப்போது அவன் ஞாபகத்தில் வந்தது.

கடவுளை விட்டுவிடுவோம். அம்மா இதைக் கேள்விப் பட்டால் ஏமாறுவாளே என்று தோன்றியது.

சட்டென்று நின்றான்.

''என்ன விஸ்வம். ஏன் நின்னுட்டீங்க?''

''இல்ல சார்... சரியோ தப்போ நான் முழுசா இந்த பயணத்தை நிறைவு செய்யவே விரும்பறேன். நீங்க போங்க நான் உங்களை உங்க ஆபீஸ்ல வந்து பாக்கறேன்...''

என்றவன் அடுத்து அவர் பேசுவதற்கு இடமே கொடுக் காதபடி திரும்பி மலை ஏறத்தொடங்கினான். அத்தனை கூட்டத்திலும் நண்பர்களைத் தேடி நெருங்கினான்.

முதல் காரியமாக, ''சாமி தரிசனம் அது. இதெல்லாம் நடப்பதற்கு முன்பே வேலை கிடைத்துவிட்டது.'' என்றவன் நடந்ததை எல்லாம் கூறினான்.

''பாதியில திரும்பினேன்னு தெரிஞ்சா அம்மா வருத்தப் படுவா... அவளுக்காகத்தான் இப்பவும் வந்துருக்கேன்.'' என்றான்.

குமாரதாசுக்கும் பாஸ்கருக்கும் கன்னத்தில் அறைந்த மாதிரி இருந்தது.

''பாஸ்கர், இவன் சொல்றதுதாண்டா சரி. நாமல்லாம் ஒரு வகைல முட்டாள்தாண்டா'' என்று குமாரதாஸ் புலம்பவே தொடங்கிவிட்டான். அதன்பின் சாமி தரிசனம் அது, இது எல்லாமே மிகச் சம்பிரதாயமாகவும் ஒருவிதமான குழப்பத்துடனும் பொருமலுடனும்தான் நடந்தேறியது. நடந்த, நடக்கிற விஷயங்கள் அவர்களைத் தன் கைக்குள்



எடுத்துக் கொண்டு விட்டது. ஒரு தெளிவுக்கு வரவே முடியவில்லை.

''இவ்வளவு தூரம் நாத்திகம் பேசற இவனுக்கு வழியி லேயே வேலை கிடைச்சுடுச்சு. நம்ம நம்பிக்கையையே இவன் இப்ப கேலி பேசற அளவுக்கு ஆகிப்போச்சு. பாஸ்கர் நான் சீரியசாவே கேக்கறேன். ஐயப்பன் இருக்கானா? இருந்தா, இப்படி எல்லாம் அபத்தங்கள் நடக்க இடம் கொடுப்பானா?''

குமாரதாஸ் புலம்பு புலம்பு என்று புலம்ப ஆரம்பித்து விட்டான்.

சென்னை.

மலையில் இருந்து திரும்பியவனை, அவன் தாய் திருஷ்டி கழித்து வரவேற்றாள். எப்போதும் இல்லாதபடி பார்த்தாள்.

''என்ன பாக்கறே?''

''இல்ல... நல்லா சாமி கும்பிட்டியா?''

''நான் எந்தக் காலத்துல கும்பிட்டிருக்கேன். பாதி வழியில திரும்பியிருப்பேன். நீ வருத்தப்படுவாயேன்னு தான் சன்னிதானம் வரை, போய்ட்டு வந்தேன். வேலையும் கிடைச்சிடுச்சு.''

''நிசமாவா?''

''இதுல எதுக்கு நான் பொய் சொல்லணும். எனக்கு ஏத்த வேலையும்கூட. உடனே ஐயப்பன் கண்ணத் திறந்துட் டான்னு ஆரம்பிச்சுடாதே. ஐயப்பனைக் கும்புடப் போறதுக்கு முந்தி வழியிலேயே எனக்கு இந்த வேலை கிடைச்சிடுச்சு. அப்படியே திரும்பிடணும்தான் நினைச் சேன். அப்புறம் உன்னை நினைச்சதாலதான் மேலே ஏறினேன். அதாவது நான் சன்னிதானம்வரை போனது உனக்காக... எனக்காக இல்ல?''

அவன் பதில், அவள் கண்களில் கண்ணீரை வரவழைத்தது.

அவன் சாமியை மதிக்காவிட்டாலும் தன்னை, தன் உணர்வைப் பொருட்படுத்தியதால் கொஞ்சம் சமாதானம் அடைந்தவள், ''உனக்கு இந்த வயசுல ஒரு கண்டம் இருக்குன்னு ஜோசியர் சொன்னார். அதுல இருந்து நீ தப்பணும்னு நான் அந்த ஐயப்பனைத்தான் வேண்டினேன். உனக்காக இல்லாட்டியும் எனக்காக அந்த ஐயப்பன் அதை நிறைவேத்தினா, அதுவே எனக்குப் போதும். மத்தபடி எல்லாத்தையும் ஆட்டி வைக்கிறவன் அவன்தான். நீ இப்படி எல்லாம் பேசறதுக்கும் அவன்தான் காரணம். இதுக்காக நான் எதுக்குக் கவலைப்படணும். அவன் பாத்துக்குவான் இனி'' என்றபடியே நகர்ந்தாள். விஸ்வம் வழக்கம்போல சிரித்தான்!

'நாம்' பத்திரிகை அலுவலகம்.

ஆசிரியரைப் பார்த்தவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அங்கே வேறொருவர்!

''சார் நீங்க?''

''என்ன நான்... நான்தான் ஆசிரியர்.''

''இல்ல சபரிமலைல நான் ஒருத்தரைப் பார்த்தேன். அவர்தான் தன்னை ஆசிரியர்னு சொன்னார். எனக்கு ரிப்போர்ட்டரா வேலை தரதாவும் சொன்னாரு...''

ஆசிரியர் உடனே சிரித்தார்.

''என்ன சார் சிரிக்கறீங்க?''

''சிரிக்காம... அவன் ஒரு பிராடு! ஆமா அவன்கிட்ட இருந்து எப்படித் தப்பிச்சீங்க...?''

ஆசிரியர் அடுத்துக் கேட்டது சம்மட்டி அடி மாதிரி விழுந்தது.



''என்ன சார் சொல்றீங்க? அவர் ஒரு பிராடா?''

''ஆமாம். இன்னிக்கு நீங்க பேப்பர் பாக்கலியா.'' கேட்டபடியே பேப்பரை எடுத்துப் போட்டார்.

அதில் ஒருவன் தலை நசுங்கி இறந்து கிடந்தான். அருகில் பெரிய கல் ஒன்று!

''சபரிமலைக்கு வர்றவங்கள்ல ஆள்பார்த்து பிளாக் மெயில் பண்றதுல வடிவேலுங்கற ஒருத்தன் எக்ஸ்பர்டா இருக்கான். பக்தர்களோட மனநிலைக்குத் தகுந்தமாதிரி பேசி பழகி, தனியா கூட்டிக்கிட்டு போய்டுவான். அப்புறமா அவங்ககிட்ட இருக்கறத எல்லாம் புடுங்கிட்டு இப்படி தலைல கல்ல தூக்கிப் போட்டு கொலை செய்யறதுதான் அவன் வழக்கம். இது ஒருவித சைக்கோத்தனமான நடவடிக்கை. போலீஸ் அவனை வலைவீசி தேடிக்கிட்டிருக்காங்க. உருவத்தை மாத்திக்கறதுலையும் கில்லாடி. இதுக்கு முந்தியும் 'நாம்' பத்திரிகையைப் பயன்படுத்தி சிலரை ஏமாத்த பாத்திருக்கான். அவங்க ஏமாந்துட்டாங்க. தப்பிச்சது நீங்க ஒருத்தர் தான் போல...''

ஆசிரியர் பேசப்பேச விஸ்வத்துக்கு நின்ன இடம் பிளந்து, அதில் அவன் தலைகீழாக விழுகிற மாதிரி இருந்தது.

''ஆமாம். நீங்க என்ன பண்றீங்க?''

விஸ்வம் தட்டுத்தடுமாறி நடந்ததைக் கூறி முடித்தான். ஆசிரியர் அயர்ந்து விட்டிருந்தார். நெடுநேரம் அவரால் எதுவும் பேச முடியவில்லை. விஸ்வமோ கல்லாகி விட்டிருந்தான்.

''மிஸ்டர் விஸ்வம்.. உங்களுக்கு நிறையவே ஐயப்ப கருணை இருக்கு. தாயன்புக்கும் ஐயப்பனுக்கும் பெரிய வித்தியாசமில்லை. மாற்றாந்தாயாக இருந்தாலும் அவ கேட்டுட்டதுக்காக புலிப்பால் கொண்டு வர காட்டுக்கு ஐயப்பன் போனதாகவும் புலிப்பாலோட திரும்பி வந்ததாக

வும் படிச்சிருக்கேன். தாயோட விருப்பத்தை ஒருத்தன் ஈடேற்ற நினைச்சிட்டா புலிகூட பூனையாயிடும்ங்கறது தான் உள்ளர்த்தம்.''

''இது கலியுகம். கடவுள் நேர்லல்லாம் வரமாட்டார். வந்தா பூமி தாங்காது. அவன் அருளை சம்பவங்களாலதான் உணரணும். உணரவும் முடியும். நான் உணர்றேன். உங்களுக்கு ஆட்சேபணை இல்லைன்னா, நீங்க இங்கேயே இப்பவே ரிப்போர்ட்டர் வேலையில சேரலாம். உங்களை மாதிரி பார்வை உள்ளவங்கதான் பத்திரிகை உலகுக்குத் தேவை. மற்றபடி உங்க கொள்கைகளால் கடவுள் சிந்தனைக்கு எந்தக் குந்தகமும் வந்துடாதுங்கறதுதான் என் எண்ணம்.'' என்றார் ஆசிரியர்.

விஸ்வம் கொஞ்சம் சிலிர்த்துப் போனான். எழுந்து நின்றான். மனதுக்குள் கையிரண்டையும் கூப்பி தலைக்கு மேல் உயர்த்தி ஆத்மார்த்தமாக 'சாமியே சரணம் ஐயப்பா..!' என்றவன் உடனேயே சுதாரித்தவனாக, ''சேச்சே... நான் நானாக இருக்கேன். இது அதனால கிடைச்ச வேலை'' என்றும், தனக்குள் சொல்லிக் கொண்டான்.

ஆசிரியர் புரிந்ததுபோல சிரித்தார். அது கடவுளின் சிரிப்பு போலவும் இருந்தது.

# 7. நேர்மை என்பது

வந்துவிட்டது சித்திரைத் திருவிழா! வைகையில்தான் கால்நனைக்கக் கூட தண்ணீரில்லை. கல்பாலம் மேல் சைக்கிளில் போய்க் கொண்டிருக்கும் சந்திரனது மனது கூட வைகை போலவே வறண்டு தான் கிடந்தது.

“சித்திரைத் திருவிழாவுக்கு இந்தத் தடவை குழந்தைகளோட வர இருக்கிறேன்.” என்று தங்கை மீனாட்சி கடிதம் போட்டிருக்கிறாள்.

“பெரிய திருவிழான்னு கேள்விப்பட்டிருக்கோம். பார்க்க வரோம்.” -என்று சேலத்திலிருந்து மைத்துனி வேறு கடிதம் போட்டிருக்கிறாள்.

சித்திரை மாதம் வெயிலோடு அனல் பாகமாய் இப்படி செலவும் வரும் என்று சந்திரன் எதிர்பார்க்கவேயில்லை.

சொத்து சுகம் இருந்தால் இந்த சித்திரை திருவிழாவும் உறவுகளின் வருகையும் ‘உலகம் பிறந்ததே எனக்காக’ என்று பாட வைக்கும்.

ஆனால் மாதச் சம்பளக்காரன். வாழ்க்கையில் இதெல்லாம் எத்தனை பெரிய சுமை என்று வாழ்ந்து பார்த்தால் தானே தெரியும்?

சலிப்போடு யானைக்கல்லில் வளைந்தான். புதிய ஒரு வழிப்பாதை வழித்தடமாய் மாறிவிட்டருக்கிறது சிம்மக்கல். அப்படியும் வாகனப் பிதுக்கம். திணறலான திணறல். இருக்

கிறதோ இல்லையோ எல்லோரும் எப்படியோ உருண்டு பிறண்டு வாழத்தானே செய்கிறார்கள்?

அவனிடம் விசாரமாய் சிந்தனை பெருகிக் கொண்டே போனது. சைக்கிளும் அன்வர் பாய் வீட்டு வாசலில் நின்றது.

''வா சந்திரா..'' என்கிற வரவேற்பு அன்வர்பாயிடம்.

''வர்றது இருக்கட்டும்... கேட்டுருந்தேனே...''

''பணம் தானே?''

''வேற எதைய்யா கேக்கப் போறேன்.''

அன்வர் அடுத்த நொடி ஒரு இரண்டாயிம் எடுத்து நீட்டினான். சந்திரனுக்குள் லேசான உற்சாகம்.

''புரோ நோட்டை கொண்டா கையெழுத்து போட்டுட் றேன்.''

''எதுக்கு?''

''என்னய்யா இது. கடன் கொடுத்திருக்கே அத்தாட்சி வேண்டாமா?''

''நான் சந்திரனை மனசார நம்பறேன். அது போதும்.''

அன்வர் அப்படிச் சொன்னதில், இந்த உலகத்தில் நம்மை யும் இப்படி மதிக்க ஒருவன் இருக்கிறான் என்ற தெம்பில் அதுவரை மனதில் நிலவிய வெறுமை மேல் வெளிச்சம் பட்டமாதிரி ஒரு வெதுவெதுப்பு.

''தேங்க்யூ அன்வர் கூடிய சீக்கிரம் தரேன்.''

''ஒண்ணும் அவசரமில்லை.''

கிடிதம் போட்ட மாதிரியே மைத்துனி, தங்கை என்று சகலமும் ஆஜர். சுப்ரமண்யபுரத்தில் ஒரு சிறிய வீடுதான் சந்திரனின் ஜாகை. காரை பெயர்த்த சுவர், காமன் டாய்லெட் பாத்ரும், எலியும் பெருச்சாளியும் ஓடித்திரியும் சரிந்த கூரை என்கிற மிகச் சாதாரண அம்சமுள்ள வீடுதான். ஆனாலும் அதை அரண்மனையாகக் கருதி விளையாடிக் கொண்டிருக்கின்றன குழந்தைகள். மதுரை மல்லிகையைக் கட்டிக் கொண்டிருக்கிறாள் தங்கை. பிரியாணி கிண்டிக் கொண்டிருக்கிறாள் மைத்துனி.



இருவருமே பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட்டுவிட்ட பங்களாவாசிகள். இருந்தும் சந்திரனைத் தேடி வந்திருக் கிறார்கள் என்றால், காரணம் சந்திரனின் குணம்தான்.

''அண்ணே இங்க வந்தா தாண்ணே மனசுக்குச் சந்தோ ஷமா இருக்கு. ரசம் சோறு சாப்ட்டாலும் அண்ணி சமை யல்ல ஒரு அற்புதசுவை இருக்கு.'' என்றாள் மீனாட்சி.

''ஆமாம்... எங்க அக்கா சமையல் மட்டுமா ருசி? அத்தான் பேச்சும்தான். மனசுக்கு தெம்பா பேச அத்தான் மாதிரி வருமா?''

புத்தகம் படித்தபடியே இருக்கும் சந்திரனின் காதிலும் இந்தக் கருத்துக்கள் விழத்தான் செய்கின்றன. நடுவில் ''மாமா... எனக்கு இந்த வருஷம் கவுன் வேணாம். கட் ஷு வாங்கித் தாங்க...'' என்று மருமகள் வந்து கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

''சித்தப்பா என்னை எக்ஸிபிஷன் கூட்டிக்கிட்டுப் போறீங்களா?'' என்று கேட்டபடி மைத்துனி பெண்மடியில் வந்து அமருகிறாள்.

''அதுக்கென்ன ஜமாச்சிடுவோம்'' என்றான் சந்திரன். அன்வரிடம்தான் இரண்டாயிரம் வாங்கியிருக்கிறோமே. மனைவி ரஞ்சிதம் காதைக் கடித்தாள்.

''ஏதுங்க பணம்?''

''எல்லாம் ஒரு புரட்டல்தான். அன்வர்கிட்ட வாங் கினேன்.''

''ஃபேக்டரி மூடியிருக்கிற வேலை இல்லாத இந்த நிலைல கடன் வாங்கணுமா?''

''இது தற்காலிக பிரச்சனை. இதுக்காக நம்மளை நம்பி ஆசையா வந்துட்டவங்களை ஏமாத்தச் சொல்றியா?''

ரஞ்சிதம் கணவனைக் கண்கலங்க பார்த்தாள்.

''உங்களுக்குப் பெரிய மனசுங்க. எவ்வளவு நல்ல எண்ணம் இருந்தா கடன் வாங்கியாவது நம்ம உறவுக் காரங்களைச் சந்தோஷப்படுத்தமணும்னு நினைப்பீங்க...'' -அவன் மார்பணைந்து பெருமிதப்பட்டாள்.

''சரி சரி எல்லாருமா சாமி கும்பிடக் கிளம்புங்க. அப்ப டியே எக்ஸிபிஷன் போய்ட்டு துணி எல்லாம் வாங்கிட்டுத் திரும்பலாம்.''

எள் போட்டால் எண்ணெய் எடுக்கும்படியான கூட்டம். நாமம் போட்ட தள்ளு வண்டி உண்டியலும், தண்ணீர்ப் பீச்சுபவர்களும் பலூன் வியாபாரிகளும் ஊடாடித் திரிய, குழந்தைகளை இழுத்துக் கொண்டு போய் ஒழுங்காகத் திரும்ப முடியுமா என்று தோன்றியது.

நடுநடுவே போலீஸ் வேறு ''பிக்பாக்கெட் ஜாக்கிரதை..'' என்று எச்சரிக்கை செய்தபடி சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

சித்திரைத் திருவிழா திருடர்கள் என்றால் சும்மாவா என்ன?

சந்திரனின் பாக்கெட்டில் அந்த கடன் வாங்கிய இரண்டாயிரம் கனத்தது.

எச்சரிக்கை நிமித்தம் அடிக்கடி தொட்டுப்பார்த்துக் கொண்டான்.

இந்த கூட்டத்தில் விடலைகளின் கையெழுத்துப் போடும் உற்சவம் வேறு. வயசுப் பெண்ணாகப் பார்த்து இடிப்பதற்கு பேர்தான் 'கையெழுத்துப் போடுவது' என்று பேர்.



கலிகால மதுரை விடலை பாஷை அது!

சந்திரன் எதிரில் ஒருவன் தோள் இருப்பதே உரசவும் இடிக்கவும் என்ற கொள்கை உள்ளவன் போல இடித்துத் தள்ளிக் கொண்டு போனான். சந்திரனுக்குச் சங்கடமாக இருந்தது. இந்தக் கூட்டத்தில் மனைவி குழந்தைகளுடன் போய் கற்போடு சாமி கும்பிட முடியுமா என்று தோன்றியது.

''ரஞ்சிதம்.... நீயும் குழந்தைங்க மீனாட்சி எல்லாரும் ஆட்டோவுல பொருட்காட்சி வாசல்ல நில்லுங்க. நான் வந்துட்றேன். உங்களுக்கும் சேத்து நான் சாமி கும்பிட்டுட்டு வரேன்.''

-என்று அவர்களை ஒரு ஆட்டோவில் ஏற்றி மாற்றுத் திசையில் அனுப்பினான்.

உதட்டில் கோவிந்தா போட்டபடி திரும்பிவிட்ட அழகர் சாமியை குதிரை வாகனத்தில் பார்த்துவிட்டுக் கன்னத்திலும் போட்டுக் கொண்டான்.

அங்கங்கே கோவிந்தா சப்தம். சக்கரை தீபம்! வண்ண, வண்ண நீரின் பீச்சல்!

சுவாமி தங்கக் குதிரை வாகனத்தில் மிடுக்காக..

''சாமி உன்னால என் கஷ்டமெல்லாம் நீங்கணும். எல்லோருக்கும் நான் எல்லாம் செய்யற வசதி கிடைக் கணும். மூடுன என் ஃபேக்டரியைத் திறக்கணும்.''

வேண்டிக் கொண்டு பாக்கெட்டை தொட்டவனுக்குப் பகீர் என்றது.

இரண்டாயிரத்தை எந்த கள்ளனோ மொத்தமாகச் சுட்டு விட்டிருந்தான்.

''ஐய்யோடா... கடன் வாங்கின காசு இப்படிப் போய் விட்டதே...'' கூட்டத்தில் சந்திரனுக்கு நெஞ்சைப் பிசைந்தது. கண்களில் நீர் கூட முட்டி விட்டது.

ஆசை ஆசையாய் மனைவி, மக்கள் சொந்தம் அத்தனை பேரையும் எக்ஸிபிஷன் வாசலில் வேறு நிற்கச் சொல்லி விட்ட நிலையில் இதென்ன சோதனை?

கலங்கி நின்று விட்டவனைச் சுற்றி கூட்டம் கட்டி ஏறிற்று. பம்மிப்பம்மி நடந்தவன் மனதில் திடும்மென்று ஒரு பொறி, 'திருட்டில் விட்டதைத் திருட்டிலேயே பிடித்துவிட வேண்டும்' உடனேயே சுதாரித்து பணத்தை இழந்த துக்கம், கோபத்தோடு கைகளை இயக்க ஆரம்பித்து விட்டான்.

எவன் பாக்கெட் தட்டுப்பட்டாலும் சரி விட்டு விடக் கூடாது. மனதில் அலைமோதிய ஆவேசத்துக்குத் தோதாக கூட்டத்தில் ஒரு புடைத்த பாக்கெட் அகப்பட்டது. கைகளும் லாவகமாக அதைக் களவாடிற்று.

கூட்டத்திலேயே அப்படியே நகர்ந்து எடுத்த விஷயத் தோடு ஒரு இடத்தில் ஒதுங்கினவன் தன் கைகளை பார்த்தான். தான் வைத்திருந்து தொலைத்த அதே அளவு ரூபாய் ஒரு பர்சில் தொலைத்தவன் போட்டோ மற்றும் முகவரியோடு...

எக்ஸிபிஷன் வாசலில் காத்துக் கிடப்பவர்கள் எதிரில் மலை ஏறிக் களைத்தவன் போல் வந்து நிற்பவனைப் பார்த்து ரஞ்சிதம் கேட்டாள்.

"ஏங்க இவ்வளவு லேட்டு?"

"சரி வாண்ணே உள்ள போவோம்.."

"மாமா போலாமா...?"

-அனைவரின் ஆசைக்காகவும் உள்ளே நுழைய அவரவர் விருப்பம் போல செலவும் செய்ய எல்லோரிடமும் ஒரு மனதாக 'உன்னைப் போல வருமா?' என்கிற கேள்வி.

சந்திரனுக்கு மட்டும் என்னவோ உறுத்திக் கொண்டே இருந்தது. தொலைத்த காசுக்காகத் திருடினாலும் திருடு



திருடுதானே? திருடியதால் தானே எல்லோரிடமும் இத்தனை சந்தோஷம். தற்காலிக நியாயத்திற்காக நீண்ட தன் கைகளைப் பார்த்துப் பார்த்து வருத்தப்பட்டான். ''நல்ல மாமா...'' என்று கழுத்தைக் கட்டிக் கொண்ட தங்கை மகளின் அபிப்ராயம் ஏனோ இனிக்காமல் கசந்தது.

ஐந்து வட்டிக்கும், பத்து வட்டிக்கும் கடன் தரும் அன்வர்கூட தன் நேர்மையை நம்பி தந்த ரூபாயை அதை இழந்தே திரும்ப அடைந்ததை நினைத்தபோது தான் இழந்து விட்டது ரூபாயை விட பெரிய விஷயம் என்கிற ஒரு பரிமாணமும் அவனுக்குள் ஏற்பட்டது.

அதேசமயம் சாமி கும்பிடப் போன இடத்தில் சாமி யிடம் ஒரு வாழ்க்கை கேட்ட நேரத்திலா இப்படி நடக்க வேண்டும்?

கடவுள் மேலேயே எரிச்சலான எரிச்சல் ஏற்பட்டது.

எக்ஸிபிஷனில் அவர்கள் உல்லாசமாய் சுற்றிவர திருட்டு நினைப்பின் பிராண்டலோடு அவர்களோடு சுற்றி வருவதும் சங்கடமாய் இருந்தது.

ரஞ்சிதம் கச்சிதமாய் புரிந்து கொண்டு கேட்டாள்.

''ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க? -சந்திரன் ஒளிவுமறைவு இன்றி மற்றவர்கள் குடை ராட்டினத்தில் சுற்றும்போது நடந்ததை எல்லாம் சொன்னான். மனைவியிடம் எதையும் மறைத்து அவனுக்குப் பழக்கமில்லை.

ரஞ்சிதம் ஒரு வினாடி கலங்கினாலும் துளியும் யோசிக் காமல் கைவளையைக் கழட்டி அவன் கைகளில் தந்து ''திருட்டு காசுல சந்தோஷம் நமக்கு வேண்டாங்க. இந்த நகையை வித்தாவது திருடுனவன்கிட்ட பணத்தைச் சேர்த்துட்டு வாங்க'' என்றாள். அவனுக்கே அவள் செயலில் திக்கென்றது!

பணத்தையும் பர்சையும் நீட்டும் சந்திரனை அந்த பர்சுக்குரியவர் ஆச்சரியமாய் பார்த்தார்.

“உன் நேர்மையை ரொம்ப பாராட்றேன்.” என்றார்.

“நான் கீழ கண்டு எடுத்துத் திரும்பிக் கொண்டு வந்து தரலை. உங்ககிட்ட திருடினதை மன உறுத்தல் தாங்காம திருப்பித் தரேன். நான் இரண்டாயிரம் தொலைச்சிட்ட துக்காக, அடுத்த பர்ஸை அபகரிக்க நினைக்கிறது சரியில் லாத நியாயம்தானே? என்னைப் பாராட்டாதீங்க...” மடமடவென்று பேசிவிட்டுத் திரும்ப நினைத்தவனை அவர் தடுத்தார்.

“உன் நேர்மையை விட பெரிய விஷயம் இப்படி உண்மை பேசறது. நீ யார்?” -கேட்டார். சொன்னான். அடுத்த நொடியே அவன் கையைப் பிடித்துக் கொண்டு நெகிழ்வாக வாயைத் திறந்தார்.

“நானும் ஒரு தொழிலதிபர்தான். உனக்கு ஆட் சேபணையில்லைன்னா என் ஃபேக்டரியில நீ கேஷியரா இருக்கலாம். பத்தாயிரம் சம்பளம் தரேன். என்ன சொல்றே?” -சந்திரனுக்கு மகிழ்ச்சியில் மூச்சுத் திணறியது. திருவிழா கூட்டத்தில் அழகர்சாமி வைத்த பரீட்சையில் நேர்மையாய் நடந்து கொண்டதற்குப் பரிசாக ஒரு புது வாழ்க்கையே கிடைத்துவிட்ட மாதிரி தோன்றுகிறது. சம்மதம் என்கிற மாதிரி அவர் கைகளைப் பற்றுகிறான். ஆமோதிக்கிறது எங்கோ ஒலிக்கும் கோவில் மணி சப்தம்.

# 8. கைவிட மாட்டேன்

பொழுது விடிந்து விட்டது.

ஆனால் கிருஷ்ணனுக்கு ஏன் விடிந்தது என்று கேட்கத் தோன்றியது.

கொல்லைப்புரத்தில் கிணற்றடியில் தண்ணீர் சலசலக்கும் சத்தம். மெல்ல எட்டிப் பார்த்தான். பாஸ்கர் குளித்துக் கொண்டிருந்தான்.

எட்டிப் பார்த்த கிருஷ்ணனைப் பார்த்து கொஞ்சம் மலிவாகச் சிரித்தான் பாஸ்கர்.

ஏன் சிரிக்க மாட்டான்?

பத்தாயிரம் ரூபாய் சம்பளத்தில் நல்ல வேலையில் இருக்கிறான். இன்னும் கல்யாணமாகவில்லை. குடும்பம் குட்டி என்கிற எந்த இடர்பாடும் இல்லை. எனவே சம்பாதிப்பதை எல்லாம் சந்தோஷமாகச் செலவழிக்கலாம்.

செகண்ட் ஹாண்ட் கார் ஒன்று, ஐம்பதாயிரத்துக்கு வந்தது என்று வாங்கியிருக்கிறான். சனி, ஞாயிறு என்றால், பெட்ரோலைப் போட்டுக் கொண்டு கிளம்பி விடுகிறான்.

அவன் வரையில், வாழ்க்கை என்பது வாழ்ந்து பார்ப்பதற்கே...

கிருஷ்ணனுக்கோ வேலை வெட்டி இல்லை. தெண்டச் சோறு. பாஸ்கர் இருக்கும் ஹாஸ்டலில் நண்பன் ஒருவனி

டம் ஒட்டிக்கொண்டு, காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறான்.

அதனால்தான் கிருஷ்ணனுக்கு எழுந்திருக்கவே பிடிக்கவில்லை.

ஒரு வாரத்துக்கு ஒருமுறை, ஒரு பகல் பொழுது மட்டும் விடிந்தால் தேவலை என்று தோன்றியது. ஆறு நாட்களில் பசி தாகம் இன்றித் தூங்கியே கழித்து விடலாமே. வேலை இல்லை என்கிற கவலையும் ஆளை அரிக்காது. ஆனால் நினைத்த மாதிரி எல்லாமா நடக்கிறது?

''என்ன கிருஷ்ணா... இன்னிக்கு எந்த பார்க்குல போய் எந்த மரத்தடில படுக்கப் போறே?''

-பாஸ்கர் குளித்து முடித்த நிலையில் துண்டால் உடம்பைத் துடைத்துபடியே கேட்டான். அந்த கேள்விக்குள் ஒருவித கேலி ஒளிந்திருந்தது. கிருஷ்ணன் பதிலேதும் கூறவில்லை. கிணற்றருகே உள்ள தொட்டி நீரில் முகம் கழுவ ஆரம்பித்தான். பாஸ்கர் விடுவதாக இல்லை.

''நான் ஒண்ணு சொல்றேன் கேட்டுக்க... கைரைகை பார்க்கக் கத்துக்க. இல்லாட்டி சாமியாராயிடு. உக்காந்த இடத்துல காசு பாக்கலாம். இன்னிக்கெல்லாம் வாஸ்து, நாடிஜோசியம்; இதுக்கு இருக்கிற மதிப்பு வேற எதுக்கும் இல்லை.

ஜனாதிபதி, பிரதமர் பதவியெல்லாம் கூட வேஸ்ட். இவங்களுக்குத்தான் பலம் என்றபடியே அங்கிருந்து நகர்ந்தான்.

அவன் பேசுவதைப் கேட்டபடியே வந்தான் ஹாஸ்டல் வாட்ச் மேன் வையாபுரி. கிருஷ்ணனின் முகம் வாடிப் போயிருந்தது.

''இப்படி வாயில்லாப் பூச்சியா இருக்கியேப்பா...'' என்று ஆரம்பித்தான்.



''என்னண்ணே பண்றது. மாசக் கடைசில இவன்கிட்டத் தான் அஞ்சு பத்துன்னு போய் நிக்கறேன். கேலி கிண்டல் பண்ணாலும் உதவி செய்யறானே. அந்த நன்றி விசுவாசம் தான், வேற என்ன?''

கிருஷ்ணனிடம் வருத்தம் கொப்பளித்தது. ''உன்னைப் பார்த்தா பாவமா இருக்குப்பா...''

''எதுக்குண்ணே பாவப்பட்டுக்கிட்டு...? வேலை ஏதாச்சும் இருந்தா சொல்லுங்க...''

''உனக்கு வேலை கிடைக்கணும்னா, நான் ஒரு வழி சொல்வேன், கேட்பியா...?''

''என்ன பண்ணணும்? இந்தக் கிணத்துல குதிக்கணுமா சொல்லுங்க... குதிக்கறேன்...''

''ஐய்யய்யோ... வாழ வழி கேட்டுட்டு கிணத்துல குதிக்கிறேன்னு சொல்றியேப்பா...''

''வெறுத்துப் போச்சுண்ணே... தெருத் தெருவா அலைஞ்சு, பழைய பேப்பர் கூட வாங்கிப் பார்த்துட்டேன். ஒண்ணந்தேற மாட்டேங்குது.''

''மனசு விட்டுடாதே. எப்பவும் வேலைங்கறது உச்சிக் கிளைல இருக்கற, மாங்கா மாதிரி. அவ்வளவு சுலபத்துல விழாது. நம்மாலையும் ஏறிப் பறிக்க முடியாது. ஆனா அந்த மாங்கா கிடைச்சுட்டாலோ, அப்புறம் எதுவுமே தேவைப் படாது.''

''மாங்கா, தேங்கா கதையை விடுங்கண்ணே. நல்ல வேலை இருந்தா சொல்லுங்க...''

''வேலைக்கு வழி சொல்றேன். நம்ம ஹாஸ்டல் இருக்கற தெருவோட முடிவுல, ஒரு பிள்ளையார் கோவில் இருக்கு... தெரியும் தானே?''

''ஏன் தெரியாம... வலம்புரி வினாயகர்தானே?''

"அவரேதான்... அவரை விடாதே, கெட்டியாப் பிடிச்சுக்கோ. அவர் நிச்சயம் உனக்கொரு வேலை வாங்கித் தருவார்..."

வாட்ச்மேன் சொன்னதைக் கேட்கவும், கிருஷ்ணன் முகம் காற்றுப் போன பலூன் போல புசுக்கென்று ஆகி விட்டது.

"என்னப்பா... உனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லையா?"

"இப்ப சுத்தமா யார் பேர்லையும் நம்பிக்கை இல்லைண்ணே... நீங்க சொல்ற பிள்ளையாரை நான் கும்புடாத நாளே கிடையாது. அவரும் எனக்கென்னன்னு இருக்காருண்ணே. நடக்கற விஷயமா எதையும் சொல்ல மாட்டேங்களா?"

"ஏம்ப்பா பிள்ளையார் உனக்கு அருள் செய்ய மாட்டார்னு நினைக்கறியா?"

"ஆளை விடுங்கண்ணே... வெந்த புண்ணுல வேல் பாய்ச்சறீங்களே..." என்று கூறிவிட்டு அங்கிருந்து கிளம்பினான், கிருஷ்ணன்.

வேலையா... வெட்டியா...? அப்படியே காலை வாக்கிங் கிளம்பி விட்டான்.

போகிற வழியில் வாட்ச்மேன் சொன்ன பிள்ளையார் கோவிலும் வந்தது. நின்று ஒரு பார்வை பார்த்தான். பெரிய கோவில், கூட்டமும் நிறைய இருந்தது.

"உனக்கென்ன சாமி... ராஜா மாதிரி நல்லாத்தான் இருக்கே. இங்க நம்ப பொழப்புதான் நாய் பொழப்பாப் போச்சு." என்றபடியே, உள்ளே கூடப் போகாமல், தொடர்ந்து நடந்தான். உள்ளே போகப் பிடிக்கவில்லை. எவ்வளவோ முறை போய் முறையிட்டாயிற்று.



ஆனால் அவரோ கண்டு கொண்ட மாதிரியே தெரியவில்லை.

வெகுநேரம் நடந்தவன் கார்ப்பரேஷன் பள்ளிக்கூட திண்ணை ஒன்றில்தான் போய் முடங்கினான். நன்கு ஜிலுஜிலுவென்று இருக்கும். அங்கங்கே வேலை வெட்டி இல்லாத சிலர் அமர்ந்து சீட்டாடிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களோடு சேரவும் பிடிக்கவில்லை. பசி வேறு. பேசாமல் அப்படியே ஒரு ஓரமாக சுருண்டு படுத்து விட்டான்.

சிறிது நேரம் போயிருக்கும்.

யாரோ இரண்டு பேர் அவன் தலைமாட்டில், கிசுகிசுவென்று பேசிக் கொள்வது காதில் கேட்டது.

"இன்னிக்கு ராத்திரி எப்படியும் அந்த உண்டியலை உடைச்சுட வேண்டியதுதான்..."

"சத்தம் அதிகமில்லாம உடைக்கணும். எதுக்கும் குளோரோஃபாம் தடவுன கர்ச்சீப்பை, கைல வெச்சுக்குவோம். தப்பித் தவறி யாராவது வந்தா, ஒரே அமுக்கு..."

கிருஷ்ணனுக்குப் பகீர் என்றது. சட்டென்று எழுந்து அமர்ந்தான். பேசிக் கொண்டிருந்த அவர்களும் அதே வேகத்தில் எழுந்து ஓடிப்போனார்கள்.

"பாவிங்களா... உண்டியலை உடைக்கத் திட்டம் போடறீங்களா. ஹூம்! எந்தக் கோவில் உண்டியலோ... அதுல எவ்வளவு பணங்காசு இருக்குதோ...?" கிருஷ்ணனால் முணுமுணுக்கத்தான் முடிந்தது.

மறுநாள்!

வழக்கம்போல நிதானமாக ஹாஸ்டலை விட்டு வெளியே போகப் போனபோது, பரபரப்போடு ஓடி வந்தான் வாட்ச்மேன்.

"என்னண்ணே... எதுக்கு இந்த வேகம்?"

"எல்லாம் காரணமாத்தான். நீ வேலை கேட்டுக்கிட்டே இருந்தேல்ல..."

"ஆமாம்... அதுக்காக இன்னிக்கு பிள்ளையார் கோவிலுக்குப் போய்க் கும்புடச் சொல்றீங்களா?"

"கும்புட மட்டுமில்ல... அவரையே இனி கெட்டியாப் பிடிச்சுக்க. ஏன்னா அவர்தான் இனி உன் எஜமானர்..."

"என்னண்ணே சொல்றீங்க. எனக்கு ஒண்ணும் புரியலை."

"புரிய என்ன இருக்குது? நேத்து ராத்திரி யாரோ இரண்டு திருட்டுப் பசங்க பிள்ளையார் கோவில் உண்டியலை உடைக்கப் பார்த்திருக்காங்க. ஆனா முடியல. சத்தம் கேட்டு எல்லாரும் எழுந்திரிச்சு போகவும் தப்பிச்சு ஓடிட்டாங்க... அதனால இன்னிக்குக் காலைல தெருவில இருக்கிற எல்லாரும் ஒண்ணாச் சேர்ந்து முதல்ல எடுத்த முடிவு என்ன தெரியுமா?"

"என்னண்ணே...?"

"ஒரு நல்ல வாட்ச்மேனை வேலைக்கு வைக்கறதுதான். என்னைக் கேட்டாங்க. எனக்குத்தான் ஹாஸ்டல் இருக்குதே... நீ போறியா?"

"அண்ணே..."

"யோசிக்காதே... மூணுவேளைச் சாப்பாடு போட்டு தங்க இடம் கொடுத்து, சம்பளமும் தர்றாங்க. தினம் சாமியா கும்புட்டுகிட்டு அக்கடான்னு இருக்கலாம்... என்ன சொல்றே?"

"அண்ணே..."

"என்னப்பா சொல்றே... சம்மதமா உனக்கு?"



"மனப்பூர்வமான சம்மதம்ணே. அந்தச் சாமியை, நான் என்னவோ நினைச்சேன். அது மனசு வெச்சா எப்படி வேணும்னாலும் வழிகாட்டுங்கறது புரிஞ்சுப் போச்சு.

என்னைப் பார்த்துக்க, நான் அதுகிட்ட வழிகேட்டா, 'நீ என்னை வந்து பார்த்துங்க; உன்னை நான் பாத்துக்கறேன்'னு சொல்லாம சொல்லிடிச்சே..."

கிருஷ்ணன் பக்தியோடு கண்கள் கசிந்தான்.

ஆமோதிக்கிற மாதிரி, அந்தப் பிள்ளையார் கோவிலில் இருந்து மணிச் சத்தம் ஒலிக்கத் தொடங்கியது.

## 9. முதல் இரவு

இரவு மணி பத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. கல்யாண வீட்டின் களேபரங்கள் அடங்கின மாதிரியே தெரியவில்லை.

வருபவர்களும் போகின்றவர்களுமாக ஒரே கூட்டம். இது ஒரு பக்கமிருக்க, மறு பக்கத்தில் முதலிரவுக்கான அலங்கார வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டிருந் தன.

பட்டு மெத்தை. அதன் மேல் பூக்கொட்டாரம்... போதா தற்கு படுக்கை மேலெல்லாம் மல்லிகைப் பூக்கள் ஒரு ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும் நேரப் போகின்ற ஒரு உறவுக்குத் தான் இத்தனை அலங்காரம்.

இன்று ஒருநாள் தான். அதன் பின் அந்த விஷயம் பழையதாகி பாரமுமாகி விடப் போகிறது. படுக்கை மேல் பூக்களைத் தூவி ஊதுபத்தியை ஏற்றி வைக்கும் போது ஆனந்தி கூட அப்படித்தான் நினைத்தாள். நினைப்பு சிரிப் பாக எதிரொலித்தது. கவனித்துக் கொண்டே இருந்தாள் கவிதா.

''என்ன ஆனந்தி... எதுக்கு சிரிக்கறே?'' -கேட்டாள்.

''நான் சிரிக்கறத பார்த்துட்டையாக்கும்?''

''ஆமா... நான் உன்னையே தானே பாத்துகிட்டு இருக்கேன்...''



''என்னை எதுக்குநீ பாக்கறே...?''

''இல்ல... பாத்துப் பாத்து அலங்காரம் பண்ணும் போது சிரிச்சியே... அதுல ஏதோ இருக்குன்னு தோணுது. அது என்னன்னு சொல்லேன்...''

''விடமாட்டியே...?''

''நிச்சயமா விடமாட்டேன். நீ சிரிச்சதுக்குக் காரணத் தைச் சொல்லியே தீரணும்...''

''சரி சொல்லித் தொலைக்கிறேன். இந்த மாதிரி பூ அலங்காரம்லாம் சரியான சீட்டிங்னு தோணிச்சு சிரிப்பு வந்துடிச்சு...''

''சீட்டிங்கா... எப்படி?''

''பின்ன என்ன.. இந்தப் பூப்பந்தல், பால்பழம்லாம் எதுக்காக?''

''எல்லாம் ஒரு ரொமான்ஸ் மூடுக்காகத் தான்...''

''இல்லாட்டி மூடே வராது பார்...''

''அப்படி இல்ல ஆனந்தி... முதல் முதலா நடக்கப் போற ஒரு சந்தோஷமான புது விஷயம். அது காலத்துக்கும் ஞாபகம் இருக்கணும் இல்லயா?''

''இல்லடி... இது ஒரு ஏமாத்துவேலைடி. இது ஒரு சொர்க்கலோகம்னு காட்டி மாப்பிள்ளையும், பொண்ணை யும் உள்ள தள்ளி விட்டு கதவை மூடிடறாங்க. அவங்களும் ஏதோ காணாததைக் காணப் போறதா நினைச்சு கிறங்கிப் போயிடறாங்க. ஆனா உண்மைல என்ன நடக்குது?''

''என்ன நடக்குது?''

''இப்ப என்னையும் உன்னையுமே எடுத்துக்குவோமே... ஒண்டுக் குடித்தனத்துல இருக்கோம். மாமியார், மாமனார், மச்சினன், மச்சினின்னு வீடு பூரா ஒரே கூட்டம். இவங் கள்ளாம் எப்ப தூங்குவாங்கன்னு பாத்துருந்து பதுங்கிப்

பதுங்கிப் போய் ஒரு ரூம்ல அடையறதுக்குள்ள வேர்த்து விறுவிறுத்து போய்டுது. அப்ப கூட வீட்ல யாராவது தும்முனாலோ இல்ல இருமுனாவோ மூடு அவுட் ஆயிடுது.''

''ஆகக்கூடி திருட்டுத்தனமாவே வாழ்நாள் பூரா கூடப் போற ஒரு விஷயத்தோட ஆரம்பத்தைக் கவனிச்சியா... பூ என்ன... பால்என்ன... பழம் என்ன?''

''அதுசரி... இன்னிக்கு ஒருநாளாவது அனுபவிச்சிட்டுப் போகட்டுமே... அதுகூட வேண்டாம்கறியே நீ...''

''அப்படி இல்லடி... கல்யாண பந்தம்கறது ரொம்ப பெரிய விஷயம்டி. துரதிர்ஷ்டவசமா ஆணும்சரி, பெண்ணும் சரி இந்த விஷயத்துல குறிப்பா முதல் இரவை ஒரு மோக ராத்திரியா தான் பார்க்கறாங்க. எத்தனை பேருக்கு முதல் ராத்திரியா இருக்கு?''

''முதல் ராத்திரிக்கு முந்தியே ருசி கண்ட ஜென்மங்கள் எத்தனை பேர்?''

-ஆனந்தி தன் பேச்சில் எங்கேய்யோ போனாள். முதல் இரவுக்கே தான் ஒரு எதிரி என்கிற மாதிரி தான் இருந்தது அவளது பேச்சும் செயலும்.

கவிதா தலையிலடித்துக் கொண்டாள்.

ஆனந்தியின் புருஷன் துபாயில் வேலையில் இருக்கிறான். வருஷத்துக்கு ஒரு மாசம் வந்துவிட்டுப் போகிறான். மீதி 11 மாதம் அவளுக்கு காச்சப்பாடு தான். அதனால்தான் அவள் அப்படிப் பேசுகிறாள் என்று தோன்றியது கவிதாவுக்கு.

ஆனால் மாப்பிள்ளை ஸ்ரீராமோ இதை வேறு மாதிரியாகத் தான் நினைத்தான். அவர்களுக்குத் தெரியாது. அவன் அந்த அறையின் மறுபக்கத்தில் உள் பால்கனியில் தான் அமர்ந்திருந்தான்.



அவனுக்கும் இந்த முதல் இரவுப் பந்தல் அலங்காரம் எல்லாம் சிரிப்பாகத் தான் இருந்தது. எல்லாம் சினிமா கற்றுக் கொடுத்த விஷயம் என்று கூட நினைத்தான்.

ஆனந்தி சொன்ன மாதிரி சரியான ஒருநாள் கூத்து... முதல் நாள் மட்டுமே இனிக்கும் விஷயம். அதன் பின் நினைத்தாலே சிரிப்பைத் தரும் விஷயமாகவும், நினைத்துப் பார்க்கவும் கசப்பாகவும் மாறி விடுகிறதே?

நெடு நேரம் வரை இப்படியே பல விதமான நினைவுகளோடு அமர்ந்திருந்தான். உள்ளபடியே இது தான் அவனுக்கு உண்மையான முதல் இரவா என்றால் இல்லை என்றுதான் அவன் மனசாட்சி சொல்லும். கல்லூரி காலத்தில் சில தீய நண்பர்கள் அவனை பலமுறை வேசிகளிடம் அழைத்துச் சென்றிருக்கின்றனர்.

அந்த நினைப்பெல்லாம் ஸ்ரீராமுக்குள் எழும்பியது. மனதைக் குத்தியது. இன்று நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இப்படிப்பட்டவர்கள் தான் என்று சமாதானம் சொல்லிக் கொண்ட போதிலும், அது ஒரு குற்றமாய் குத்தத் தொடங்கி விட்டது.

முதல் இரவை ஒரு புனித இரவாய் ஆக்கும் முயற்சி ஒருபுறம். மறுபுறமோ அது ஒரு உவ்வா முள்ளாய் குத்திக் கொண்டிருக்கும் மனநிலை. நடுவில் கையில் பால் சொம்புடன் அவன் மனைவியாக அன்று தான் உறவு கொண்டிருக்கும் நந்தினி வந்து சேர்ந்தாள்.

கட்டில் அலங்காரத்தை அப்பொழுது தான் அவள் பார்க்கிறாள். அப்படியே அவனையும் பார்த்தாள். அவன் ஒருநாற்காலியில் சம்மந்தமே இல்லாதவன் போல அமர்ந்திருந்தான். நெருங்கினாள். பால் சொம்பை அருகில் வைத்தாள். அவனும் நிமிர்ந்து பார்த்தான்.

''உட்கார்...''

-அவளும் உட்கார்ந்தாள்.

"வெட்கப்படாதே... எனக்கு இந்த பூ அலங்காரம், அது இதுன்னு எதுவுமே பிடிக்கலை..."

-சகஜமாகப் பேச ஆரம்பித்தான்.

அவள் ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

"உனக்குப் பிடிச்சிருக்கா?"

-அவன் கேள்வி முன் பதில் சொல்லாமல் சற்றுத் திணறினாள்.

"ஏன் பேச மாட்டேங்கற... சும்மா பேசு."

"என்னத்த பேச... இதெல்லாம் கால காலமா நடக்கற விஷயங்கதானே?"

"எதைச் சொல்றே?"

"இந்த முதல் இரவு. அலங்காரம். பொம்பள வெட்கப் பட்றது."

"சரியா சொன்னே... இங்க எல்லாம் இருக்கு. ஆனா ஒண்ணு மட்டும் மிஸ்ஸிங்."

அவன் சொன்னதைத் தொடர்ந்து, அது என்ன என்பது போல் ஒரு கூர்மையான பார்வை அவளிடம்.

"புரியலியா...?"

"இல்ல... புரியல..."

"இங்க எல்லாம் இருக்கு. உண்மையைத் தவிர"

"அப்படின்னா..."

"இதோ பார் நந்தினி. இந்த நிமிஷம் நீ என் மனைவி. நான் உனக்கு புருஷன். நான் அழகில்லாதவனா இருக்க லாம். சம்பாத்யம் இல்லாதவனா இருக்கலாம். படிப்பில்லா தவனா இருக்கலாம். குடிகாரனா எப்படி வேணா இருக்க லாம். இது உனக்கும் பொருந்தும். ஆனா கணவன்,



மனைவி உறவுக்குள்ள எது இல்லாம கூட இருக்கலாம். உண்மை மட்டும் இல்லாம போய்ட்டா அவ்வளவுதான்."

அவன் பெரிதாக பீடிகை போட்டு உண்மை வேண்டும் என்று சொல்லவும், அவளுக்கு நெஞ்சையடைத்தது. ஒரு வேளை இவனுக்கு தான் ஒருவனைக் காதலித்ததும் காதலித்தவனோடு உறவு வைத்திருந்ததும் தெரிந்து விட்டதோ?

கண்களில் ஊசி ஏறினது போல ஆகி விட்டது. இதயமும் தாறுமாறாகத் துடிக்கத் தொடங்கியது.

"இப்ப ஏன் இப்படி எல்லாம் பேசறீங்க?" திக்கித் திணறி கேட்டாள்.

"நான் கேக்கல... இந்த சூழ்நிலை என்னைக் கேட்க வைக்குது"

"சூழ்நிலையா?"

"ஆமாம்... இந்த மலர்ப்படுக்கை, பால், பழம், அப்புறம் நீ..."

"நான்... நான்..."

"ஆமாம்... நீயும் தான்... நீ உன் உறவுக்காரங்க. என் உறவுக்காரங்க எல்லோரும் நாம இந்த ராத்திரியில இருந்து ஒண்ணாகக் கலந்து சந்தோஷமாக ஒரு புது வாழ்க்கையைத் தொடங்கணும்னு நினைக்கறாங்க... எவ்வளவு பெரிய எதிர்பார்ப்பு. ஆனா அதுக்கு எனக்குத் தகுதி வேண்டாமா?"

"அப்படின்னா?"

"நான் சொல்லப் போறத கேட்டு அதிர்ச்சி அடையாதே. உன்கிட்ட நான் எதையும் மறைக்க விரும்பலை. உண்மை யான நிர்வாணம்கறது ஆடைகளை அவிழ்த்துப் போட்றதுல இல்ல. மனசுல இருக்கற உண்மைகளை அவிழ்க்கறதுல தான் இருக்கு. நானும் அப்படி சில உண்மைகளைப்

பேசப்போறேன். உண்மைல பெண் சுகம் எனக்கு புதுசு இல்ல. ஏற்கனவே நான் அனுபவிச்சிருக்கேன். ஆனா இனி எந்தக் காரணம் கொண்டும் உன்னைத் தவிர வேற பெண்ணைத் தொட மாட்டேன். இது சத்தியம்...''

மளமளவென்று பள்ளிக்கூடத்து பிள்ளைகள் வாய்ப் பாடு சொல்லுகிற மாதிரி சொல்லி முடித்தான். நந்தினி கத்துவாள். கதறுவாள். குறைந்தபட்சம் முகத்தையாவது திருப்பிக் கொள்வாள் என்று நினைத்தவனுக்குப் பெரிய ஏமாற்றமளிப்பது போல் இருந்தது அவள் பார்வை.

''என்ன நந்தினி... உனக்கு அதிர்ச்சியா இல்லையா?''

''இல்லை.''

''ஆச்சரியமாயிருக்கே...''

''இதுல ஆச்சரியப்பட என்ன இருக்கு... நானும் உங்கள மாதிரிதான். எனக்கும் இந்த சுகம் புதுசு இல்ல...!''

-அவள் அப்படிச் சொன்ன மறு நொடி அவன் முகத்தில் ஏராளமான அதிர்ச்சி.

''என்னங்க... உங்க நிர்வாணத்தை நான் தாங்கிக்கிட்ட மாதிரி என் நிர்வாணத்தை உங்களால் தாங்கிக்க முடிய லியா?'' அவள் அவன் மோவாயில் கைவைத்துக் கேட்டாள்.

''இரண்டு பேருமே மொத்தத்துல அந்தக் கட்டிலுக்குத் தகுதியில்லாம போய்ட்டோம் ஆனாலும்...''

''ஆனாலும்...''

''கணவன், மனைவி உறவுங்கறது நான் சொன்ன மாதிரி அன்பு, பாசம் இவைகளை விட அதிகபட்சம் உண்மை களால் ஆனது. அது நம்மகிட்ட இருக்கு. இனி நம்ப வாழ்க்கை சிறப்பாதான் இருக்கும்னு நான் நினைக்கிறேன். நீ என்ன நினைக்கிறே?''



அவன் கேட்க, அவள் பதில் கூறாமல் அப்படியே அங் கேயே அந்த கட்டில் வேண்டாம் என்கிற மாதிரி அவனைக் கட்டிக் கொண்டாள்.

விடிந்து விட்டது.

அலங்கரித்த கட்டில் அப்படியே இருந்தது. எல்லோருமே பார்த்துவிட்டு நந்தினிக்கும், ஸ்ரீராமுக்கும் ஒத்து வரவில்லை போல் இருக்கிறது. அவ்வளவு தான் அவர்கள் வாழ்க்கை என்பது போல நினைக்க, அவர்களோ படு நிம்மதியாக, உற்சாகமாக, சந்தோஷமாகத் தங்கள் புதிய வாழக்கையைத் தொடங்கியிருந்தார்கள்.

# 10. என்ன இல்லை என்னிடத்தில்

சோர்வாய் இருந்தான் ராஜேந்திரன். மேஸ்திரி முருகேசன் கூட ஆளனுப்பி இருந்தார்.

"அண்ணே பாண்டியன் நகர்ல கட்டிட வேலை நடந்துகிட்டு இருக்குதாம். மேஸ்திரி உங்களை பூச்சு வேலைக்கு வரச் சொன்னாரு" வந்து நின்று வேலைக்குக் கூப்பிட்டவனைப் பார்த்து ஒரு முறைப்பு. அதன் பின் அவன் நிற்பானா? ஓடியே போய் விட்டான்.

அவன் போன மறுநொடியே திரும்பவும் சோர்வு ஆக்கிரமித்துக் கொண்டது. ஒரு குவார்ட்டர் அடித்து விட்டு அப்படியே முட்டை பிரியாணி, மீன் வறுவல் என்று ஒரு பிடி பிடித்துவிட்டு போதையோடு படுத்துக் கிடக்க வேண்டும் போல தோன்றியது.

அதற்கெல்லாம் பணம் வேண்டுமே? வேலைக்குப் போனால் ஒரு நூத்திப்பத்து ரூபாய் வரை கிடைக்கும். ஆனால் பெண்டு கழண்டு விடுமே? அதோடு முருகேசன் மேஸ்திரி ஒரு மாதிரி டைப். காசை அவன் கையில் தரமாட்டார். வீட்டிற்கு வந்து அவன் அம்மாவிடம் தான் தருவார். அவனிடம் தந்தால் ஒயின் ஷாப்புக்கோ, இல்லை வைகை ஆத்தோரமாய் கள்ளச் சாராயத்தைத் தேடியோ கிளம்பிப் போய் விடுவான் என்று அவருக்குத் தெரியும்.

எப்போதும் ஜாலியாக இருக்க வேண்டும். உடம்பு வியர்க்கவே கூடாது. ஆனால் நடைமுறை வாழ்வில் அது



சாத்யமா? காசிருந்தால் தானே சொகுசாய் திரியலாம்? பாழாய்ப் போன பணமோ பணக்காரர்களிடமே சேருகிறது. காண்ட்ராக்டர் காளியப்பன் சரியான காசுக்காரர். பல தலைமுறைக்குச் சொத்து உள்ளவர்.

அவர் இடத்தில் மட்டும் ராஜேந்திரன் இருந்தால், ஈஸிசேரில் உட்கார்ந்தபடி கால்மேல் கால் போட்டுக் கொண்டு, நல்ல பாரின் விஸ்கியாக வாங்கி டீ குடிப்பது போல் கொஞ்சம் கொஞ்சமாய் சூப்பிச் சூப்பி குடித்தே பொழுதே கழித்திருப்பான்.

ஆனால், அவரோ பணம் பணம் என்று அலைகிறார். தார் ரோடு காண்ட்ராக்ட்டில் இருந்து சைக்கிள் ஸ்டாண்டு, ஸ்டால், கேன்டீன் என்று அவருக்கு தான் எத்தனை பிசினஸ்?

பணமும் அருவியாகக் கொட்டுகிறது. பார்க்கப் பார்க்க பொறாமையாக இருக்கிறது. சுத்த அனுபவிக்கத் தெரியாத மனுஷன் என்று, அவரைப் பார்க்கும் போதெல்லாம் நினைப்பான். அப்படியே ஒருபாழும் ஏழையாய் பிறந்து விட்டோமே என்று மனசுக்குள் குமுறுவான்.

ராஜேந்திரனுக்கு அப்பா இல்லை. அவன் சின்னப் பையனாக இருக்கும் போதே ஒரு பஸ் ஆக்சிடெண்டில் செத்து போய் விட்டார். அம்மா ராஜேஸ்வரி தான் அவனை வளர்த்து ஆளாக்கியவள்.

பாவம் அவள் பத்துப்பாத்திரம் தேய்ப்பது, நல்லதண்ணீர் எடுத்து வருவது, துணி துவைப்பது என்றே அவள் வாழ்க்கை போய்க் கொண்டிருக்கிறது.

இதிலெல்லாம் என்ன பல ஆயிரங்களா சம்பாதிக்க முடியும்? நூறும் இருநூறுமாய் சம்பாதித்தே ராஜேந்திரனையும் ஆளாக்கி விட்டாள்.

ஆனால் சரியாகப் படிக்க வைக்கத் தான் முடியவில்லை. எட்டாம் வகுப்புக்கு மேல் அவனுக்கும் படிக்கப் பிடிக்க வில்லை.

அதனால் என்ன... ஒண்ணுமே படிக்காத காமராஜர் முதல் மந்திரியாகவே ஆகவில்லையா என்ன? எவ்வளவோ தொழில் அதிபர்கள் குப்பைக்காகிதம் பொறுக்கிய நிலை யில் தான் வாழ்க்கையையே தொடங்கி இருக்கிறார்கள்.

ஆனால் அவர்களிடம் ஒழுக்கமும், நம்பிக்கையும் இருந்தது. ராஜேந்திரனிடம் அது இல்லை. அதனால் தான் கட்டிட வேலை பழகியும். அதில் ஈடுபட மனசு மறுக்கிறது. எப்படியோ மதுப்பழக்கம் தொற்றிக் கொண்டு விட்டது.

எப்போதும் போதையில் இருப்பதைத் தான், அது சந்தோஷம் என்று அவனுக்குச் சொல்லித் தந்திருக்கிறது. அப்புறமாய் சிகரெட், கவளம் கவளமாய் புகை விடும் போது பரபரவென்று இருக்கிறது. அதில் கஞ்சாவைச் சேர்த்து இழுத்தாலோ, வானத்தில் விமானத்தின் தயவில்லா மலே பறக்க முடிகிறது. ஆஹா என்ன ஒரு சுகம். இருந்தா லும் இந்தச் சுகங்களை அடைய காசு தேவையா இருக் கிறதே?

அதற்கு எங்கே போக? ராஜேந்திரனிடம் ஒரு நல்ல விஷயம். இத்தனை ஆசைக்கு நடுவிலும் யார் செய்த புண்ணியமோ, திருட்டுப் பழக்கம் மட்டும் அவனைத் தொற்றிக் கொள்ளவில்லை.

பயம் தான் காரணம். மாட்டிக் கொண்டால் எலும்பை எண்ணி விடுவார்களே? காசில்லாத சமயங்களில் துண்டு பீடியைப் பிடித்தபடி சும்மாக்கிடந்தாலும் கிடப்பான். பிக்பாக்கெட் அடிப்பது பற்றியோ, இல்லை யாரையாவது ஏமாற்றுவது பற்றியோ யோசிக்கக் கூடமாட்டான்.



இதோ இப்போது கூட முருகேசன் மேஸ்திரி ஆள் அனுப்பியும், வேலைக்குப் போக பிரியமின்றி சிமெண்டுத் திண்ணையில் கட்டையைக் கிடத்தி விட்டான்.

இனி கனவு காண்பான். கண்ணை மூடினாலே கனவு தான். அவன் கனவுகள் எல்லாமே விசித்திரமானவை. கனவில் அவனுக்கு லாட்டரியில் லட்சம் விழும். அப்புற மென்ன...? ஒரு சேர பத்துப்பதினைந்து விஸ்கி பாட்டில் களாய் வாங்கி வந்து ஊற்றி ஊற்றிக் குடிப்பான். நல்ல உயர்ந்த ரக சிகரெட்டுகளை நடுவில் ஊதி ஊதிப் புகை கக்குவான்.

தெரு நாய் வந்து அருகில் படுத்தாலும் தெரியாது. நிஜத்தில் தான் அதெல்லாம் சாத்யப்படுவதில்லை. கனவு காண மனசும், கற்பனையும் போதுமே? நடுவில் பசிக்கும்.

அதைப்பற்றிக் கவலையில்லை. அவன் அம்மா ராஜேஸ் வரி தட்டில் சோற்றைப் போட்டுக் கொண்டு வந்து வைத்து விடுவாள். இப்போதும் அப்படித்தான் நடந்தது.

அவனும் ஆசை ஆசையாகச் சாப்பிட்டான். பழைய சோறும் பச்சைவெங்காயமும் தான் அன்றைக்கு ராஜேஸ் வரியால் போட முடிந்தது. இருந்தும் அதை நட்சத்திர ஓட்டல் பிரியாணியாக நினைத்து விழுங்கினான்.

அவளும் மகனை கண்கள் கலங்கப் பார்த்தாள்.

''இப்படி வேலைக்குப் போகாம சதா கனவு கண்டு கிட்டிருந்தா எப்படிடா தம்பி?''

''எப்படிடான்னா... எனக்கு இப்படி இருக்கத் தான் பிடிக்குது.''

''இப்படி இருந்தா சோறு கிடைக்குமா?''

''ஏன் நீ இல்லை சோறு போட?''

''நான் இல்லாட்டி என்ன பண்ணுவே?''

"அதப்பத்தி அப்ப யோசிக்கலாம். இப்ப எதுக்கு அந்தப் பேச்சு?"

"இப்படியா பொறுப்பில்லாம பதில் சொல்லுவே?"

"பொறுப்பு, பெரிய புடலங்கா பொறுப்பு. என்னை ஏன் பெத்தே?"

"இது என்னடா தம்பி கேள்வி?"

"என்ன கேள்வின்னா... நான் மட்டும் ஒரு பணக்காரன் வயித்துல பொறந்துருந்தா எவ்வளவு நல்லாருக்கும்?"

"யார் வயித்துல பொறந்தாலும் வேலை செஞ்சு சாப்பிட்டாத் தான் தம்பி மரியாதை."

"பெரிய வேலை. பத்து பாத்திரம் தேய்க்கறதும், துணி துவைக்கறதும் ஒரு வேலையா. கட்டிடத்துக்கு கலவை பூசறதுல்லாம் ஒரு தொழிலா? தொழில்னா காண்ட்ராக்டர் காளியப்பன் மாதிரி ஆயிரமாயிரமா சம்பாதிக்கணும். ஆனா அவரும் துப்புகெட்ட மனுஷன். சம்பாதிக்கத் தெரிஞ்ச அவருக்கு அனுபவிக்கத் தெரியலை."

"இப்படி எகனைக்கு மொகனை பேசாதே தம்பி. அவரும் ஆரம்பத்துல அஞ்சுக்கும், பத்துக்கும் அல்லாடித் தான் மேல வந்திருக்காரு."

"அவரை உடு. எவ்வளவு பணக்கார பசங்க பொறக்கும் போதே காரு. பங்களான்னு அனுபவிக்கறாங்க? நானும் அந்த மாதிரி பொறந்திருந்தா எவ்வளவு நல்லா இருக்கும்?"

"அதெல்லாம் நம்ம கையிலையா தம்பி இருக்குது? அப்படியே பொறந்தாலும் கஷ்டப்பட்டாதாம்பா மதிப்பு."

"இதெல்லாம் சும்மா... நான் ஒத்துக்கமாட்டேன்."

"டேய். சொல்றத கேளுடா. இப்படி இருந்தா அழிஞ்சு போயிருவேடா..."



"அழிஞ்சு போக என்னிட்ட என்ன இருக்கு? நானே ஆண்டி."

"அப்ப இப்படியே கனா கண்டுகிட்டு என் கழுத்தை அறுப்பியா?"

"என்னை ஏன் ஒரு ஏழையா பெத்தே? அதுக்கு இதுதான் தண்டனை. அனுபவி."

ராஜேந்திரனும், அவளும் மாறி மாறிப் பேசிக் கொண்டதன் முடிவு இறுதியில் இப்படித்தான் முடிந்துபோனது. அவளும் அதற்கு மேல் அவனிடம் பேசுவதில் அர்த்தமில்லை என்று அழுதபடியே விலகிப் போனாள்.

கொஞ்ச நேரம் போயிருக்கும் நிழலாடியது. நிமிர்ந்து பார்த்தான். புரோக்கர் வரதன் நின்று கொண்டிருந்தான்.

"என்னய்யா... எங்க வந்தே?"

"ஒண்ணுமில்ல சும்மா உன்னைப் பாக்கத்தான் வந்தேன்."

"சும்மால்லாம் எதுக்கு பாக்க வர்றே. பிரயோஜனமா ஏதாவது இருந்தா சொல்லு."

ராஜேந்திரன் கேட்க, வரதன் அவன் எதிரில் ஒரு மேல்நாட்டு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தான். அது ராஜேந்திரனின் ஆசையையும் தூண்டிற்று.

"என்னய்யா... சிகரெட்டெல்லாம் கொழிக்குது?"

"உனக்கும் வேணுமா?"

"கேக்கலாமா...? கொடுய்யா."

வரதன் கை நீட்ட ராஜேந்திரன் சிகரெட்டை வாங்கி பற்ற வைத்து படு ஆசையா புகையையும் விட்டான்.

"எப்படி இருக்கு?"

"சூப்பர்."

''ஆமா வேலைக்குப் போவலையா?''

''போவல.''

''போனாத்தானே காசு பார்க்கலாம்?''

''எங்க அந்த மேஸ்திரி என் ஆத்தா கையிலைல கூலியத் தருவான்.''

''அது சரி. உன்கிட்ட தந்தா தான் நீ தண்ணி அடிக்க போயிடுவியே?''

''எனக்கு எப்பவும் சந்தோஷமா ஜாலியா இருக்கணும். அதான் குறி.''

''சரி இப்ப என்கூட வர்றியா?''

''எங்க?''

''தண்ணி அடிக்கத்தான்.''

''காசு''

''அதபத்தி உனக்கென்ன?... ஒரு வாரம்னாலும் நீ போதையிலையே இருக்கலாம். வர்றியா?''

''பார்றா. என் கனவுல வர்றவன் கேக்கற மாதிரியே கேக்கறியே. கிளம்பு முதல்ல.''

ராஜேந்திரன் துள்ளிக் கொண்டு கிளம்பினான்.

(நல்ல மேல் நாட்டு சரக்காக வாங்கி ஊற்றி விட்டான் வரதன். ராஜேந்திரனுக்குப் பயங்கர குஷியாகி விட்டது. வரதனின் காலிலேயே விழுந்து கும்பிட்டான்.)

''ஏய்... ஏய் எழுந்திரு. என்னை சாமியாக்காதே. நான் உன் சினேகிதன்.''

''இல்ல... நீ என் கடவுள். குவார்ட்டருக்கு வழி இல்லாம படுத்திருந்தேன். புல்லே வாங்கிக் கொடுத்து அசத்திட்டே. நீ கடவுள் வரதா கடவுள்.''



''இந்த பாட்டிலுக்கே இப்படி சொல்றியே. இதப்பார்.'' வரதன் ஒரு மாத்திரையைக் காட்டினான். ''என்ன இது?''

''சாப்பிட்டா ஒருவாரம் பால் நுரை மேலே படுத்து கிட்டிருப்பே. அவ்வளவு சுகமா இருக்கும்.''

''அப்படியா. முதல்ல கொடு.''

வரதனும் தர, ராஜேந்திரனும் விழுங்க.

ஒரு வாரம் ஓடி விட்டது. எங்கோ ஒரு மரத்தடியில் ராஜேந்திரன் கிடப்பதாக யாரோ வந்து ராஜேஸ்வரியிடம் சொல்ல ஓடினாள். உண்மைதான்.

ஒரு மரத்தடியில் அலங்கோலமாய்தான் கிடந்தான் ராஜேந்திரன். தொட்டுத் தூக்கியபோது வயிற்றுக்குப் பக்கத்தில் ஏதோ கட்டு.

ராஜேஸ்வரி அதை விலக்கிப் பார்த்தாள். பகீரென்றது. டாக்டர் படுசீரியசான முகத்தோடு சொல்லத் தொடங் கினார்.

''உங்க பையன்கிட்ட இருந்து யாரோ ஒரு டாக்டர் கிட்னியை எடுத்துருக்கார். ஆமா இது இவருக்குத் தெரிஞ்சு நடந்துச்சா. இல்ல தெரியாமலா?'' டாக்டர் கேட்க ராஜேந்திரனுக்குத் தலையைச் சுற்றியது.

''என்ன டாக்டர் என்னென்னவோ சொல்றீங்க. எனக்கு எதுவும் தெரியாது.''

''அப்ப உங்களை ஏமாத்தியிருக்காங்க. அது மட்டும் இல்ல. உங்களுக்கு மீதி இருக்கிற கிட்னியும் நல்லபடியா இல்லை. அது எப்பவேணா கெட்டு உங்களைப் பாடாப் படுத்தலாம். ஆமா நிறைய குடிப்பீங்களோ?''

டாக்டர் கேட்டார். ஆனால் ராஜேந்திரனுக்குத் தான் காதில் அது விழவில்லை. தான் ஒரு ஏழை வயிற்றில் பிறந்த

ஆண்டி, தன்னிடம் எதுவுமே இல்லை என்று நினைத்துச் சலனப்பட்டதெல்லாம் எவ்வளவு தவறு...?

இப்போது மொத்த சந்தோஷமும் போய் விடப் போகிறதே... போகிறதே என்ன...? போயே விட்டது.

அதை நினைத்து அழ ஆரம்பித்தவனை ராஜேஸ்வரியும் பார்த்து பதிலுக்கு அழுதாள். ஆனால் டாக்டரோ ஒரு சாதாரண கத்திக்குத்து காயத்தைக் கொண்டு அவனுக்கு கிட்னியே போய் விட்டதாகச் சொல்லி அவனை யோசிக்க வைத்துவிட்டதை நினைத்து தனக்குள் சிரித்துக் கொண்டார். கூடவே கவலையும் கொண்டார். இனியாவது அவன் திருந்த வேண்டுமே?

# 11. மனச் சலவை

மாப்பிள்ளை ரகுநந்தனுக்கு மாருதியில் உயர்ந்த உத்தி யோகம். பெரிய இடத்துப் பிள்ளை. அகல்யாவைக் காதலித்ததால் காதல் நிமித்தம் வரதட்சணை சீர் என்று பல விஷயங்களை அகல்யாவின் தந்தை சந்தானத்தால் வெற்றி கொள்ள முடிந்தது. அப்படியும் அவரது பட்ஜெட்டை மீறி ஐம்பதாயிரம் வரை செலவாகி விட்டது.

அதில் பத்தாயிரம் கூட அடை படவில்லை. அதற்குள் தலை தீபாவளி வந்து விட்டது. அகல்யாவும் வரப் போகிறாள்.

சந்தானத்திற்குத் தலையைச் சுழற்றுகிறது. மாப்பிள்ளை சீர் அது இது என்று எதையும் கேட்கவில்லை. அவர் கேட்கும் ரகமும் இல்லை. அதற்காக தலை தீபாவளிக்கு ஒரே ஒரு பவுனில் மோதிரம் கூட போடா விட்டால் அழகாயிருக்குமா என்ன?

மனதில் ஏனோ சந்தானத்திற்கு நிரடல்... உறுத்தல்.

"மாப்பிள்ளைக்கு என்ன பண்றதுன்னு யோசனையா?"

"ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?" மனைவி கிளறினாள்.

"யோசிக்கிற நிலையிலேதானே ஆண்டவன் நம்மை வெச்சிருக்கான்? குறைஞ்சது ஒரு பவுன்ல மோதிரம். அப்புறம் டிரெஸ், பட்டாசுன்னு வெச்சாலே ஐயாயிரம் தேவைப்படுது."

''வீணா புலம்பி என்னங்க பிரயோசனம்? யார் கிட்டேயாவது கால்ல கைல விழுந்தாவது வாங்கிச் செய்துட வேண்டியதுதான்.''

-திலகத்தின் தூண்டுதலைத் தொடர்ந்து சந்தானம் இப்போது தெருவில் இறங்கி நின்று கொண்டு இருந்தார்.

மாதா மாதம் பென்ஷன் வருகிறது! அப்படியும் இப்படியுமாக ட்யூஷன் எடுப்பதால் கொஞ்சம் வருமானம் பார்க்க முடிகிறது. அடித்து பிடித்து இரண்டாயிரம் தேறினால் அதிகம். இந்த 93-ல் இரண்டாயிரம் என்பது வாடகைக்கும், பால் கார்டுக்கும், எலெக்ட்ரிக் பில்லுக்கும் சரியாகி விடும்.

சொச்சத்திற்கு எங்கு போக? இதில் ஐம்பதாயிரம் கடனுக்கு வட்டி, அசல் என்று ஒரு பக்கம்...

சோர்ந்து போய் நின்றார்.

வீதி நீண்டு கிடக்கிறது. கால்கள் நடக்கின்றன.

அப்பொழுது பார்த்து பாதை யோரம் கண்ணில் பட்டான் அவன். குருமூர்த்தி என்று பெயர்.

கார்ப்பரேஷனில் வேலை பார்க்கிறான். சாலையோரம், சாக்கடையோரம் என்று பல இடங்களில் முழு போதையில் அவனைப் பார்க்கலாம். மல்லாக்க படுத்துக் கிடக்கிறான். பேண்ட்டு சட்டையில் புழுதிக் கப்பிகள். ஈக்கூட்டம் வளைத்துக் கட்டி மொய்த்துக் கொண்டு இருக்கிறது.

அவனை நெருங்கிச் சென்று பார்த்த சந்தானத்திற்கு மனதைக் கரித்தது. அப்பொழுதுதான் அவன் சட்டையில் பாக்கெட்டை பார்த்தார். அதில் கட்டுக் கட்டாய் ரூபாய் நோட்டுகள் வெளியே தெரிந்தன.

உழைத்துச் சம்பாதித்த பணம் என்றால், இப்படி மெத்தனமாக பாக்கெட்டில் போட்டுக் கொண்டு மயங்கிக் கிடக்க மனது வருமா என்ன?



சுற்றிச் சுற்றி பார்த்தார் சந்தானம். அதிசயம்... மக்கள் நடமாட்டமில்லை.

சட்டென்று குறுக்கில் ஓடியது அவர் புத்தி...

அவன் பாக்கெட் பணத்தைத் தன் பாக்கெட்டுக்கு மாற்றினவராக விறுவிறு என்று நடக்க ஆரம்பித்தார்.

''டேய்... டேய் நீ எல்லாம் ஒரு பெரிய மனுஷனாடா?'' என்று உள்மனசு விவஸ்தையில்லாமல் கூச்சல் போட்டாலும், ஆசை மகள் அகல்யா நிமித்தம் அனைத்துமே அடங்கிப் போனது.

குதூகலமாகக் கழிந்து முடிந்தது தீபாவளி. மாப்பிள்ளை ரகுநந்தன் மாமனார் போட்ட மோதிரத்தைப் பார்த்துப் பரவசப்பட்டுப் போனான்.

''எதுக்கு மாமா உங்களுக்கு வீண் சிரமம்? நான் இதெல்லாம் கேட்டேனா?'' -என்று பரஸ்பரம் பேசினான்.

அகல்யா கூட நெகிழ்ந்து போனாள்.

''அப்பா பரம ஏழையா இருந்தாலும் நம்ம கவுரவத்துக்குப் பழுது இல்லாம நீங்க நடந்துக்கிட்டீங்க. அதை நெனைச்சா எனக்குப் பெருமையா இருக்கு...'' என்று அப்பாவிடம் சொல்லி நெகிழ்ந்தாள்.

திலகத்துக்குக் கூட அந்தப் பணம் எப்படி வந்தது என்று தெரியாது. எங்காவது கடன் வாங்கியிருப்பார் என்றுதான் நினைத்திருக்கிறாள்.

ஆனால், சந்தானம் மனதோ சவக்காடாக இருக்கிறது. மகா அல்பத் தனமாய் நடந்து கொண்டு விட்டதாக ஒரு கேலி அவருக்குள் பரவிக் கொண்டேயிருக்கிறது.

வெளியிலே இருந்து ஒருவன் தண்டித்து விட்டால் கூட தேவலை. ஆனால், இந்த உள் உறுத்தல் போல் ஒரு பெரிய

தண்டனை இருக்க முடியாது என்று மனது உறுத்திக் கொண்டேயிருந்தது.

மாப்பிள்ளை ரகுநந்தன் அதை வேறுமாதிரி அர்த்தம் செய்து கொண்டான். அகல்யாவைத் தனியாக அழைத்து காதைக் கடித்தான்.

''அகில் உன் அப்பா ஏன் ஒரு மாதிரியா இருக்காரு?''

''அப்பாவோட பணக் கஷ்டம் நமக்கே நல்லா தெரிஞ்சது தானே?''

''அப்படின்னா எதுக்கு இப்படி தீபாவளில தடபுடல் பண்றார்?''

''இது தடபுடல் இல்லீங்க. கடமை.''

''அப்படின்னா நமக்கும் கடமை இருக்கு.''

''நீங்க என்ன தான் சொல்றீங்க?''

''பொறுத்திருந்து பார்.''

-அப்படிச் சொன்ன ரகுநந்தன் கொஞ்ச நேரத்தில் எல்லாம் வெளியே போய் விட்டு உள்ளே நுழைய அவன் கைகளில் ஒரு தங்க மோதிரம்!

''மாமா கையை நீட்டுங்க'' என்று சந்தானம் எதிரே நின்று அவர் கையை நீட்டவும், அதில் சட்டென்று அந்த மோதிரத்தை மாட்டினான்.

திக்குமுக்காடிப் போனார். சந்தானம்.

''மாப்ள என்ன மாப்ள இது? கடமையெல்லாம் எப்பவும் மாமனாருக்குத்தான் மாப்ள''

''யார் சொன்னது? அந்த மரபை நான் மாத்த ஆசைப் படறேன் மாமா. எப்பவும் கொடுக்கல் வாங்கல்கறது ஒரு வழிப்பாதையா இருக்கக்கூடாது மாமா. உங்க கஷ்டம் எனக்குத் தெரியும்.



இந்த மோதிரத்தை நீங்க கழட்டவே கூடாது. வசதி இல்லாவிட்டாலும் தவறாம தன் கடமையைச் செய்ற என் மாமனாருக்கு மாப்பிள்ளை தந்திருக்கிற பாராட்டு பரிசு இது.''

ரகுநந்தன் கடைசியாக அப்படிப் பேசியது மட்டும் சந்தானத்தை ஒரு இடி இடித்தது. அவர் மனதைக் குடைய ஆரம்பித்தது.

ரகுநந்தனும் அகல்யாவும் ஊருக்குக் கிளம்பிய மறு நிமிடம் அதை கழட்டி விட்டார்.

ஆச்சரியப்பட்டுக் கேட்டாள் திலகம்.

''ஏன் கழட்டறீங்க? மாப்பிள்ளை சொன்னது மறந்து போச்சா?''

சந்தானம் எதுவும் பேசாமல் தனது மாணவன் பாபு என்பவன் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

அந்த மாணவனுக்கு பணம் தண்ணீர் பட்டபாடு. அவன் சந்தானத்தைப் பணிவுடன் வரவேற்றான்.

ஒரு ஆசிரியராய் அவனிடம் அவர் ட்யூஷன் பீஸ் வாங்கியதுண்டு. ஆனால் கடன் கேட்டதில்லை. ஆசிரியர் ஸ்தானம் கேட்க இடமளிக்க வில்லை.

''பாபு எனக்குக் கொஞ்சம் பணம் வேணும். தருவியா? ட்யூஷன் பீஸ்ல கழிச்சுக்கோ.''

''ஐயோ என்ன சார் இது... குரு தட்சணையா உங்களுக்கு நானல்லவா அள்ளிக் கொடுக்கணும்.

உங்களை மாதிரி நல்லவங்களுக்கு உதவ நான் கொடுத்து வெச்சிருக்கணும்'' -என்றான்.

இவன் எதுவும் பேசாமலே பணத்தைக் கொடுத்திருக் கலாம். சொற்களால் இப்படி அவரைக் கொல்லாமல் கொல்ல வேண்டாம். அவருக்குக் கூசியது. குறுகியது. 'தன்

னெஞ்சே தன்னைச் சுடும்' -என்று தாடிப் புலவன் பாடியது மனதில் ஓடியது.

பணத்தோடு கார்ப்பரேஷன் குருமூர்த்தியைப் பார்க்க கிளம்பினார். வழியிலேயே தென்பட்டான். அன்று தென்பட்ட அதே கோலத்தில்.

அன்று மல்லாக்க கிடந்தவன் இன்று குப்புற கிடக் கிறான். அதுதான் வித்தியாசம். அன்றை விட அதிக போதை!

'ஆண்டவா' என்று மெய்சிலிர்த்தவர், எப்படித் திருப்பிக் கொடுப்பது? என்ன சொல்லிக் கொடுப்பது? என்று குழப்பத்தில் கிடந்தவர் அவன் கிடந்த கோலத்திற்காக மகிழ்ந்து, முதல் காரியமாக அன்று எடுத்த பணத்தை அதே விதத்தில் பாக்கெட்டில் வைத்து விட்டு நிமிர்ந்தார்.

ஆழ்மனதில் திருட்டுக் கறை அகன்ற நிம்மதிப் பெருமூச்சு.

வீட்டுக்கு வந்தவர் முதல் காரியமாக அந்த மோதிரத்தை எடுத்து விரலில் மாட்டிக் கொண்டார். திலகம் பார்த்து ஆச்சரியப்பட்டாள்.

அவள் புரியாமல் விழிக்க, மனச்சலவை செய்த அந்த மாப்பிள்ளை மோதிரம் ஜம்மென்று அவர் விரலில் மின்ன ஆரம்பித்தது.

# 12. சர்க்கரை மனசு

மாமா வந்திருந்தார்.

வாசல் தாண்டும் போது மூக்கில் பொடி- ராக்கெட் ஏறும் சப்தம். வரது வரவும், திரும்பிப் பார்த்தார்.

''வாடா... காவேரிக்குப் போயிட்டு வரியா?''

''ஆமாம் மாமா. சௌக்கியமா?''

''எனக்கென்ன... என் கூட மெட்ராஸ் வரியோல் லியோ?''

அந்தக் கேள்வி காதில் விழாதபடி துண்டை உலர்த்த கொல்லைப்புறம் போனான்.

''அக்கா... உன் புருஷன் கரண்டி பிடிக்கறத பத்தி என்ன நினைக்கறான்?'' -மாமா கேட்க, அரிசியில் கல் பொறுக்கும் அக்காக்காரி 'ஹூம்!' என்றாள் பெருமூச்சுடன்.

''புரியறது... நமக்கெல்லாம் இப்ப வேற வேலை யார் தரேங்கறா?''

''நான் நீ சொல்றத கேப்பேனா... இல்லை அவன் சொல்றதைச் சொல்வேனா?''

''ஏன், சமையலுக்கு என்ன குறைன்னேன்? கல்யாண மாசங்கள்ல, 'அள்ளலாம்' தெரியுமா? கை மணம்னு ஒண்ணு இருக்கு. அது மட்டும் உன் பிள்ளைக்கு வசப் பட்டுட்டா போதும்.''

மாமா பேசுவது- அம்மா பெருமூச்சு விடுவது எல்லாம் வரது காதில் விழுந்தபடி இருந்தது.

"கைமணமாம் கைமணம்... பூ வித்தா கூடத் தான் கை மணக்கும். சென்ட் கூட விக்கலாம்தான்... இதுக்கு எதுக்கு கம்ப்யூட்டர் சைன்ஸ் படிக்கணும்?"

வேறுவழியின்றி, சென்னை வந்து செட்டிலாகி தொழிலுக்கும் புறப்பட்டாகி விட்டது.

"அந்த பையை எடுக்கலே?" என்றார் மாமா.

அதில் சீவாளி, கரண்டி, மத்து என்று தொழிலாயுதங்கள்.

அதைத் தொட்டுத் தூக்கும்போதே மனசை விட்டு நம்பிக்கை, வாழவேண்டும் என்கிற ஆசை எல்லாம் கீழே இறங்கியது.

மாமா பார்த்துக் கொண்டுதான் இருந்தார்.

அதன் பின் தெருவில் நடந்து ஆட்டோ பிடித்து கல்யாண வீட்டுக்குப் போய் தேங்காய் உடைத்து பூஜை எல்லாம் செய்துவிட்டுச் சமையலைச் செய்ய ஆரம்பித்தார்.

முதல் தயாரிப்பே மைசூர்பாகுதான்.

வரது கசப்போடு கரண்டியால் அந்த இனிப்பைக் கிண்டிக் கிண்டிவிட்டான்.

நன்றாக, பொன்பதமாக வந்த பிறகு மாமா அதை வழித்து பிளேட்டில் கொட்டி வகிர்ந்து சதுர சதுரமாக பிரிக்கும் போது பார்க்கவே அழகாக இருந்தது. மூக்கிலும் வாசம் கமகமத்தது.

"வரது... இதுல கொஞ்சத்த எடுத்துண்டு கிளம்பு."

மாமா, வியர்வை மார்போடு முன்நடக்க பின்தொடர்ந் தான்.

"என்னை இப்படி எடுபிடியாக்க வேண்டாம் மாமா..." -மனசு கருவிற்று. மாமா கல்யாண வீட்டில் ஒரு பெரிய மனிதரிடட்ம் வரதுவை அழைத்துப் போனார்.



"வாரும் அப்புசாமி... எப்படி இருக்கேள்?"

"இருக்கேண்ணா... மொதல் மொதலா மைசூர் பாகு கிளறினேன். ஒரு வா சாப்ட்டு பாத்துட்டுச் சொல் லுங்கோ..."

-வரதுவைப் பார்த்தபடி, மைசூர்பாகு அவரால் விள்ளப் பட்டது. வாயில் விழுந்த கணம் பனியாய்க் கரைந்து போல் வயிற்றை அடைந்து.

"பிரமாதம் ஓய்... உம்மா கைவண்ணம் வராது."

"எல்லாம் பெரியவா ஆசி..."

"பையன் யாரு?"

"என் மருமான்- கம்ப்யூட்டர்ல புலி. மைசூர்பாகு கிளறு வதைப் பாக்கணும்னான்; அழைச்சுண்டு வந்தேன்..."

"இப்படிக் கூட ஒரு ஆசையாக்கும்... ஆமா எதுலே வேலை பாக்கறான்?"

"திருச்சில ஏதோ ஒரு கம்பெனி. இங்க வந்துடறாங் கறேன். நல்ல கம்பெனிய விட்டுட்டு எப்படி வரதுங் கறான்."

"ஏன் இங்க நல்ல கம்பெனி இல்லையாக்கும். நான்லாம் டேலன்டான ஆள் இல்லாம தவிச்சிண்டிருக்கேன்."

"அப்ப என்னண்ணா... இப்பவே கூட்டிக்கோங்கோ. உங்கள் விடவா எனக்கு மத்த விஷயம் பெரிசு..."

மாமா மைசூர்பாக்கை எடுத்து வரச் சொன்ன மர்மம் புரிந்தபோது; வரதுவுக்குக் கண்கள் கலங்கி விட்டிருந்தது.

அடுப்படிக்கு வந்து 'மாமா' என்று நெகிழ்ந்து மைசூர் பாக்கை அவர் வாயில் திணிக்கப் பார்த்தபோது, தடுத்தார்.

"எனக்கு உடம்பு பூரா சர்க்கரை- ஆனா வாழ்க்கைல அது இல்லை! நீயானா நன்னா இரு!"

# 14. மாப்பிள்ளை சார்

வரவேண்டிய அந்தக் கடிதம் வந்துவிட்டது. ஆவலாகப் பிரித்தாள் தாரிணி.

*'அன்புள்ள மாப்பிள்ளை மற்றும் தாரிணிக்கு!*

*மங்களாசீர்வாதங்கள்.. தீபாவளி நெருங்கிக் கொண் டிருப்பது உங்களுக்கெல்லாம் தெரியும்... அதிலும் இது உங்களுக்கு தலை தீபாவளி... எனவே தீபாவளி கொண்டாட் டத்திற்காக ஒருவாரம் முன்னதாகவே மதுரைக்கு வந்து விடவும். என் சக்திக்கு உங்களுக்குச் செய்யவேண்டிய எல்லாவற்றையும் செய்வேன். அதுகுறித்து கவலை வேண்டாம். அவசியம் ஒருவாரம் முன்னதாக வந்துவிடவும்.*

இப்படிக்கு,
கணேசன்.

-கடிதத்தைப் படித்தவள் முகத்தில் ஒரு புதிய ஒளி. ஏற்கனவே மஞ்சள் பூசிக் குளித்திருந்தாள். அதில் மேலும் மெருகு ஏறியது. கடிதத்துடன் அவளது கணவன் விஸ்வத்தை நோக்கி ஓடினாள். அவன் கண்ணாடிமுன் நின்று ஷேவ் செய்து கொண்டிருந்தான்.

''என்னங்க..''

''சொல்லு...''

''அப்பா லட்டர் போட்ருக்காங்க...''

''அதுக்கென்ன..?''



''இல்ல... தீபாவளி வருது இல்லையா... அதான்...''

''தீபாவளி வருஷா வருஷம்தான் வருது. அதுக்கென்ன இப்போ?'' -அவன் கேட்ட விதம், அப்படியே ரேசரால் கன்னத்து முடிகளைச் சிரைத்த விதம் என்று அனைத்திலும் ஒரு கடுமை. அவளும் கொஞ்சம் பயந்துதான் போனாள்.

கொஞ்சநாளாகவே அவன் கடுமையாகத்தான் நடந்து வருகிறான். இத்தனைக்கும் திருமணமாகி அதிக நாட்கள் ஆகிவிடவில்லை. வெற்றிகரமான ஐம்பதாவது நாள் என்று அறிவிக்கவே இன்னும் மூன்று தினங்கள் தேவைப்படு கிறது. கல்யாணமாகி அந்த முதல்வாரம் அவள் வரையில் கொஞ்சம் பரவாயில்லை. ஹனிமூன் என்று கொடைக் கானலுக்குக் கூட்டிக்கொண்டு போனான். அப்போது ஹோட்டலில் தாராளமாகச் செலவழித்தான்.

தாரிணி மிகுந்த பயத்தில் இருந்தாள். அவள் தாயும் சகோதரிகளும் அவளுக்கு நன்றாகவே வேப்பிலை அடித்திருந்தனர்.

அதில் குறிப்பிடப்பட்ட வேண்டிய ஒரு விஷயம். 'அவர் ஆசைப்பட்டமாதிரி நடந்துக்க. நெட்டையோ குட்டையோ அனுசரிச்சுப்போ.. எதிர்த்துப் பேசாதே... நல்ல பேரைச் சம்பாதிச்சுக்கோ. ஆம்பளைங்களையெல்லாம் ஆரம்பத்து லயே அமுக்கிப் பிடிச்சிடணும்... விட்டா வேற இடம் பார்த்துடுவாங்க' என்பதுதான்.

அது தாரிணிக்குள் பாம்பு விஷம் ரத்தத்தில் கலந்து பரவுகிறமாதிரி பரவி விட்டது. எனவே அவள் அவன் வரையில் ஒரு அடிமை போலவே நடந்து கொண்டாள். இந்த நாற்பத்தேழாவது நாளிலும் அதுதான் கதை. விஸ்வ மும் முகம் கழுவிக் கொண்டவனாக அடுத்தடுத்த வேலை களைப் பார்க்கத் தொடங்கிவிட்டான். அந்தக் கடிதம் டேபிள் மேலதான் கிடந்தது. அவன் எடுத்துப் படித்துப்

பார்ப்பான் என்று மிகவும் எதிர்பார்த்தாள். நடக்கவே இல்லை. அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது.

தவியாய்த் தவித்தாள். வேண்டுமென்றே அவனைச் சுற்றிச் சுற்றி வந்தாள். அவனும் கவனித்தான். ஆனால், கவனிக்காத மாதிரி நடந்துகொண்டான்.

கல்யாணத்தின்போது சில குட்டிக் குட்டி குளறுபடிகள் ஏற்பட்டுவிட்டன. அவனுக்கென வாங்கிய மாப்பிள்ளை அழைப்புச் சட்டையில் காபிக்கறை இருந்தது. சரியாகக் கவனித்து வாங்கத் தவறிவிட்டனர். அது எப்படி வந்தது என்பது கடைக்காரனுக்கே வெளிச்சம். அதேபோல அவனுக்கான ஷூவும் அளவு கூடிவிட்டது... முன்பக்கம் கொஞ்சம் துணியைவைத்து அடைத்து பிறகு தான் போட்டுக் கொள்ள முடிகிறது.

ஹனிமூனுக்கு கொடைக்கானல் வரை வந்த கார் டிரைவரும் விஸ்வத்திடம் தனியாக அது இது என்று சொல்லி பணத்தைக் கறந்துவிட்டான்.. இதெல்லாம் விஸ்வத்தைப் பாதித்துவிட்டதோ என்னவோ? அப்படித்தான் தாரிணி எண்ணினாள்.

விஸ்வமும் அடுத்தடுத்து தன் வேலைகளைப் பார்த்துக் கொண்டு போய்க்கொண்டேயிருந்தான். இறுதியாக ஒரு போன் வரவும் படபடப்பாகப் புறப்பட்டுப் போனான்.

''நான் வரதுக்குக் கொஞ்ச நேரமாகும். எனக்காகக் காத்திருக்காதே- நீ சாப்பிட்டுடு...'' -என்று மட்டும் சொல்லி விட்டுச் சென்றான்.

தாரிணி குமையத் தொடங்கிவிட்டாள். நல்லவேளையாக அவள் வீட்டில் இருந்து போன் வந்தது.

''தாரிணி...''

''சொல்லும்மா...''



''அப்பா போட்ட லெட்டர் கிடைச்சிச்சா?''

''உம்...''

''ஏண்டா சுரத்தே இல்லாம பேசறே?''

''என்னத்தம்மா சொல்ல... அவர் லெட்டரையே தொட்டுக்கூடப் பார்க்கல.''

''ஏம்மா... ஏதாவது பிரச்னையா?''

''என்னன்னு தெரியலை.. அவர் சாதாரணமா மனசு விட்டே பேசமாட்டேங்கறாரு. மனசுக்குள்ள என்ன நினைக்கறாருன்னும் தெரியல.''

''என்னம்மா நீ... நமக்குத் தெரிஞ்சு நாம ஒரு குறையும் வைக்கலையே.. போன்ல பேசிக்கூட கூப்பிடலாம்தான். இப்பல்லாம் யாரு லெட்டரெல்லாம் போடறாங்க. இருந்தும் லெட்டரெல்லாம் அப்பா போட்டுருக்காரு...''

''எல்லாம் சரிம்மா... ஆனா அவர் என்ன நினைக்கறாருன்னே தெரியலியே..''

''சரி போனை அவர்கிட்ட கொடு... நானே பேசிப் பார்க்கறேன்..''

''அவர் இப்ப வீட்ல இல்லம்மா... எங்கிருந்தோ போன் வந்துச்சு. பதறி அடிச்சிக்கிட்டு கிளம்பிப் போனாரு. திரும்பி வரவும் லேட்டாகும்னு சொல்லிட்டுப் போயிருக்காரு...''

''என்னடி நீ... நீயும் கவலைப்பட்டு எங்களையும் கவலைப்பட வைக்கறே.''

''எல்லாம் என் தலை எழுத்தும்மா...''

''சரிசரி.. வருத்தப்படாதே. எல்லாத்தையும் இந்தத் தலை தீபாவளியில உன் அப்பா எப்படியாவது சரி செய்துடுவாரு.''

''என்னம்மா சொல்றே.. ஏற்கனவே நிறைய கடன். இதுல இப்ப வேற செலவுன்னா..''

"அதையெல்லாம் பார்த்தா ஆவுமா. நீ நல்லாருக்கணும். அதுதான் முக்கியம். அனேகமா உன் நாத்தனாருங்க யாராவது மாப்பிள்ளையை ஏத்தி உட்ருப்பாங்க. எப்பவும் பொம்பளைங்களுக்கு பொம்பளைங்கதான் விரோதி... 'என்னடா உன் மாமனார்... மாமியார்... ஒண்ணும் லாயக் கில்ல... அதைக்கேள், இதைக்கேள்'னு ஸ்க்ரூ கொடுத்தா, எந்த ஆம்பளை மனசுதான் கெடாது.."

"இவரு அப்படியெல்லாம் தெரியலம்மா.. அதேசமயம் என்னால புரிஞ்சுக்கவும் முடியல..." -தாரிணி ஒரு வழி யாகப் பேசிவிட்டு போனை வைத்தாள். கொஞ்சம் மன பாரமும் இறங்கின மாதிரி இருந்தது.

நாட்கள் விறுவிறுவென்று ஓடியதுதான் மிச்சம். அப்பா விடம் போனில் பேசக்கூட அவமானமாக இருந்தது. போதாக்குறைக்கு வீட்டில் போனும் ஒரு வாரமாய் ரிப்பேர்.

விஸ்வமோ தீபாவளிக்கு மாமியார் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்கிற எண்ணமே துளியும் இல்லாதவன் போலத்தான் தெரிந்தான்... ஆனால் வேட்டி, புடவை என்று துணிமணிகள் வாங்கத் தவறவில்லை. தன் அக்கா மகளுக்கும் அந்த மாப்பிள்ளைக்கும் தீபாவளிக்குத் தர வாங்கி வைத்திருப்பான் என்று எண்ணினாள்.

அன்று கேட்டே விட்டாள்.

"என்னங்க.."

"சொல்லு தாரிணி."

"ஏன் இப்படி மௌனமா இருந்து என்னைக் கொல் றீங்க. தலை தீபாவளிக்கு இன்னும் நாலு நாள்கூட இல்ல."

"தெரியுமே..."

"என்ன தெரியுமே... நாம ஊருக்குப் போக வேண் டாமா?"



"போயி..."

"என்ன போயி... தலைதீபாவளின்னா மாமனார் வீட் டுக்குப் போறதுதான் வழக்கம். எங்கப்பாவும் அம்மாவும் போட்ட லெட்டரைக்கூட நீங்க படிக்கலை. அங்க அவங்க எவ்வளவு தூரம் எதிர்பார்த்துகிட்டு இருக்காங்க தெரியுமா?"

"அப்படியா?"

"என்ன அப்படியா... உங்களுக்கு எதுவுமே தெரியா தாக்கும்.. இங்க உங்க அக்கா பொண்ணுக்கு மட்டும் எல்லாம் வாங்கி வைக்கத் தெரியும்..."

"அப்படியா?"

"என்ன திரும்பவும் அப்படியா, ஆட்டுக்குட்டியான்னு கிட்டு... கல்யாணத்துல சில தப்புங்க நடந்துபோச்சு, அதை யெல்லாம் அப்பா இந்த தலைதீபாவளில சரிசெய்யறதா சொல்லிட்டாரு.. நீங்க அதை மனசுல வெச்சுகிட்டு என்னைப் பழிவாங்காதீங்க..."

-அவள் முதல் முறையாகச் சீறியதை அவன் வெகுவாக ரசித்தான். சிரித்தான். அதேசமயம் வாசற்புறம் ஆட்டோ ஒன்று வந்து நின்றது.

வீட்டைப் பெருக்கிக்கொண்டிருந்த வேலைக்காரி அம்புஜம் ஓடிப் போய் கதவைத் திறந்துவிட்டு, புருஷன் பொண்டாட்டி சண்டையைக் கேட்காதது மாதிரி பழைய படி பெருக்கப் போனாள். தாரணியின் அப்பாவும், அம்மாவும் வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தனர்.

விஸ்வம் அந்தப் புன்னகை மாறாமல் வாசலுக்குப் போய் அவர்களை அழைத்து வந்தான். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

"மாப்ள... நீங்க சொன்னபடியே நாலுநாள் முன்னா டியே வந்துட்டோம். திருப்திதானே?" -என்று கணேசன் கேட்டார்.

“ரொம்ப திருப்தி மாமா... முதல்ல குளிச்சுட்டு வாங்க, சாப்பிடுவோம்” -என்றான். அவர்களும் அடுத்தடுத்துத் தயாராயினர். தாரிணிக்குத் திகுதிகுவென்றிருந்தது.

“அம்மா... என்னம்மா நடக்குது இங்க?” -என்று தாயிடம் போய்க் கேட்டாள்.

“என்னடி... மாப்ள உன்கிட்ட எதுவும் சொல்லலையா? தலைதீபாவளிக்கு நாங்க உன் வீட்டுக்கு வந்துட்டோம். இந்த பழைய விஷயங்களை எல்லாம் மாத்தணும்னு மாப்ளை ரொம்பவே துடிக்கறாருடி... ‘கல்யாணத்துலயே ரொம்ப சிரமப் பட்டுட்டீங்க.. கவனிச்சேன். எதுக்கு தலை தீபாவளி சுமை? தீபாவளின்னா சந்தோஷமான நாள். ஆனா பொண்ணப் பெத்த நடுத்தட்டு காரங்களுக்கு அது சிலுவை சுமக்கற நாளா ஆயிடுது. உள்ளபடியே கல்யாண மான ஜோடிங்க பெரியவங்கள சந்தோஷப்படுத்திப் பாக் கறதுதான் உண்மையான தலை தீபாவளி... சம்பிரதாயம் அது இதுங்கற பேர்ல சங்கடப்படுறதுக்கு பேரா தீபாவளி..? அதுக்கா தீபாவளி?ன்னு அவர் ஒருநாள் ஆபீஸ்ல இருந்து போன்ல பேசினப்போ நான்லாம் நெகிழ்ந்துட்டேன். நீ சொன்னது சரிதான். நம்ம மாப்ளை வித்யாசமானவர் தான்னு புரிஞ்சுகிட்டேன். சிலர் ஸ்தான பலத்தால ஆடு வாங்க. ஆனா மாப்ளை ஆடலை. அதையே ஆட்டி வைக்கறாரு. ‘ஒரு வாழ்க்கைத் துணையா பொண்ணைக் கொடுத்த உங்களுக்கு நான்ல துணிமணி வாங்கிக் கொடுத்து மோதிரம் செஞ்சு போடணும்... நீங்க செய்யறது எவ்வளவு பெரிய தப்பு’ன்னு கேட்டாருடி..”

-அவள் பேசப் பேச தாரிணியின் கண்கள் குளம் கட்டிக் கொண்டன. அவள் வரையில் ஒரு அர்த்தமுள்ள நிஜமான தீபாவளி அப்போதே தொடங்கிவிட்டது. அவனோ அவர் களுக்காக வாங்கிய துணிமணிகளை அவர்களுக்குக் காட்ட எடுத்துவந்தபடி இருந்தான்.

# 15. ‘மை’யில் கொஞ்சம் கறை!

இன்டர்வியூ நடந்து கொண்டிருந்தது.

காய்கறிகளில் முத்தலையும் சொத்தலையும் தவிர்த்து விட்டு, உள்ளங்கையில் கனம் பார்த்து பின் ஒரு நம்பிக் கையோடு கூடையில் போட்டுக் கொள்கிற மாதிரி, அருணாசலம் எதிரில் உட்கார்ந்திருந்த ஜெகதீசனை எடை போட்டுக் கொண்டிருந்தார்.

“நான் உங்களைக் கடைக்குப் போய் ‘காண்டம்’ வாங் கிட்டு வரச் சொன்னா வாங்கிட்டு வந்து தருவீங்களா?”

“அவசியம்னா செய்துதானே சார் ஆகணும்!”

“இல்ல மிஸ்டர் ஜெகதீஷ்.. வேற ஏதாவதுன்னா பரவா யில்லை. இது காண்டம். கடைல போய் கேக்க உங்களுக் குத் தயக்கமா இருக்காதா?”

“இருக்கும்தான். ஆனா, வாங்கித் தான் தீரணும்கற ஒருநிலை வரும் போது தயங்கறதுல பிரயோஜனமில்லை.”

“அப்ப வாங்கிடுவீங்க...?”

“நிச்சயமா!”

“சரி... கையில கம்பெனி பேப்பர்ஸ் இருக்கும்போது மழை வந்துடுது. நீங்களும் நனையக் கூடாது; பேப்பர்ஸும் நனையக்கூடாது. என்ன பண்ணுவீங்க?”

“நான் நனையக்கூடாதுங்கறது ஏன் சார்?”

''இல்ல... அப்படிச் சொன்னா என்ன செய்வீங்க?''

''இல்ல சார், அந்த கண்டிஷனை ஏத்துக்க முடியாது. பேப்பர் நனையக்கூடாது. அதுதான் சார் முக்கியம்?''

-இன்டர்வியூ வளர்ந்து கொண்டே போனது. ஜெகதீஷும் சளைக்காமல் பதில் சொல்லிக்கொண்டே போனான். சில கேள்விகளுக்கு நேரடியாக, சில கேள்விகளுக்கு மறைமுகமாக, சில கேள்விகளுக்கு எதிர்மறையாக என்று தயங்காமல் பதில் சொன்னான்.

எம்.ஏ. முடித்து பின் கம்ப்யூட்டர் சயின்ஸிலும் தேறி, அதற்குப் பின் பலதப்பட்ட கணினி படிப்பின் டிப்ளமோ சர்டிபிகேட்டுகளையும் வைத்திருந்தான். மார்க்குகளில் பழுதே இல்லை.

அவன் கையில் கட்டியிருந்த டிஜிட்டல் கடிகாரம் அரதப் பழசாக, மணிகாட்டுவதுதான் முக்கியமே தவிர, கைக்கு அழகாக இருந்து அடுத்தவர்களைக் கவர்வது முக்கியமல்ல என்கிற மாதிரி இருந்தது. காலிலும் நன்றாகவே தேய்ந்துவிட்ட ரப்பர் செருப்பு.

அருணாசலம் அவனை எல்லாக் கோணத்திலும் அளந்து கொண்டிருந்தான்.

சுறுசுறுப்பான இளைஞன்தான். அதே சமயம் நிகழ்கால பழுதுகள் எதுவும் அவனைப் பாதித்திருக்கவில்லை என்பது அவரது இறுதி அனுமானமாக இருந்தது.

''ஆமா... இந்த வேலை கிடைச்சா சந்தோஷப் படுவீங்களா?''

''என்ன சார் கேள்வி இது... ரொம்ப சந்தோஷப் படுவேன்...''

''இது எத்தனையாவது இன்டர்வியூ?''



''பதினேழாவது இன்டர்வியூ.''

''ஒருவேளை இங்கே வேலை கிடைக்கலேன்னா.''

''பதினெட்டாவது இன்டர்வியூ இருக்கவே இருக்கு!''

''சரி... இந்த வேலைக்கு நான், உங்ககிட்ட லஞ்சம் கேட்டா என்ன பண்ணுவீங்க?''

ஜெகதீசன் அவரை கூர்மையாகப் பார்த்தான். பிறகு ''லஞ்சம் கொடுக்கறதா இருந்தா எனக்கு முதல் இன்டர்வியூவிலேயே வேலை கிடைச்சிருக்கும் சார்.''

''லஞ்சம் கொடுக்க முடியாதுங்கறீங்களா... இல்லே... அதுக்கு வசதி இல்லேங்கறீங்களா?''

''லஞ்சம் கொடுத்துதான் ஒரு வேலை கிடைக்கும்னா அந்த வேலையே எனக்கு வேண்டாம் சார்!''

அருணாசலம் சன்னமாக ஒரு சிரிப்பு சிரித்தார். பின், மெல்லிய குரலில், ''சரி, நீங்க போகலாம்'' என்றார்.

ஜெகதீசன் அவரது புன்னகைக்கு அர்த்தம் புரிந்து கொள்ள முடியாத நிலையில் வெளியேறினான்.

ஆனால், அவனது அப்ளிகேஷனில் அவர் ஒரு டிக் செய்து இன்டர்காமில் செக்ரெட்டரியைக் கூப்பிட்டு ''இந்த கேண்டிடேட்டுக்கு அப்பாயின்ட் மெண்ட் ஆர்டரை ரெடி பண்ணுங்க?'' என்றார்.

❖ சமுத்திரக்கரை.

முன்போல் இல்லை மெரீனா. கோன் ஐஸ் கப்பும், பாலிதீன் பொட்டலங்களுமாக ஒரு பிளாஸ்டிக் சமவெளியாக மாறியிருந்தது அது!

காற்றாட வந்திருந்த ஜெகதீசனின் கண்களைக் கரித்தது அந்தக் காட்சி.

எல்லாமே கெட்டுவிட்டது. ஆறு, குளம், சமுத்திரம், அதன் கரை, மனிதர்கள்...

இந்தப் பட்டியலின் தொடர்ச்சியாக அருணாசலமும் ஜெகதீசனின் நினைவில் கண்சிமிட்டினார்.

'லஞ்சம் பற்றி அவர் வெளிப்படையாகக் கேள்வி கேட்டது, தன்னை ஆழம் பார்க்கவா? அல்லது மறைமுக மாகத் தனது ஆசையை வெளிப்படுத்தவா?''

குழப்பமாக இருந்தது அவனுக்கு.

இனி வேலைக்கு என்று முயற்சிக்கக் கூடாது. சுய தொழில்தான். எங்காவது ஆயிரம் பத்தாயிரம் கடன் வாங்கியாவது சொந்தக் காலில் நிற்கப் பார்க்க வேண்டும்!

போதும்... இந்த கோட் போட்ட மனிதர்கள் முன்னால் போய் அமர்ந்து கொண்டு, அறிவுப் பிரகாசத்தைக் காட்டிய தெல்லாம் போதும் என்று மனதில் ஒரு தீர்மான முடிச்சு விழுந்த போது, காலில் ஏதோ ஒன்று இடறியது. குனிந்து பார்த்தான். கொழுத்த மணிபர்ஸ். எடுத்துப் பார்த்தான். ஐந்நூறு ரூபாய் நோட்டுகள். சில ஆயிரம் தேறும்.

காலிங்பெல் சத்தம் கேட்டு கதவைத் திறந்தார் அருணா சலம்!

ஜெகதீசன் இதைச் சற்றும் எதிர்பாராமல் கிறுகிறுத்துப் போனான்.

"சார் நீங்களா...?"

"நீ எங்கப்பா இங்கே...?"

"அடடே... ஆமாம். பீச்ல மிஸ் பண்ணின பர்ஸ் உன் கைல கிடைச்சிடுச்சா...?"

"அ... ஆமாம் சார்!"



"வெரிகுட்... அட்ரஸைப் பார்த்து நேர்ல கொடுக்கவே வந்துட்டியே... வெரிகுட்..."

-பர்ஸை வாங்கிக்கொண்டு தோளிலும் தட்டிக் கொடுத் தார். உள்ளே அழைத்துச்சென்று கருநீல வெல்வெட் வேய்ந்த சோபாவில் அமர்த்தி டீ, பிஸ்கட்டெல்லாம் கொடுத்து உபசரித்தார்.

நன்றி சொல்லிவிட்டுக் கிளம்பியவனை வாசல்வரை வந்து வழியனுப்பியவர், "உனக்கு ஒரு குட்நியூஸ்... இன்டர்வியூவுல நீ செலக்ட் ஆயிட்டே..." என்றார்.

ஜெகதீசனுக்கு பனிக்கட்டியை சர்க்கரையில் தோய்த்துச் சப்பியது போல இருந்தது.

"சார்ர்..."

"டோன்ட் ஒர்ரி... லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லைன்னு சொன்ன உன்னோட கொள்கைக்காகவே வேலை கொடுக்கத் தீர்மானிச்சேன். இப்ப உன் நேர்மையும் தெரிஞ்சு போச்சு. எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. என் கம்பெனிக்கு நீ ஒரு நல்ல கேண்டிடேட்டா இருப் பேன்னு நான் நம்பறேன்."

-அருணாசலம் உருகிப்பெருகினார். ஜெகதீசனும் சிரித்தபடி அங்கிருந்து விலகினான்.

மறுநாள் அலுவலகத்தில் தனது அறைக்குள் நுழைந்த அருணாசலத்தின் டேபிளில் ஒரு கடிதம் எடுத்துப் பிரித்தார்.

*வணக்கம் சார்!*

*நான் ஜெகதீசன். நீங்க என்னை செலக்ட் செய்ததுக்கு நன்றி. ஆனா, என்னால இந்த வேலையை ஒப்புக்க முடி யாது. காரணம், இதை நான் ஒப்புக்கிட்டா, என் கொள் கையை நானே ஒரு வகையில் மீறினவன் ஆயிடுவேன்.*

உங்க பர்ஸை உங்ககிட்ட நான் திருப்பிக் கொடுத்ததைக் கூட நேர்மைன்னு நீங்க சொன்னாலும், உங்க வேலையை நான் ஒப்புக்கிட்டா, அந்த நேர்மைல கொஞ்சம் லஞ்சக்கறை படியற மாதிரிதான் எனக்குப் படுது. ஆகையால் உங்க வேலையை நான் ஏற்கத் தயாராக இல்லை. மன்னிக்கவும். பதினெட்டாவது இன்டர்வியூவுக்கு நான் தயாராயிட்டேன். அந்த இன்டர்வியூ நடத்தறவர் இந்த மாதிரி எந்த பர்ஸையும் தொலைச்சு, அது என் கண்ணுல பட்டுடாம இருக்க இறைவன் தான் துணை செய்யணும் சார்.

நன்றி.

வணக்கமுடன்,

ஜெகதீசன்

# 16. ஓடிப்போலாமா?

மே மாத சென்னை வானம்!

உஷ்ணம் பட்டையைக் கிளப்பிக் கொண்டிருந்தது.

எப்படி தண்ணீர் இல்லாமல் மனிதனால் உயிர் வாழ முடியாதோ, அப்படியே ஏ.சி. இல்லாமலும் சென்னையில் வாழ முடியாது என்று பனகல்பார்க்கில் வியர்வையைத் துடைத்தபடியே பேசிக் கொண்டிருந்தான் நவீன்!

பரவாயில்லை...

பனகல் பார்க்கிலும் கொஞ்சம் பசுமை இருக்கத்தான் செய்தது. அதில் இளைப்பாறியும், புத்தகம் படித்துக் கொண் டும் பலர்! அதிலும் ஒருவர் தடிமனாக ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தார். நவீனுக்கு அதைப் பார்க்க ஆயாசமாகக்கூட இருந்தது. ஏனென்றால் அவன் இன்றைய தலைமுறை... டி.வி. சேனல்கள் வந்ததில் படிப்பது பின்னுக் குப் போய், பார்ப்பது முன்னால் இருக்கும் காலத்தில் பிறந்து வளர்ந்துவிட்டவன். எனவேதான் அவன் படிப்ப தைப் பார்த்து ஆயாசப்பட்டான். நல்லவேளை...

அவனை இப்படியே பலவிதமான எண்ணங்களில் போட்டு வதக்கிக்கொண்டிராமல் அவனைக் காப்பாற்ற வருபவள் போல பார்க்கினுள் நுழைந்திருந்தாள் வர்ஷா! சுடிதார் துப்பட்டாவில் சுண்டி இழுக்கும் லட்சணம். ஒற்றைநாடி சரீரம். எழுதும் போது வைக்கும் முற்றுப் புள்ளியைப் போய் நெற்றிப் பொட்டாக வைத்திருந்தாள்.

அந்தப் பொட்டு துளி பெரிதாகப் போனாலும் இன்றைய இளவட்டங்கள் வரையில் அப்படிப் பொட்டு வைத்திருப் பவர்கள் எல்லாம் அம்மன் ஆக்கப்பட்டுவிடும் ஒரு பயம் அவளிடத்திலும் இருப்பது போல் தெரிந்தது. பயம் எல்லாம் இப்படி ஃபேஷன் சார்ந்த விஷயத்தில்தான். நவீனை அவள் காதலிப்பதில் இல்லை!

அவனும் நிமிர்ந்தான்.

''வா தாயே... ஆடி அசைஞ்சு இன்னும் நிதானமா நடந்து வா. நான் இப்பதான் இந்த பனகல் பார்க்குல ஒரு சதுர அடிக்கு எவ்வளவு புல் முளைக்கும்னு எண்ணி முடிச் சேன். இன்னும் அந்த ஏரியா பூரா பாக்கி இருக்கு...'' என்று அவளிடம் தனது வாலிபக் கோபத்தைக் காட்டினான்.

அவள் பதிலுக்கு ஒரு சிரிப்புதான் சிரித்தாள். அப் பொழுதுதான் தெரிந்தது அதன் வலிமை. அவன் அதன்பின் நிமிரவே இல்லை.

அவளது கைகளால் வருடப்படும் ஒரு பொமரேனியன் நாய்க்குட்டியின் தலையைப் போல் ஆனான். கண்களையும் கிறக்கமாக மாற்றிக் கொண்டான்.

சிமிண்ட் ஸ்லாப் ஒன்று இருவருக்கும் இடமளித்தது.

அமர்ந்து கொண்டதும் அவர்களின் காதல் உபன்யாசம் ஆரம்பமானது. அதில் இப்பொழுது நடந்து கொண்டிருப்பது கல்யாண காண்டம்..

''என்ன சொன்னார் உங்கப்பா...?'' கேட்டாள் அவள்.

''அப்பாகிட்டல்லாம் காதல்னு வாயையே திறக்க முடியாதுன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன். காதலிச்சு ஒண்ணுமில்லாமப் போன என் அண்ணன் விஷயம்தான் பெரிய உதாரணமா முன்னால நிக்குதே. போலீஸ் கம்ப்ளைண்ட், சொத்துல பங்கு இல்ல, அது இதுன்னு பாடா படுத்திட்டாரே.''



''அப்ப உங்கண்ணன் விஷயத்துல நடந்துகிட்டமாதிரி தான் உங்க விஷயத்திலயும் உங்கப்பா நடந்துக்குவாரா?''

''அதுல என்ன சந்தேகம்... ஒண்ணு மட்டும் நல்லா எனக்குத் தெரியும் வர்ஷா. காதல்னாலே அப்பாக்குள்ள அலர்ஜி இருக்கு. டி.வில கூட காதல் படங்கள் ஓடிக்கிட் டிருந்தா ஆஃப் பண்ணிடுவார். அதோட விடமாட்டார், கேபிள் கனெக்ஷன் வயரையும் பிடுங்கிடுவார். இப்படி அவர் நடந்துகிட்டதை நான் பலதடவை பார்த்திருக்கேன்.''

''அப்புறம் எந்தத் தைரியத்துல நீ என்னைக் காதலிச்சே?''

''நான் எங்க காதலிச்சேன். நீ காதலிக்க வெச்சே. இப்படி எல்லாம் ஸ்லிம்மா அழகா இருந்தா, எந்த ரசனையுள்ளவன் சும்மா இருப்பான்?''

''இப்படிப் பேசியே என்னைக் கவுத்துடு. சரி, இதுக்கு என்ன தான் முடிவு?''

''காலகாலமா எல்லா காதலர்களுக்கும் இந்த விஷயத்துல ஒரே முடிவுதான். ஓடிப்போய் கல்யாணம் பண்ணிக்கறது!''

''அப்ப ரிஜிஸ்டர் ஆபீசுக்கு எல்லாரும் ஓடித்தான் வர்றாங்களா... ஆட்டோ டாக்ஸில வர்றதில்லையா?''

''ஜோக்கா... ஹி... ஹி... ஹி... சிரிச்சுட்டேன். போதுமா?''

''நவீன்... இது சிரிக்கிற விஷயம்னு நான் நினைக்கல, ஐ ஆம் வெரி சீரியஸ்..''

''சரி என்ன பண்ணலாம். நீயே சொல்..''

''உன் அப்பாவைப் பார்த்து நான் பேசுறேன். என் அப்பாவைப் பார்த்து நீ பேசு.''

''பேசலாம். ஆனா அதுல ஒண்ணும் பிரயோஜனமில்ல. அதோட ரிசல்ட் எனக்கு இப்பவே தெரியும். ஏன்னா என் அப்பா காதலுக்கு மட்டும் எதிரி இல்லை. காஞ்சனாங்கற

என் அத்தை பொண்ணு தனக்கு மருமகளா வரணும்னு, அவரும் என் அத்தையும் எப்பவோ பேசி முடிவு பண்ணிட்டாங்க. அந்த காஞ்சனாவும் போன்பண்ணி டெய்லி வழியறா. தாங்க முடியலை...''

''அப்படியா?'' -அவள் காற்றுக் குரலில் ஜீவனே இல்லாமல் கேட்டதிலேயே அவளின் அப்பட்டமான சோர்வு அவனுக்கும் தெரிந்தது.

''இதோ பார்.. எதுக்கு இவ்வளவு கவலை? நம்ம நண்பர்கள்ளயே பலர் காதலிச்சு ரிஜிஸ்டர் ஆபீஸ் போய் கல்யாணம் பண்ணிக்கலையா. நாமளே போய் சாட்சிக் கையெழுத்தெல்லாம் போடலியா..?''

''...''

''என்ன சிந்தனை வர்ஷா. உங்கப்பாவும் சரி, எங்கப்பாவும் சரி, ஈகோ பிடிச்சவங்க. அவங்க யாரையாவது காதலிச்சிருப்பாங்க. பதிலுக்கு ஒருத்தியும் அந்த முகரைங்கள காதலிச்சிருக்க மாட்டாங்க. அதுல வெக்ஸ் ஆகியிருப்பாங்க. அதனாலதான் யார் எங்க காதலிச்சாலும் அவங்களுக்கு எரியுது. அவங்களத் தூக்கித் தூரப்போடு.. இந்த நாட்டோட தேசிய பிரச்சினங்கறது வேலை வாய்ப்போ, தண்ணி பிரச்சினையோ கிடையாது. காதல்தான்கற மாதிரி எவ்வளவு கதைங்க... எவ்வளவு சினிமாங்க? அதுல எல்லாம் நடக்காதது நம் வரைல நடந்துடப் போகுது. ஓடுவோம்.. கல்யாணம் பண்ணிப்போம்... பின்னால மனசு மாறி அவங்க வந்தா வரட்டும். இல்லேன்னா நான் நீ நமக்குப் பிறக்கப் போற குழந்தைகள்னு வாழ்ந்துட்டுப் போவோம். இப்ப என்ன?''

-அவன் கேட்ட விதத்தில் உறுதி ஒரு மலையளவுக்குத் தொனித்தது. அவனும் நல்ல வேலையில் இருக்கிறான். எதிலும் குறைந்தவனில்லை. அவளிடமும் படிப்பு இருக்கிறது. வாழ்க்கையில் பொருளாதார சிரமங்களோ அன்புப்



பஞ்சமோ இருக்க வாய்ப்பில்லை. ஆனாலும் இந்தப் பக்கமும், அந்தப் பக்கமுமாய் உள்ள இரண்டு அப்பாக்களால் ஊரைக் கூட்டி கல்யாணம் செய்து கொண்டு அதை வீடியோவும் எடுத்து சி.டியில் போட்டு வைத்துக் கொண்டு ஆசை ஆசையாக அவ்வப்போது போட்டுப் பார்க்கும் நியாயமான வாய்ப்புகளை எல்லாம் இழக்கிறோமே என்று தோன்றியது.

எந்தக் கல்யாண மண்டபம் கண்ணில் பட்டாலும் அதனுள் தங்கள் கல்யாணம் நடப்பது போல் செய்து பார்த்த கற்பனைகள்தான் எத்தனை எத்தனை?

யாராவது கல்யாணத்திற்கு அழைத்து அதற்காகப் பத்திரிகை கொடுக்கும்போதெல்லாம் அதில் மணமகன் மணமகள் பெயர் இருக்கும் இடத்தில் தங்கள் இருவர் பெயர்களையும் எழுதிப் பார்த்து மகிழ்ந்த நாட்கள் தான் எத்தனை?

வர்ஷாவுக்குள் அந்த ரிஜிஸ்டர் ஆபீஸ் கல்யாணம் என்பது ஏனோ கண்டங்கத்திரியாகக் கசந்தது. நவீனோ எப்பொழுது பேசினாலும் ஓடுவது தான் ஒரே வழி என்கிறான். அப்படி என்ன இந்த அப்பாக்கள் இடி அமீன்கள்?

இறுதியாக அவளுக்குள் ஒரு ஆவேசம் எழும்பியது. அது முதலில் குறிவைத்தது அவளது அப்பாவைத்தான்.

காலை பேப்பர் படிக்கும்போது தான் ஜானகிராமன் பெரும்பாலும் அழுத்தமான ஒரு நிதானத்தில் இருப்பார். லுங்கி பனியனில் பதட்டமில்லாத ஒரு கேஷுவலில் எந்த விஷயமாக இருந்தாலும் சுலபமாக நெருங்கலாம்.

வர்ஷாவும் அன்று நெருங்கினாள்.

''அப்பா...''

''சொல்லும்மா..''

''பேப்பரை மடிச்சு வையுங்கப்பா. ஒரு முக்கியமான விஷயம் உங்ககிட்ட பேசணும்.''

''என்னன்னு சொல்லு'' -அவர் பேப்பரை மடிக்க வில்லை.

''அப்பா, இது என் வாழ்க்கைப் பிரச்சினை. உங்களுக்குப் பிடிக்காத காதல் பிரச்சனை. ஓடிப்போய் கல்யாணம் பண்ணிக்கப் பிடிக்காததால் உங்களோட மோத முன்வந்துட்ட என் எதிர்காலப் பிரச்சினைகள்..''

-அவள் மூன்று வரிகளில் சொன்னதே அவரை மூர்ச்சிக்க வைத்துவிட்டது.

''அப்பா... எப்படியும் எனக்கு நீங்க கல்யாணம் பண்ணிவைக்கத்தான் போறீங்க. ஒரு மாப்பிளை பார்த்து பிடிச்சிருக்கான்னும் கேக்கத்தான் போறீங்க. அப்படி ஒரு மாப்பிள்ளையா ஏன் என் நவீன் இருக்கக்கூடாது? எம்.ஆர்.கே. காம்ப்ளக்ஸ் மிஸ்டர் பன்னீர்செல்வத்தோட இரண்டாவது மகன்தான் நவீன். நாலு வருஷமா காதலிக் கிறோம். முதல் வருஷத்திலேயே ஓடிப்போறதுதான் ஒரே வழின்னான் நவீன்... எனக்கு நம்பிக்கை இருக்கு, பொறுமையா இருன்னு சொல்லியே நாலு வருஷம் ஓடிப் போச்சுப்பா. ஆனா எனக்கு ஓடிப்போறது மட்டும் கொஞ்சம்கூட பிடிக்கலை.. நீங்களே எங்க கல்யாணத்தை நடத்தி வைக்கணும்''-வர்ஷா தீர்க்கமாகப் பேசினாள். திடமாகவும் பேசினாள். கோர்ட்டில் ஜட்ஜ் முன்னால் தன் கட்சிக்காரரின் நியாயத்தை எடுத்து வைப்பது போல் பேசினாள்.

ஜானகிராமன் முகத்தில் பிரமிப்பு மட்டுமில்லை, ஸ்தம்பிப்பும் கூட!

லயன் பன்னீர்செல்வம் என்றும் அரிமா பன்னீர் என்றும் நண்பர்களால் அழைக்கப்படும் பன்னீர்செல்வம்



எதிரில் அவரது ஆபீஸ் ரூமில் வர்ஷா கை கட்டிக் கொண்டு அமர்ந்த விதமே அலாதியாக இருந்தது.

''நாலு தடவை போன் பண்ணி பர்சனலா பேச ணும்னே.. என்னம்மா விஷயம். என் கம்பெனில வேலை ஏதாவது வேணுமா? நான் வர லேட்டாகியும் நீ போகாம காத்திருந்து இப்ப என்னைச் சந்திச்சிருக்கேன்னா உன் முயற்சி ரொம்ப ஆழமானதுன்னு தெரியுது. என்ன விஷயம்?''

பன்னீர்செல்வம் அவளுக்கு ஒரு நல்ல ஓபனிங் கொடுத்து முடித்தார். அவளும் ஜானகிராமனிடத்தில் பேசியதை அப்படியே சொல்லி முடித்தாள். அந்த தீர்க்கம், அந்த திடம் பன்னீரையும் பிரமிப்பிலும் ஸ்தம்பிப்பிலும் ஆழ்த்திவிட்டது.

நம்புங்கள்!

நவீன்-வர்ஷா திருமணம் அவர்கள் அப்பாக்கள் இருவரின் பரிபூரண சம்மதத்துடன் கோலாகலமாக நடந்து முடிந்து விட்டது. இருவரும் ஹனிமூனுக்காக குலுமணாலி பக்கமாகக் கிளம்பிச் சென்றுவிட்டனர். விமானத்தில் அவர்களை வழியனுப்பிவிட்டு, வந்த காரில் ஏறும் போது பன்னீர்செல்வத்தைப் பார்க்கவே ஜானகிராமனுக்குக் கூச்ச மாக இருந்தது. ஆனால் ஜானகிராமனைப் பார்த்தபோது பன்னீர்செல்வத்துக்கு நெஞ்சு நிமிர்ந்தது.

தான் ஆசையாகக் காதலித்த அகல்யா தன்னை ஏமாற்றி விட்டு இன்னொருவனைத் திருமணம் செய்து கொண்டு விட்டதாகத்தான் நினைத்துக் கொண்டிருந்தார் பன்னீர். அதனால் தான் காதல் என்றாலே அவருக்கு அப்படிக் கசந்தது.

ஆனால் அகல்யா அவரை ஏமாற்றவில்லை. 'நீ நாங்க சொல்ற மாப்பிள்ளையதான் கல்யாணம் பண்ணிக்கணும்.

இல்லேன்னா இந்த விஷத்தைக் குடிச்சுடுவோம்' என்று பிளாக்மெயில் செய்த அப்பா அம்மாவுக்காக அவள் திருமணம் செய்துகொண்ட நபர்தான் ஜானகிராமன். அவளது காதல் பற்றி ஜானகிராமனுக்கும் தெரியும். அதைச் சகித்துக்கொண்டு அவள் கழுத்தில் தாலி கட்டியதால் ஜானகிராமனின் வரதட்சணைத் தொகையும் இருமடங்காகியது.

ஆனால் அகல்யாவால்தான் அவருடன் நீண்டகாலம் வாழ முடியவில்லை. வர்ஷாவைப் பெற்றுப் போட்டு விட்டு, அந்தக் காதல் வேதனையிலேயே உயிரை விட்டு விட்டாள். எல்லாமே ஜானகிராமனுக்கும் தெரியும்.

அவர் வகையில் வர்ஷாவுக்கு அளித்த சம்மதம் என்பது ஒரு விதத்தில் பரிகாரம். பன்னீர் வரையில் அவர் அளித்த சம்மதம் அவர் அகல்யாவுக்குச் செலுத்திய அஞ்சலி. இது தெரியாத நவீன் டெல்லி செல்லும் விமானத்தில் வர்ஷாவைச் செல்லமாக அணைத்தபடியே கூறிக்கொண்டிருந்தான்.

''வர்ஷா... நாம கட்டாயம் ஓடிப்போயிடுவோம்னு தெரிஞ்சதுல இரண்டு அப்பாக்களுமே பயந்துட்டாங்க. இதை நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கல..!''

அவளும் கிட்டத்தட்ட அப்படித்தான் நினைத்தாள். சிரித்தாள். அவனும் அவளது சிரிப்பில் வழக்கம்போல வழுக்க ஆரம்பித்தான்! அவர்களுக்குத் தெரியாது. இது ஒரு பழைய காதலின் இன்றைய வெற்றி என்று.

## 17. பேச்சு கொடு!

சமாஜத்தில் வேங்கடவன் படத்துக்கு முன்னால் உள்ள குத்து விளக்கைத் தூண்டி விட்டுக் கொண்டிருந்தார் ராமசேஷன். அப்படியே திரும்பி ஒரு பார்வை பார்த்தார். ஹாலில் ஒரு முப்பது நாற்பது பேர் கண்ணில்பட்டனர். பெருமாளுக்கு உகந்த திருவோண நட்சத்திர தினம். சனிக்கிழமையாகவும் அமைந்துவிட்டது. இப்படி நாளும் நட்சத்திரமும் அமைவதெல்லாம் சற்று ஆபூர்வமான விஷயங்கள்.

இந்த மாதிரி சக்தி உள்ள நாட்களில் மந்திர சப்தங்களால் இறைவனைத் தீண்டுவதும் சுலபம். அதிலும் விஷ்ணு சஹஸ்ரநாமமும், வெங்கடேச சுப்ரபாதமும் இறைவனை அப்படியே இழுத்து வந்து எதிரில் அமர்த்திக் காட்டிவிடும்.

ராமசேஷனும் தன் சகாக்களைப் பார்த்து ''உம் ஆரம்ப மாகட்டும்..'' என்றார். சஹஸ்ரநாம பாராயணமும் ஆரம்ப மாகிவிட்டது.

-கம்பீரமாக கோரஸாக ஒலிக்க ஆரம்பித்தது. மன அமைதிக்கு ஆதாரமான மந்திரத்தை, கூட்டமும் ஸ்பஷ்ட மாக எதிரொலித்தது. ராமசேஷன் மட்டும் மனதுக்குள் சொல்லிக் கொண்டே வாசல் பக்கம் பார்த்தார். அப்படியே வெளியே சென்று தாறுமாறாக விடப்பட்ட கால் செருப்புக் களை வரிசையாக எடுத்து வைத்தவர், அங்கங்கே கண்ணில்

பட்ட குப்பைகளை எடுத்து வந்து அதற்கென உள்ள கூடை யிலும் போடத் தொடங்கினார்.

சமாஜ சமையல் கட்டில் நைவேத்ய பிரசாதமான பொங்கல், நெய்யோடு புரண்டு கொதித்ததில் ஒருவித வாசம் பரவியபடி இருந்தது. அங்கே போய் ஒரு பார்வை பார்த்தவர், ''ஐம்பது பேர்க்கு தொன்னையை ரெடி பண்ணிக்கோ. எப்படியும் இன்னும் ஒண்ணரை மணி நேரம் செல்லும் சூடு ஆறிடப்படாது...'' என்று அங்குள்ள வர்களுக்கு உத்தரவு போட்டுவிட்டுத் திரும்பவும் வாசல் பக்கம் வந்தவர், ஒருவித எதிர்பார்ப்போடு வீதியிலேயே கண்ணாக இருந்தார். இடையிட்டது ராமச்சந்திரன் என்பவரின் புல்லட். ஓரமாக வண்டியை நிறுத்திவிட்டு ஒரு நமஸ்காரமும் சொன்ன ராமச்சந்திரனுக்கும் ராமசேஷனின் அந்தத் தேடல் மிகுந்த பார்வை ஒரு ஆச்சரியம்.

''அண்ணா...''

''உம்...''

''யாரான முக்கியபட்டவா வர்றதா சொல்லியிருக் காளா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை...''

''உள்ள பாராயணம் நடந்துண்டுருக்கு... நீங்க இப்படி வெளில யாருக்காக...?'' ராமச்சந்திரன் என்னும் அந்த அன்பர் கேட்கும் போதே ராமசேஷன் எதிர்பார்த்த அந்த உருவம் வீதியில் பிரவேசித்திருந்தது.

ஒல்லியான ஒடிசலான உருவம். ஆனால் சுறுசுறுப்பான நடை!

''வந்துட்டான்... நல்லவேளை மூர்த்தி வந்துட்டான்.''

''அட நம்ம மூர்த்தி... இவனுக்காகவா இந்தப் பார்வை?''



''உனக்கு விஷயம் தெரியாது ராமச்சந்திரா. பாவம் மூர்த்தி... அவன் இப்ப ரொம்ப சோதனையான கட்டத்துல இருக்கான். நாமல்லாம் கை கொடுக்கணும்.''

''என்னண்ணா அப்படி பிரச்சனை...?''

''பாராயணம் முடியட்டும். விஸ்தாரமாவே சொல றேன்...'' என்று ராமசேஷன் சொல்ல, மூர்த்தி அவரைச் சமீபிக்க சரியாக இருந்தது.

''அண்ணா...''

''வா மூர்த்தி... உனக்காகத்தான் காத்துண்டுருக்கேன். என்ன ஆச்சு?''

''என்னத்தண்ணா சொல்வேன்... டாக்டர்கள் ஒவ் வொருத்தர் ஒவ்வொருமாதிரி சொல்றா...''

சொல்லும்போதே மூர்த்திக்கு குரல் உடைந்து விட்டது. கண்களிலும் கரகர வென்று கண்ணீர்.

''என்னாச்சு மூர்த்தி... யாருக்கு உடம்பு சரியில்லை? என்ன உடம்புக்கு?'' -ராமச்சந்திரனும் படபடப்புக்கு மாறினார். ''என்னத்தன்னு சொல்வேன். நன்னா பேசிண் டிருந்தான் பிள்ளை பாச்சா...'' -மூர்த்தி புலம்ப ஆரம்பிக்க வும் ராமசேஷன் பார்வையாலேயே அதற்குத் தடை போட்டார்.

''மூர்த்தி- எதுவும் பேசாம போய் பாராயணத்துல கலந்துண்டு சகஸ்ரநாமம் சொல்ற வழியைப் பார். டாக்டருக்கெல்லாம் டாக்டர் அந்த ஏழுமலையான். அவன் இருக்கான். தைரியமா போ...'' -என்று கத்தரித்து மூர்த் தியை உள்ளே அனுப்பிவிட்டு, அவரும் ராமச்சந்திரனோடு போய் அமர்ந்தார்.

சஹஸ்ரநாம பாராயணம் மிருதுவாகத் தொடர்ந்து கொண்டிருந்தது. ஓடத் தொடங்கி விட்ட ரயிலில் லகுவாக

ஏறுவதைப் போல பாராயண வரிகளை பற்றிக்கொண்டு ராமசேஷனும் தொடர ஆரம்பித்தார்.

ராமச்சந்திரனிடம் மட்டும் டென்ஷன்.

மூர்த்திக்கு அப்படி என்னதான் பிரச்னை? கேள்வியோடு மூர்த்தியைப் பார்த்தபோது மூர்த்தி நீர்த்திரை விழிகளோடு வேங்கடவன் படத்தையே பார்த்தபடி இருந்தார்.

ஒரு வழியாக பாராயணம் முடிந்து, கற்பூர ஆரத்தியும் காட்டி முடிக்கப்பட்ட ஹாலில் ஒரு வித நிசப்தம்.

இந்த மாதிரி பாராயணங்களின் முடிவில் சமாஜத்தை வழி நடத்துபவர் என்கிற முறையில் ராமசேஷன் சில வார்த்தைகள் பேசுவது வழக்கம். அன்றும் ஆரம்பமாயிற்று.

''எல்லாருக்கும் என் நமஸ்காரம்! வேங்கடவனோட தனிப் பெரும் கருணையால் சமாஜத்துல இன்றைய பாராயண வைபவம் நல்ல விதமா முடிஞ்சிருக்கு. இன்றைய பூஜை மற்றும் பிரசாதச் செலவுக்கு பாலன் பொறுப்பேத்துண்டுருக்கார். அவருக்கு நம்முடைய நன்றிகள். அவரும் அவருடைய குடும்பத்தவர்களும் எல்லா ஷேமலாபங்களையும் அடைய வேங்கடவனை நான் வேண்டிக்கிறேன். அப்படியே இந்த கூட்டத்துல ஒரு முக்கியமான விஷயத்தையும் சொல்லிக்கிறேன். நம்ம சமாஜத்தோட உறுப்பினர் மூர்த்தியை உங்களுக்கெல்லாம் தெரிஞ்சிருக்கும். அவரோட பிள்ளை பார்த்தசாரதிக்கு திடீர்னு பேச்சு போயிடுத்து...'' -ராமசேஷன் அப்படி சொன்ன மறுநொடி, எல்லோர் பார்வையும் மூர்த்தி மேல்தான் போய் விழுந்தது. அவரது கண்களில் கண்ணீர்.

''பள்ளிக்கூடத்துல படித்துக்கொண்டிருக்கறப்பவே இந்த விபரீதம் ஏற்பட்டுடுத்து. கஷ்டப்பட்டு படிச்சு முன்னுக்கு வர வேண்டிய ஒரு மாணவனான பார்த்தசாரதிங்கற அந்தப் பிள்ளைக்கு எதனால பேச்சு போச்சுன்னு யாருக்கும் தெரியல. இதனால, அந்தப் பிள்ளையோட படிப்பே பாழாகற ஒரு நிலை. கடந்த பத்துப் பதினைஞ்சு நாளா நம்ம மூர்த்தி இதனால ரொம்பவே பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரியா ஏறி இறங்கிண்டிருக்கான்.



ஒரு டாக்டருக்கும் என்ன காரணம்னு தெரியல.

லட்சத்துல ஒருத்தருக்கு 'வோகல் கார்ட்'ல ஏதாவது பாதிப்பு ஏற்பட்டு, இப்படி பேச்சு போகலாம்னு சொல்றா. ஆபரேஷன் பண்ணா சரியாகிடுமான்னா, உத்தரவாதம் தரமுடியாதுங்கறா. ஆபரேஷனுக்கும் ஆயிரக் கணக்குல செலவாகுமாம். மொத்தத்துல பாவம் மூர்த்தி! இந்த நிமிஷம் நாமெல்லாம் தான் மூர்த்திக்கு இருக்கோம். நமக்கு மேல் அந்த பாலாஜி இருக்கான்.

பொதுவுல கர்ம பலன்தான் கஷ்ட நஷ்டங்களுக்குக் காரணம்ங்கறது நம்ம முன்னோர்கள் நமக்கு சொல்லியிருக்கிற விஷயம். பார்த்தசாரதி விஷயத்துலயும் கர்மா தான் காரணம். இருந்துட்டுப் போகட்டும். நாமல்லாம் எதுக்கு இருக்கோம்? வேங்கடவன் எதுக்கு இருக்கான்? எல்லாருமா சேர்ந்து, ஒரு இரண்டு நிமிஷம் பார்த்தசாரதிக்காக பிரார்த்தனை பண்ணிப்போம். பார்த்தசாரதி பழையபடி பேசணும். நல்ல விதமா படிச்சு முன்னுக்கு வரணும். அதுதான் இப்ப நம்மளோட கோரிக்கை...''- என்றபடியே கைகளைக் கூப்பி பிரார்த்திக்கத் தொடங்கினார். கூட்டமும் மௌனமாக அந்தப் பிரார்த்தனையில் பங்கு கொண்டது!

நாட்கள் ஓடிட புரட்டாசி மாதமும் வந்துவிட புரட்டாசி முதல் நாள் பாத யாத்திரை நிமித்தம் மாலாதாரணம் பண்ணிக் கொள்ளும் நிகழ்ச்சியும் வந்துவிட்டது.

பாத யாத்திரை புரியும் அன்பர்கள், சமாஜத்திற்கு வந்து வேங்கடவனை வணங்கிவிட்டு, துளசி மாலை அணிந்து கொண்டு காவி உடுப்பிற்கு மாறிவிடும் நிகழ்ச்சி அது.

மூர்த்தியும் தன் பிள்ளை பார்த்தசாரதியோடு அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்தார்.

எல்லோர் பார்வையும் பாச்சா என்கிற அந்த பள்ளி மாணவன் மேலேயே... அரை டிராயர் சட்டையில் பாச்சாவும் பால்வடியும் முகத்தோடு எல்லோரையும் பார்த்தான். மூர்த்தி முகத்தில் மட்டும் சுரத்தே இல்லை. பிள்ளைக்குப் பேச்சு போய்விட்ட கவலை... பிறந்த நாளில் இருந்தே பேசாமல் இருந்திருந்தால்கூட இவ்வளவு தூரம் மனது வருந்தாது... நன்றாகப் பேசிக் கொண்டிருந்த பிள்ளைக்குத் திடீரென்று பேச்சு போய்விட்டதென்றால், அதை எப்படி எடுத்துக் கொள்வது?

இதுதான் சாக்கு என்று ஆளுக்கு ஆள் உபதேசிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

''பேசாமா ஊமை, செவிடு இவாளுக்கான ஸ்கூல்ல இப்பவே சேர்த்தரு... இல்லேன்னா பேச்சோட படிப்பும் போயிடப் போறது'' என்று சிலர், ''அங்கே ஒரு சித்தர் இருக்கிறார் இங்கே ஒரு வைத்தியர் இருக்கிறார்... போய்ப் பார்'' என்று சிலர் மூர்த்திக்கு சொன்னதைக் கேட்டுக்கேட்டு காது வலியே ஏற்பட்டு விட்டது.

ஆனால், எதுவும் அவரை எதுவும் செய்யவில்லை.

மாலாதாரணத்தின்போது மகனுக்கும் ஒரு துளசி மாலையைப் போட்டவர், நேராக வேங்கடவன் படத்துக்கு முன்னால் போய் நின்றார். மனதுக்குள்ளே குமுறலோடு அந்த பாலாஜியைப் பார்த்தவர் பிரார்த்திக்க ஆரம்பித்தார்.

''இதோ பார்... நான் உன்கிட்ட கோடி கொடு, லட்சம் கொடுன்னுல்லாம் கேக்கலை. என் பிள்ளைக்குப் பேச்சு



கொடுன்னுதான் கேக்கறேன். சப்தகிரில இருக்கறவன் நீ. சப்தம்னா பேச்சுதானே? சப்தமாவே நீ தான் இருக்கேன்னு சொல்றா... அப்படின்னா பேச முடிஞ்ச எல்லாரோட பேச்சாவும் நீ தான் இருக்கே. என்பிள்ளைகிட்ட மட்டும் ஏன் இல்லாம போனே?

நான் என்ன தப்பு பண்ணியிருந்தாலும் சரி. உன்னை நான் சரண் புகுந்துட்டேன். இந்தப் பாதயாத்திரை காலம் தான் நான் உனக்கு விதிக்கற கெடு.

இந்த உலகத்தில் முழு முதற் கடவுள் நீங்கறது உண்மைன்னா, கலியுகத்துல உன்னை அண்டி வந்தவாளை அரவணைக்கத்தான் உன் கோவில் இருக்குங்கறது சத்யம் என்றால், என் பிள்ளை யாத்திரை முடிஞ்சு எல்லோரும் மாலையைக் கழட்டறதுக்குள்ள பேசியாகணும். அப்படி, அவன் பேசலைன்னா அவனை உன் சன்னிதானத்துலையே கொண்டு வந்து உண்டியல் காசை சேக்கற மாதிரி சேர்த்துடுவேன். அப்புறம் அவன் கோயில் பிள்ளை. உன்கோயில் பிள்ளை! அவனைப் பாக்கறவாள்லாம் அப்புறம் உன்னைக் கல்லாதான் நினைப்பா.

நீ கல்லா? இல்ல, என் பிள்ளை வாய்வழியா வரப்போற சொல்லாங்கறதுதான் இப்ப என் கேள்வி. என்பக்தியை மூலதனமாப் போட்டு, இப்ப இங்க இந்தப் பிரார்த்தனையைப் பண்ணிக்கறேன்.

இனி நீயாச்சு- என் பிள்ளையாச்சு'' -மூர்த்தியின் மனசுக்குள் ஒரு விபரீத பிரார்த்தனை விஸ்வரூபமெடுத்து முடிந்தும் போயிற்று.

விஷயம் ராமசேஷனுக்குத் தெரியவும் ஆடிப் போய் விட்டார்.

''அடப்பாவி... இப்படியா பிரார்த்தனை பண்ணிக்கறது. ஒத்த ரூபாயை உண்டியல்ல போட்டேன்னு சொல்லிட்டு

போடத் தவறினாலே வட்டி போட்டு வாங்கறவனாச்சேடா அந்த ஏழுமலையான்... நீ உன் பிள்ளையைக் கடைசி நிமிஷம் சன்னிதானத்துல விடத் தவறினா என்ன ஆகும் தெரியுமா?'' -அலறினார் சேஷன்.

''விட்ருவேன் மாமா... நிச்சயம் விட்ருவேன். எனக்கு அந்த திடசித்தம் இருக்கு. அப்படி விடாம பண்ண வேண்டியது அவன் பொறுப்பு...'' என்ற மூர்த்தியிடம் வைராக்யம் மின்னியது.

''கவலைப் படாதே மூர்த்தி... உன் பிள்ளை பேசிடுவான். நீ வேணா பாரு...''- என்று நம்பிக்கையளித்தார் ராமசேஷன். மனதுக்குள் ஒரு பிரார்த்தனை புரட்சியே செய்தார்.

பாதயாத்திரை நாளும் வந்தது! சமாஜத்தில் எள்போட்டு எடுக்க இடமில்லாதபடி கூட்டம் வழியனுப்பி வைக்க, அன்பர் படை விறுவிறுவென்று புறப்பட்டது. வழியெல்லாம் அங்கங்கே பாராயணம் பஜனை! அப்போதெல்லாம் பாச்சாவின் மேல் ஒரு பார்வை. ஞாயிறு மதியம் கிளம்பி வியாழன் அதிகாலை திருமலைக்கும் போய்ச் சேர்ந்தாகி விட்டது.

மூர்த்தியிடம் ஒருவித பதட்டம். முகமெல்லாம் வெளிறி, பார்க்கவே பரிதாபமாக இருந்தார். உள்மனது தன் பிள்ளை எப்படியும் சன்னதியில் பாலாஜியைப் பார்த்த நொடி பேசிவிடுவான் என்று கற்பனை செய்து பார்த்து, அதை நிஜமாய் பார்க்கவும் தயாராகி விட்டார்.

நீண்ட வரிசையில் நின்று அடி அடியாய் எடுத்து வைக்கும் போது உடம்பில் ஒரு வித நடுக்கம்.

'கோபாலா... கோவிந்தா... அனாத ரட்சகா... ஆபத்பாந்தவா...' என்று மனதுக்குள் ஒரே நாம சங்கீர்த்தனம். பாச்சாவோ பரிதாபமாகக் கூட வந்தான். கூடவே வரும்



சமாஜ அன்பர்கள் ''பாச்சா ட்ரை பண்ணுடா உம்...'' என்று தூண்டித் தூண்டிப் பார்த்தனர்.

''உன்னால் முடியும். நிச்சயமா முடியும்... கமான், எங்க கோவிந்தான்னு சொல் பார்ப்போம்... உம் கமான்... கோவிந்தோ கோவிந்தா...'' என்று எவ்வளவோ எடுத்துக் கொடுத்தும் பாச்சாவால் முடியவில்லை. முயற்சி அப்படியே உடைந்து விட்டது.

வேங்கடவனின் கருவறையும் வந்துவிட்டது. கண்ணீர் முட்ட, அவனைத் தரிசனம் செய்யும்போது கூட ஒரு நம்பிக்கை... ஆனால், பாச்சா பேசவில்லை. அவனால் பேச முடியவில்லை. சன்னதியை விட்டு மூர்த்தியைச் சிரமப்பட்டுதான் இழுத்து வரவேண்டி இருந்தது.

வெளியே வந்த நொடி 'எனக்கு என் பிள்ளை இல்லாம போகப் போறானே' என்று மனது பித்துப் பிடித்த மாதிரி அரற்ற ஆரம்பித்தது விட்டது.

''வேங்கடவன் என்னை ஏமாற்றிட்டான்... என் நம்பிக்கை போச்சு. எல்லாமே போச்சு. இந்தப் பக்தி, இந்த யாத்திரை எல்லாமே முட்டாள்தனம்'' என்று கூட தோன்றத் தொடங்கிவிட்டது.

''அவசரப்படாதே... துளசிமாலையைக் கழட்டறவரைனு வேண்டிருக்கே. அதுக்கு இன்னும் நிறைய டயமிருக்கு. நம்பிக்கையோட இரு'' என்று அவருக்கு அண்டக் கொடுத்து முட்டுக் கொடுத்து மறுநாள் மதியம் சமாஜத்திற்கு வரும் வரை அவரை ஆற்றுப்படுத்துவதே எல்லோருக்கும் பெரும் பாடாகிவிட்டது.

சமாஜத்திற்கும் வந்தாகிவிட்டது. யாத்திரை நல்லவிதமாக நடந்து முடிந்ததற்கும் உபயதாரர்களுக்கும் நன்றி சொல்லி ராமசேஷனும் பேசி முடிக்கிறார். மாலையை

அனைவரும் கழட்டி யாத்திரை விரதத்தை முடித்துக் கொள்ள இன்னும் சொற்ப நிமிடங்களே உள்ள நிலை...

மூர்த்தியால் அதற்கு மேல் அங்கே இருக்க முடிய வில்லை. 'இனியும் இங்கிருப்பதில் அர்த்தமில்லை. அதே சமயம், அவனால்தான் சொல்லாக முடியவில்லை. அற்ப மனிதனாகிய நானாவது சொல்லில் நின்று காட்டுகிறேன். என் பிள்ளை இனி உன் கோயில் பிள்ளை' என்று எண்ணியபடியே சமாஜத்தின் கடைசி படிக்கட்டை மூர்த்தி தாண்டிய போது "கோவிந்தா..." என்கிற பாச்சாவின் குரல் அவரை அப்படியே திருப்பியது. மொத்த கூட்டமும் உறைந்து போக, பாச்சா மட்டும் வீறு கொண்டவன் போல 'கோவிந்தா கோவிந்தா' என்று கத்தத் தொடங்கியிருந்தான்!

# 18. ஒரு பாட்டில் விஷம்

தற்கொலைதான் ஒரே வழி!

இறுதியாக இப்படித்தான் விஸ்வநாதனால் முடிவுக்கு வர முடிந்தது. தனக்கிருக்கும் பிரச்சனைகளில் இருந்து தப்பிக்க வேறு வழிகள் இருப்பதாகவே அவனுக்குத் தெரியவில்லை.

கிட்டத்தட்ட பதிநாலரை லட்ச ரூபாய் கடன்! வீட்டுக் கடன், டூவீலர் கடன், மூன்று ரூபாய் வட்டிக்கு என கோதண்டம் என்பவனிடம் வாங்கிய கடன் இதுபோக விஸ்வநாதனின் தங்கை நிர்மலா செங்கல்பட்டில் இருக்கிறாள். அவள் தன் சங்கிலியை அடகு வைத்து தந்திருந்த பத்தாயிரம் சொச்சம் என்று கடனை நினைக்கும்போதே மனது ரங்கராட்டினம் போல் சுற்ற ஆரம்பித்துவிட்டது.

ஐந்து நிமிட நேரம் பெரிய அளவில் உணர்ச்சி வயப் பட்டத்தில் பத்தாயிரம் சம்பளத்தில் பார்த்துக் கொண் டிருந்த வேலையும் போய்விட்டது.

எதைத் தொட்டாலும் நஷ்டம் மனைவி உள்பட யாரைப் பார்த்தாலும் சண்டை.... மொத்தத்தில் சலிப்புதான் மிஞ்சி யது.

எல்லாவற்றையும் கூட்டிக்கழித்து நினைத்த போதுதான் தற்கொலை எண்ணம் தோன்றியது. 'ஆமாம்... அதுதான் சரியான தீர்வு!' ஆனால்...? விஸ்வநாதன் ஆனால் என்ற கேள்விக்குத் தாவியவனாகப் பாடம் படித்தபடி இருக்கும் தன் இரு குழந்தைகளைப் பார்த்தான். பெரியவள் ப்ரியா,

சின்னவள் ஷ்ரேயா! ஷ்ரேயா இப்பொழுது தான் எல்.கே.ஜி.யில் இருக்கிறாள். அவள் முன்னால் நெடிய எதிர்காலம் ஒன்று காத்துக்கிடக்கிறது. பெரியவள் எட்டாம் வகுப்பு... அவளும் டிகிரி வாங்கி ஒரு உயரத்துக்குப் போய் நல்ல மாப்பிள்ளை கிடைத்து வாழ்க்கைப் பட்டாக வேண்டும்.

இரண்டு பூங்கொத்துகளை பிரம்மன் குழந்தைகளாக்கிக் கொடுத்துவிட்டான். இவர்களைத் தவிக்கவிட்டு விட்டுப் போனால் அதன்பின் இருவரும் தெருவில்தான் நிற்பார்கள்.

ஒருமுறை மீனாட்சியம்மன் கோவில் வாசலில் ஒரு பிச்சைக்கார குழந்தையைப் பார்த்தபோது அச்சு அசல் ஷ்ரேயா போலவே இருந்தது. அவளைப் பார்த்த நிலையில் தற்கொலைதான் தீர்வு என்கிற முடிவுக்கு வந்துவிட்ட நிலையில் பசங்களுக்கு ஏதாவது செய்துவிட்டுப் போக வேண்டும். இல்லாவிட்டால் இவர்களையும் காலம் பிச்சை யெடுக்க வைத்துவிடும் என்று பயந்தது அவன் மனது.

என்ன செய்யலாம்?

விஸ்வநாதனின் போக்கு, பேச்சு எல்லாவற்றிலுமே ஒரு அசாதாரண மாற்றம்! தெருவில் ஒரு ரவுடிப் பயல் இருக்கிறான். குடித்துவிட்டு கத்திக் கொண்டே இருப்பான். அப்படியே டீ வாங்கிக்கொடு, சிகரெட் வாங்கிக் கொடு' என்றும் பார்ப்பவர்களை மிரட்ட ஆரம்பித்துவிடுவான். எதிர்ப்பதற்கும் யாருக்கும் துணி வில்லை.

விஸ்வநாதனும் பயப்படுபவன் தான், ஆனால் சாவது என்று தீர்மானம் செய்து விட்டிருந்ததால் அதற்கு முன் இந்த ரவுடியை சினிமா ஹீரோ போலவே போட்டுப் புரட்டி எடுத்தாலென்ன, என்று தோன்றியது.

இனி இழக்க என்ன இருக்கிறது... அதுதான் எல்லாமே போய் விட்டதே....? எப்படியும் போகப் போகிறோம்.



இவனை மோதி உமிழ்ந்துவிட்டுப் போவோம். எவ்வளவு நாள் படுத்தியிருப்பான்?

''என்னாடா முறைக்கிறே... பசிக்குது... டிபன் சாப்பிட ணும். ஒரு அம்பது ரூபா இருந்தா கொடு'' ரவுடி தாடை யைத் தடவியபடியே ஆரம்பித்து விட்டான்.

''அம்பது ரூபா போதுமா கண்ணு...?'' என்று பதிலுக்கு விஸ்வநாதன் கேட்டவிதத்தில் நல்ல இளக்காரம். அதுவே ரவுடியையும் கொஞ்சம் அதிரச் செய்தது. அதன்பின் ஒரு சில நிமிடங்களிலேயே பற்றிக் கொண்டு விட்டதும். விஸ்வ நாதன் விட்ட அறையிலும் குத்திலும் வெலவெலத்து விட்டான் ரவுடி.

எல்லா ரவுடிகளையும் போலவே 'வந்து கவனிச்சுக் கறேண்டா உன்னை...' என்றபடியே ஓடிப்போனான். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் நெருங்கி வந்தார்கள், ''வீச்சு... என்னப்பா இது? நீ இருக்கற நிலைல இதெல்லாம் தேவைதானா?'' என்று ஒரு பெரியவர் பரிதாபப்பட்டார். அவரை அலட்சியமாகப் பார்த்த விஸ்வநாதனுக்குள் அடுத்த நொடியே ஒரு குயுக்தியான எண்ணம். அதன் எதிரொலியாக இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்ட் ஒருவரிடம் ஒரு பத்து லட்ச ரூபாய்க்கு பாலிஸி எடுத்தான். முதல் தவணையை அவரே கட்டி விடுகிறேன் என்றதால் கைச் செலவும் இல்லை. அடுத்த தவணை கட்ட உயிரோடு இருக்கப் போவதும் இல்லை. இந்த ரவுடியேகூட கூட்டாக வந்து கொலை செய்துவிட்டுப் போகலாம். அப்படிச் செய்தால் தற்கொலை செய்து கொண்டுவிட்டோம் என்கிற கோழை முத்திரையும் விழாது போய்விடும். இப்படி பலவாறு மனதுக்குள் எண்ண ஓட்டம்... எதற்கும் இருக் கட்டும் என்று எஸ்.பி. ஆபீஸுக்கு ஒரு கடிதம் எழுதினான். அதில்தான் தட்டிக் கேட்ட ரவுடியால் தனக்கு எப்பொழு தும் எதுவும் நேரலாம் என்று குறிப்பிட்டவன், அப்படி

ஏதாவது நடந்தால், தன் குடும்பத்துக்கு அரசாங்கம்தான் பொறுப்பு ஏற்க வேண்டும் என்றும் அதில் ஒரு வரியைச் சேர்த்துவிட்டான்.

மறுநாளே எஸ்.பி ஆபீஸிலிருந்து சிலர் வந்து அவனைக் கூட்டிக்கொண்டு போய் எஸ்.பி. முன்நிறுத்த அவர் ஆறுத லாகப் பேசி காவலுக்கு ரகசியமாக ஆள் போடுவதாகக் கூறி அவனை அனுப்பி வைத்தார்.

இந்த மாதிரி விஷயங்கள்தான் கை கால் முளைத்து பேயாகத் திரிய ஆரம்பித்துவிடுமே...? விஸ்வநாதனை எஸ்.பி. கூப்பிட்டு பேசிய விஷயம் பரபரப்பாகப் பரவி விட்டது. ஒரு கட்டத்தில் விஸ்வநாதன் காவல் துறையின் சி.ஐ.டியாகக் கூட இருக்கலாம் என்கிற அளவுக்கு அது போனதுதான் விசேஷம்.

விச்சுவை வீதியே வித்தியாசமாகப் பார்த்தது.

அந்த ரவுடியால் பாதிக்கப்பட்ட பலர் விஸ்வநாதனிடம் வந்து முறையிட்டார்கள்.

அவர்கள் போனபின் அந்த ரவுடியே வந்ததுதான் ஆச்சரியம்.

''அண்ணாத்தே... நீ பெரிய ஆள் அண்ணாத்தே. என்னாண்ட பயப்படற மாதிரி பயந்து நோட்டம் போட்டுக்கறே நீ... இதெல்லாம் இப்பதான் எனக்குத் தெரியுது. நான் எப்பவும் பவர் உள்ள ஆளுங்களாண்ட மோதமாட்டேன். நம்ம உதார் எல்லாம் உளுத்த பசங் களாண்டம் தான்.

இனி உன் வழிக்கே வர மாட்டேன். அவ்வளவு ஏன்... இந்த ஏரியா பக்கமே நான் வரலை. நம்ம இடத்தையும் மாத் திக்கறேன். பெரிய மனசு பண்ணி என் மேல கொடுத் திருக்கற புகாரை வாபஸ் வாங்கிடு'' என்று அந்த ரவுடி



கையைப் பிடித்துக்கொண்டபோது விஸ்வநாதனுக்கே ஒன்றும் புரியவில்லை.

அதன்பின் அவனிடம் கந்து வட்டிக்குப் பணம் கொடுத்த கோதண்டமும் வந்தார். அவரும் 'வட்டியெல்லாம் வேண் டாம் விச்சு... அசலைக்கூட சௌகரியப்படும்போது கொடு... போலீஸ்கிட்ட மட்டும் போட்டுக் கொடுத்து டாதே. அப்புறம் நான் மாமூல் கொடுத்தே போண்டியா கிடுவேன்'' என்று பேசிவிட்டுப் போனார்.

விச்சுவின் மனைவிகூட அவனை வித்தியாசமாகப் பார்த்தாள்.

''இப்பதான் உங்களை ஒருநல்ல ஆம்பளையா பாக் கறேன். நீங்க வேலை பார்த்த ஆபீஸ்ல உங்க மேனேஜர் கூட பயந்துகிட்டு இருக்காருங்க. அவர்கூட மனஸ்தாபம் வந்து அவர் மரியாதை இல்லாம பேசினார்னுதானே எழுதிக் கொடுத்தீங்க... 'தப்பு பண்ணிட்டேம்மா, விஸ்வ நாதன் திரும்ப வந்தா சேர்த்துக்கறேன்னு சொல்லு நெஜமா சொல்றேன்... விச்சுவோட தைரியம் யாருக்கு வராது. நான் ரொம்பப் பெருமைப் படறேன்னும் சொல்லு'னு காலைல போன் பண்ணி ஒரேடியா வழிஞ்சாரு...''

மனைவியின் பேச்சு விஸ்வநாதனின் காலடி நிலத்தையே நகர்த்தியது. பெருமூச்சோடு ஒரு ஓரமாய்ப் போய் உட்கார்ந்தான். மனசுக்குள்ளும் திரும்பிப் பார்த்தான்.

எல்லா மாற்றங்களும் உயிரை விட்டு விடுவது என்று தீர்மானித்த பிறகுதான்... உயிர்மேல் பற்று இருந்தவரை செயல்பாடுகளில் தைரியமே இல்லை. தயக்கம், குழப்பம் என்று விதவிதமான உணர்ச்சிகளின் பிரதிநிதியாகவே இருந்துவிட்டோம்.

அதை உதறின நொடி எப்பேர் பட்ட மாற்றம்...?

பாக்கெட்டுக்குள் ஒருசிறு பாட்டிலில் விஷம் இருந்தது. கையை விட்டுத் துழாவிய போது நிரடியது. வெளியே எடுத்து கண்ணுக்கு முன்னே நிறுத்திப் பார்த்தான். சிரித்தான். அதில் விஷம் என்றுதான் எழுதியிருந்தது. ஆனால் அவனுக்கு அமிர்தமாகத் தோன்றியது.

வாழச் சொல்லிக் கொடுத்து விட்டதே...

தூக்கியெறியவும் மனது வரவில்லை.

பாக்கெட்டிலேயே வைத்துக் கொண்டான்.

அதுவும் அவனுக்குள் தனது தைரிய உற்பத்தியைத் தொடங்கியது.

# 19. தாய்ப்பால்

ஒரு தினுசான சப்தம் கேட்டு எட்டிப் பார்த்தாள் சகுந்தலா. வாசலில் மோட்டார் சைக்கிளில் ஸ்ரீதர் தெரிந்தான். கூடவே அவனது சினேகிதன் ராம்.

''வாப்பா ஸ்ரீதர்.. ராம் நீயும்தான்!'' -வரவேற்றாள் சகுந்தலா. ஸ்ரீதர் ஒரு சகஜ சிரிப்புடன் சோபாவின் மேல் அமர்ந்து ஷூவைக் கழட்டத் தொடங்கினான். ராமுவும் சோபாவில் சாய்ந்து கொண்டான்.

ஸ்ரீதர், சகுந்தலாவுக்கு ஒரே பிள்ளை.

ஐ.ஐ.டி.யில் எம். டெக்கெல்லாம் படித்தவன். அந்தப் படிப்புக்கெல்லாம் சேலத்தில் நல்ல வேலை இல்லை!

கர்னாடகாவில் தும்கூருக்குப் பக்கத்தில் ஒரு நிறுவனத்தில் முப்பதாயிரம் சம்பளத்தில் வேலை பார்க்கிறான்.. மூன்று மாதங்களுக்குப் பிறகு இப்போதுதான் ஊருக்கு வந்திருக்கிறான்.

''என்ன ஆண்ட்டி.. பய மூணுமாசம் கழிச்சு வந்துருக்கான். உங்ககிட்ட பெருசா ஒரு எக்ஸைட்மெண்ட்டும் இல்லியே..'' -ஆரம்பித்தான் ராமு.

''என்ன பண்ணணும்ங்கறே. முதல்ல இந்த காபியைக் குடுங்க''- என்று காபி தம்ளரை நீட்டினாள்.

''ஏண்டா... நீயும் கேஷுவலா வந்து நிக்கறே. ஆமா... உங்கம்மா அப்பாவுக்கு எதுவும் வாங்கிட்டு வரலியா?''

"தும்கூர்ல புளிதான் ஃபேமஸ். அதைச் சுமந்துகிட்டு வரச் சொல்றியா?"

"ஏன் பக்கத்துலதானே பெங்களூர், மைசூர்லாம் இருக்கு. அங்கல்லாம் போய் வாங்கிட்டு வரலாமே?"

-ராமின் மடக்கல் வேலை செய்தது. ஸ்ரீதர் மௌன மானான். காபியைச் சூப்பினான். அதில் சர்க்கரைக் குறையை உணர்ந்தவன் அப்படியே வைத்தான்.

"ஏம்ப்பா?"

"வழக்கம்போல் சர்க்கரை போட மறந்துட்டேன். வேற என்ன?" -இறுக்கமான குரலில் சொன்னாள். தாய் மக னிடம் பேசுவது போலவே இல்லை. ராமுவும் கவனித்தான். பேச்சை மாற்ற விரும்பினான்.

"ஆமாம், என்னடா திடீர்னு கிளம்பி வந்துருக்கே?"

"என்னமோ தோணிச்சு... அதான் ஒரு நாலுநாள் லீவு போட்டுட்டு ரயில் ஏறிட்டேன். சரி சரி... நீ போய் உன் வேலையை முடிச்சுட்டு வா. நானும் குளிச்சுட்டு ரெடியா இருக்கேன். நல்ல சினிமாவா எதுக்காவது போகலாம்."

ஸ்ரீதர் மெல்ல கலகலப்புக்கு மாறி எழுந்து நின்று சோம்ப லெல்லாம் முறித்தான். ராமுவும் தன் ஹெல்மெட்டைத் தூக்கி தண்ணிக்குடம் போல இடுப்பில் வைத்துக் கொண்டு புறப்பட்டுப் போனான்.

சகுந்தலா மட்டும் அவனையே வெறித்துக் கொண்டிருந்தாள்.

"என்னம்மா... எதுக்கு அப்படி வெறிக்கறே?"

"வெறிக்காம... பொங்கலுக்கு வான்னப்போ வரலை. உன் அப்பா பொறந்த நாளைக்கு வான்னப்போ வரலை. இப்ப ஒரு காரணமும் இல்லாம திடுதிப்புன்னு வந்து நிக்கறியேப்பா..."



-சகுந்தலா அமட்டலாகப் பேசி வருந்தினாள். அப் பொழுது அவன் ஒரு இன்லண்ட் லெட்டரை எடுத்து அவள் எதிரில் நீட்டினான்.

"என்ன இது?"

"படி..."

அவளும் படிக்கத் தொடங்கினாள்.

*அன்புள்ள ஸ்ரீதர் கண்ணுக்கு!*

*சின்னம்மிணி ஆசீர்வாதத்துடன் எழுதிக் கொள்வது, என்ன கண்ணு... இப்படி போனா போன இடம்னு போய் உட்கார்ந்துக் கிட்டே....? இங்க உன் அம்மாவும் அப்பாவும் நீ நல்லா சாப்பிடுறியா, தூங்கறியான்னுல்லாம் எவ்வளவு கவலைப்படறாங்க தெரியுமா? அவங்கள பார்க்கவே பரிதாபமா இருக்கு கண்ணு. என்னையும் அந்த லிஸ்ட்ல சேர்த்துக்க கண்ணு. எனக்கு நீ கண்ணுலயே இருக்கே.*

*ஒரு பொண்ணு பெரிய மனுஷியாகற நேரம் நல்ல நேரமா இருக்கணும் கண்ணு. நான் திரண்ட நேரமே சரியில்லை. அதான் புருஷன் புள்ளைன்னு யாரும் எனக்குத் தங்கலை.*

*ஏதோ உன் அம்மா அப்பா தயவுல உங்க வீட்ல வேலைக் காரியா காலத்தை ஓட்டிட்டேன். உன் பாசம்தான் இந்த உலகத்துல எனக்கு வஞ்சனையில்லாம கிடைச்ச ஒரே விஷயம். இப்ப மூணு மாசமா அதுக்கும்கூட தட்டுப்பாடு. இப்ப கேக்கறேன். ஒருவாட்டி வந்துட்டுப் போ ராசா... வந்து உன் கையால ஒரு டம்ளர் பால் கொடு. உன்னை கடன்காரனா வைக்க, இந்த அம்மிணிக்குப் பிரியமில்லை.*

*இப்படிக்கு*
*சின்னம்மிணி*

-கடிதத்தைப் படித்து முடித்த சகுந்தலா சற்றே வெளிறிய முகத்துடன் நிமிர்ந்தாள்.

''அம்மிணிம்மா இப்ப எங்க...? நான் வந்து இருபது நிமிஷம் ஆச்சு. எட்டிக்கூட பார்க்கலையே. மார்க்கெட்டுக்கு அனுப்பியிருக்கியா?''

-சட்டையைக் கழட்டி ஹேங்கரில் மாட்டியபடியே கேட்டான்.

சகுந்தலா மென்று விழுங்கியவளாக ''அவ விஷயம் முடிஞ்சு போச்சுப்பா!'' என்றாள் திக்கித்திணறி. அவனுக்கு சுரீர் என்றது.

''என்னம்மா சொல்றே?''

''நேத்து காலம்பற நெஞ்சுவலி அதிகமாயிடிச்சு. உன் அப்பா டாக்டர்கிட்ட கூட்டிக்கிட்டுப் போனார். வழியிலேயே மூச்சு நின்னு போச்சாம்...!''

''மைகாட்... அப்புறம்?''

''நல்லவிதமா அவளை அடக்கம் பண்ணிட்டு வந்தார்...''

அப்படியே அயர்ந்துபோனவன், அறைக்குப்போய் கதவை இறுக மூடிதாழிட்டுக் கொண்டான்.

சகுந்தலா நடுவில் குளிக்க, சாப்பிட என்று கதவைத் தட்டித் தட்டிப் பார்த்து அலுத்து விட்டாள். கணவனுக்கு போன் செய்து தகவலைக் கூறவும், லஞ்ச் பிரேக்கில் அவர் தன் ஸ்கூட்டரில் பறந்துவந்தார். அவரும் கதவைத் தட்டித் தட்டிப் பார்த்தார். ஸ்ரீதருக்கு ஏனோ எழுந்திருக்கவே பிடிக்கவில்லை. ஆனால் அப்பா-அம்மா பேசிக்கொள்வது நன்றாகவே காதில் விழுந்தது.

''இதத்தான் சகுந்தலா தாய்ப்பாசம்ங்கறது. தான் ஆடா விட்டாலும் சதையாடும்னு சொல்றதுக்கெல்லாம் அர்த்தம் இதுதான்.

உன்னால் கொடுக்க முடியாத தாய்ப்பாலை அவ கொடுத்துக் கொடுத்து வளர்த்தா பாரு. இது அதால வந்த பாதிப்புடி.



நான் வேண்டாம் வேண்டாம்னு சொன்னேன். இல்ல குழந்தை சவலையாயிடும்னு நீதான் கேக்கல. அவளும் என்னவோ தன்பிள்ளைக்குக் கொடுக்கற மாதிரி கொடுத்தா கொடுத்தா... அப்படிக் கொடுத்தா, இப்ப பார்! அது படுத்தற பாட்ட...''

-அப்பா சொன்னதைக் கேட்ட நொடி ஸ்ரீதருக்கு உச்சி மண்டையில் ஒரு மின்னல் வெட்டியது போல இருந்தது. கடிதத்தில் சின்னம்மிணி எழுதியிருந்த வரிகளுக்கு இப்போது அர்த்தம் புரிந்தது.

-ஆவேசமாக கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்தான். ஓடிப்போய் அப்பாவைக் கட்டிக் கொண்டவன் ''அப்பா ரொம்ப தேங்க்ஸ்ப்பா... இப்பவாவது இந்த உண்மையைச் சொன்னீங்களே'' என்றவன் ஓடிப்போய் ஃப்ரிட்ஜைத் திறந்தான். பால்பாக்கெட்டுகளை அள்ளி வெளியே எடுத்தவன் ஒரு செம்பில் அதை நிரப்பிக் கொண்டான். அப்படியே திரும்பி அப்பாவைப் பார்த்தான். அவருக்குப் புரிந்துவிட்டது.

''எங்கப்பா... சுடுகாட்டுக்கா...?''

''ஆமாம்ப்பா...'' அவன் குரல் கூட உடைந்து போனது.

''இந்தப் பால் கம்மிப்பா. போற வழியில ஒருகுடமே வாங்கிப்போம். புறப்படு!'' என்றார் அவர் அமைதியாக.

-இருவரும் புறப்பட்டனர்.

''இருங்க நானும் வரேன்...'' -சகுந்தலாவும் சேர்ந்து கொண்டாள். எல்லாப் பாலையும் அங்கே தாய்ப்பால் வென்றுவிட்டதைப் பார்க்க முடிந்தது.

# 20. கரிப்பு

கொட்டிக் கொண்டிருந்தது மழை!

விடிந்ததே தெரியவில்லை. கண் விழித்துப் பார்த்த சிவ குருநாதன் எழுந்து கொண்டார். வெளியே வந்து கதவைத் திறந்தார்.

''பேப்பர்காரன் வந்து பேப்பர் போட்டிருப்பானா?''

கேள்விக்குப் பதிலாக, பேப்பர் ஒரு பாலீதின் கவருக்குள் சுருட்டிக்கட்டப்பட்டு வழக்கம்போல வாசலில் கிடந்தது!

ஒரு சின்ன ஆச்சரியம் சிவகுருநாதனுக்குள் பேப்பர் காரப் பையனை உத்தேசித்து தோன்றியது.

பேப்பர் படித்து முடித்து வென்னீர் போட்டு குளித்து விட்டு வெளியே பார்த்தபோது மழைவிட்டிருந்தது. மார்க் கெட் வரை போய் வந்தால்தான் சமைக்கலாம் என்றது காலியாக காட்சியளித்த ஃப்ரிட்ஜ்.

புறப்பட்டார்.

மார்க்கெட்டிலும் கண்ணில் பட்டான் அந்த பேப்பர் காரப் பையன். பேர் பாபு!

''என்ன சார் காய் வாங்கவா...?'' -என்று கேட்டபடியே சிரித்தான்.

''ஆமாம்... நீ இங்க என்ன பண்றே?''

''காலைல நாலு டு ஆறு பேப்பர் போட்ற வேலை. அப் பால ஏழு டு பத்து இங்க மார்க்கெட்ல காய் வியாபாரம். அப்புறமா பதினோருமணிக்கு ஒரு டெய்லர் கடைக்குக்



காஜா எடுக்கப் போவேன்... இப்படியே ராத்திரி எட்டு ஒன்பது வரை தொடர்ச்சியா வேலைங்க...''

-படபடவென்றும் சுறுசுறுப்பாகவும் பேசினான். அவருக்கு பிரமிப்பாக இருந்தது.

இந்த வயதில்தான் இவனிடம் எத்தனை உழைப்பு! எத்தனை சுறுசுறுப்பு!

கேள்விக்குள் அவர் ஊஞ்சலாடும்போது அவன் கேரட், முள்ளங்கி, தக்காளி என்று காய் கறிகளை அவர் கூடையில் அடுக்கி விட்டு ஒரு துண்டுச் சீட்டில் விலை விபரத்தையும் எழுதி நீட்டியபோது அவரிடம் அசறல் கூடிப்போனது.

ஒவ்வொரு காரியத்தையும் சமயோஜிதத்தோடும் ஈடு பாட்டோடும் செய்கிறான். எல்லாமே இந்த உலகம் அல்பமாகக் கருதி ஒதுக்கி வைத்திருப்பவை. ஆனால், அதில் ஒருவன் பளிச்சென்று உள்ளம் தொடுகிறான்.

நெகிழ்ந்து போன சிவகுருநாதன் கேட்டார்.

''ஆமா... நீ படிக்கலையா?''

''எங்க சார் அதுக்கு நேரமிருக்கு... நான் இப்படி நாலு வேலை பார்த்தே வீட்டுக்கு பத்தமாட்டேங்குது'' -அவர் அதைக் கேட்டபடியே திரும்பினார்.

வீட்டிற்கு வந்த பிறகும் அந்த பாபுவே மனதை ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தான். இதுவரையில் அவரை யாருமே பெரிதாகக் கவர்ந்ததேயில்லை. ஓய்வு பெற்ற மிலிட்டரி அதிகாரியான அவர் திருமணமும் செய்து கொள்ளவில்லை.

எனவே உறவு என்று சொல்லிக் கொள்ள அந்த வீட்டில் ஓர் உயிர் கிடையாது... தனிமைதான் அவருக்கு இப் போதைக்கு உற்ற ஒரே துணை.

தொடக்கத்தில் இனிப்பாக இருந்த அது. இப்போது மிகவும்தான் கசக்கிறது.

சுறுசுறுப்பும் பரபரப்புமான பாபு வந்தால் ஒருவேளை இந்தத் தனிமை ஒழிந்து இந்த வீட்டில் நல்ல மலர்ச்சி தெரியுமோ? கடின உழைப்புக்குள் நாலு வேலை பார்க்கும் அவனைப் படிக்க வைத்தால் அதிலும் பிரமாதமாக முத்திரை பதிப்பான். ஒரு நல்ல இளைஞன் பேப்பர் போட்டும், காய் விற்றும் வீணாகி விடக்கூடாது.

மறுநாள் காய்கறிக் கடையில் பாபுவைப் பார்த்துக் கேட்டார்.

''பாபு... இனி நீ இப்படி நாலு அஞ்சு வேலை பார்த்து கஷ்டப்படவேண்டாம். ஆமா, இதுல எல்லாம் சேர்த்து உனக்கு எவ்வளவு சம்பளம் வரும்?''

''என்னா சார்... ஒரு இரண்டாயிரம் வந்தா அதிகம் சார்...''

''சரி, நான் மூவாயிரம் தரேன். என் வீட்டுக்கு வேலைக்கு வந்துடு.''

''சார், நிஜமாவா சார்...'' -அவன் சிலிர்த்துப் போனான்.

''ஆமாம்... நாளைக்கே கூட நீ வந்து சேரலாம். சாப்பாடு, துணி எதைப் பற்றியும் கவலைப்படாதே. நீ என் மகன் மாதிரி'' சொன்னபடியே அவர் காய்கறிக்கான காசை நீட்டினார்.

''அட எதுக்கு சார் காசு...? நீங்க போங்க சார். நான் பாத்துக்கறேன். நல்லவேளை, முதலாளி கடைல இல்லை. இந்தாங்க இந்த காலி ஃப்ளவரையும் எடுத்துப் போட்டுக் கிட்டுப் போங்க...''

-பெரிய பூவாய் இரண்டை எடுத்து சிவகுருநாதன் கையில் போட்டான்.

அவர் மிதிக்கப்பட்டது போல மாறிப்போயிருந்தார். கண்களில் நயாகரா எட்டிப் பார்க்கத் தொடங்கியது.

# 21. ஒரு பாவி... ஒரு ஆவி...

கிட்டத்தட்ட நாற்பது, ஐம்பது வீடுகள்! புரோக்கர் துரைப்பாண்டிக்கு நுரை தள்ளிவிட்டது. கண்ணனுக்கு ஒரு வீடும் சரிப்பட்டு வரவில்லை. "கிட்டத்தட்ட நாக்கு தள்ளிப் போச்சு சார்... உங்களுக்கு எந்த மாதிரி வீடு வேணும்னு கேட்டா, அதையும் சொல்ல மாட்டேங்கறீங்க... ஆளை விடுங்க..."

"சரிய்யா... கோவிச்சுக்காதே... இப்ப சொல்றேன்... அஞ்சு ஆறு லட்சத்துல ஆயிரம் சதுர அடிக்குக் குறையாத படி ஒரு ஃப்ளாட் கிடைக்குமா?"

"சார் உங்களுக்கே இது அதிகமா தெரியல..."

"என் பட்ஜெட் அவ்வளவுதான்... உன்னால முடியுமா? முடியாதா?"

"சார்... இது பேராசை சார்! அஞ்சு லட்சத்துக்கு இன்னிக் கெல்லாம் ஒரு வராண்டா கூட கிடைக்காது சார். ஒவ் வொண்ணும் பேய் விலை விக்குது சார்..."

-பேய் என்று சொல்லவும்தான் சட்டென்று பொறி தட்டியது போல, அந்த ஃப்ளாட் ஞாபகம் வந்தது.

"சார்ர்" -என்றான். கையை எடுக்காமல் அழுத்தின காலிங் பெல் மாதிரி..

"ஒரு ஃப்ளாட் இருக்கு சார். மூணு வருசமா பூட்டியே கிடக்குது. அதுல ஒரு சின்ன சிக்கல். அந்த ஊட்ல ஒரு மிடில்கிளாஸ் ஃபேமிலி குடி இருந்துருக்காங்க. அவங்

களுக்கு என்னா கஷ்டமோ.. மொத்தம் ஏழு பேர். ஒரு நாள் விஷத்தைக் குடிச்சு அப்படியே உசுரை உட்டுட்டாங்க. பேப்பர்ல்லாம் கூட வந்துச்சு.''

''ஓ... அதான் விஷயமா?''

''ஆமா சார்... அதுல இருந்து அந்த ஊடே ராசியில லைன்னு பயப்பட்றதால, யாரும் வாடகைக்குக்கூட, குடி வர்றதில்லை. யாரும் வராததால ஊடே பாழடைஞ்சு போச்சு சார்...''

''சரி... அந்த வீட்டையே பேசி முடிச்சுடு.''

''சர்ர்ர்ர்!''

''நிஜமாதான்யா, இப்படி ஒரு வீட்டைத்தான் நானும் தேடிக்கிட்டிருந்தேன்.''

சாமான் செட்டெல்லாம் வந்து இறங்கும்போது, அக்கம் பக்கமெல்லாம் அதை ஓர் அதிசயக் காட்சியாகத்தான் பார்த்துக்கொண்டிருந்தது. கண்ணனுடன் அவன் மனைவி சந்திராவும் வந்திருந்தாள். கண்ணன் நல்ல வெளுப்பு- அவளோ அட்டை கறுப்பு. ஆனால், கழுத்து கொள்ளாத படி நகை! விரல்களிலும் மோதிரம் கூடவே சந்திராவின் அப்பாவும்.

கண்ணன் தம்மடிக்க வெளியில் வந்தபோது, வயதான ஒருவர் அவனை நெருங்கி அணக்கமாகச் சிரித்தார்.

''தம்பிதான் குடி வந்திருக்கீங்களோ? ரொம்பத் துணிச்சல்தான்...''

''யாரோ ஒரு ஏழெட்டு பேர் தற்கொலை பண்ணி கிட்டாங்களே; அந்த விஷயம்தானே?''

''அதேதான் அதன் பிறகு வீட்டுக்குள்ளே காச்சு மூச்சுன்னு ஒரே சப்தம் ஆமா, உங்களுக்கு வேற நல்ல வீடே கிடைக்கலையா?''



-கண்ணன் பதிலுக்கு அவரை ஆழமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''வீட்டை விலைக்குப் பேசி பத்திரம் முடிச்சபிறகுதாங்க விஷயம் தெரியும். புரோக்கர் மறைச் சிட்டான்...'' என்றான்.

''அடடா... இப்படி வந்து மாட்டிக்கிட்டீங்களா?''

''ஆமாங்க. தயவுசெய்து என் பொண்டாட்டி மாமனா ருக்கு எதுவும் தெரிய வேண்டாம். நான் பிசினஸ் விஷயமா, எப்பவுமே ஊரைச் சுத்தறவன். பொண்டாட்டி தனியாத் தான் இருப்பா. அவளுக்கு இந்த விஷயமெல்லாம் தெரிஞ்சா, அப்புறம் தூங்கவே மாட்டா...'' கண்ணனின் குரலில் ஒரு திட்டமிட்ட கெஞ்சல்.

அன்றைய இரவில் கண்ணனும் அவன் மனைவியும் பெட்ரூமில் படுத்துக்கொள்ள, ஹாலில் பாயை விரித்துக் கொண்டு அதுவே அதிகம் என்கிற மாதிரி படுத்துவிட்டார் அவனது மாமனார்.

விளக்கை எல்லாம் அணைத்து விட்டு, கண்ணை மூடப்போனவருக்கு, காலை யாரோ சுரண்டுகிற மாதிரி ஓர் உணர்வு. மெல்ல தலையை நிமிர்த்தியவருக்குக் காலடியில் கருப்பாய் பெரிய பந்து போல ஒரு உருவம் தெரியவே சப்தநாடியும் நொறுங்கிவிட்டது.

போதாக் குறைக்கு சற்று தொலைவில் யாரோ விசும்பி அழுவது போலவும் ஒரு சப்தம்... தொடர்ந்து யாரோ யாரிடமோ பேசுவது போல... யாரோ ஓடுவது போல, இரு முவது போல ஏகப்பட்ட சத்தங்கள்... சிறிது நேரத்துக்குப் பிறகு பேரமைதி.

கண்ணனும் சந்திராவும் படுக்கையிலிருந்து வெளியே பதறிக் கொண்டு ஓடி வந்தார்கள்.

''மாப்ள... சந்தேகமே இல்ல. இந்த வீட்ல காத்து கருப்பு இருக்கு. விவரம் தெரியாம நீங்க இதை வாங்கிட்டீங்க.''

-கண்ணனின் மாமனார் வெடவெடத்தார். அதன்பின் விளக்கை அணைக்காமல் மூன்று பேருமே கூடத்தில் கொட்டக் கொட்ட விழித்திருந்தனர்.

கிண்ணன் முகத்தில் ஒரே உற்சாகம். அவன் அருகில் அவனைப் போலவே நல்ல வெள்ளை நிறத்தில் ஜெயந்தி.

''ஜெயந்தி... நேத்து ஒரு ராத்திரியிலேயே என் மாமனாரையும் பொண்டாட்டியையும் ஒரு அரட்டு அரட்டிட்டேன். என் மாமனார் இன்னிக்கு கேரளாவுக்குப் போயிருக்கார். அங்க யாரோ ஒரு நம்பூதிரி இருக்காராம். அவர் பேய் பிசாசுகளை அடக்கிப் பிடிக்கறதுல கில்லாடியாம். பாவம். அந்த நம்பூதிரி இங்க வந்து நல்லா ஏமாறப் போறாரு.''

-ஜெயந்தியின் மடிமேல் தலைவைத்துப் படுத்தபடி அவன் பேசப் பேச, அவள் முகத்திலும் சலன ரேகைகள்!

''என்னடா... அந்தக் கறுப்பியை எப்படிக் கைகழுவிட்டு, உன் கழுத்துல தாலிகட்டப் போறேன்னுதானே கவலைப்படறே. பாத்துகிட்டே இரு. இன்னிக்கே அவளை ஒரு வழி பண்ணிடறேன். அந்த வீட்ல அவளை நான் கொலையே பண்ணாலும், பழி அந்த வீட்டுப் பேய் பிசாசுங்க மேலதான் விழும். கொலையே பண்ணா என்ன... பண்ணத்தான் போறேன். உனக்காக... உன் கழுத்துல தாலி கட்றதுக்காகவே இந்தக் கொலையைச் செய்யப் போறேன்.''

கண்ணன் முகத்தில் கனல்! ''எங்கேயும் தப்பு வந்துடாதே...'' ஜெயந்தி மிடறு விழுங்கியபடியே கேட்டாள்.

''வரக்கூடாதுன்னு தானே அப்படி ஒரு வீடு பார்த்தேன். எவ்வளவு மர்மக் கதைகள் படிச்சிருப்பேன். அதெல்லாம் எனக்கு இப்ப கைகொடுக்குது ஜெயந்தி.''

''இருந்தாலும்...''



''கொலைங்கறது டு மச்சுங்கறியா. வேற வழியே எனக்குத் தெரியல. என் மாமன் ஒரு பணவெறி பிடிச்ச மனுஷன். சின்ன வயசுலயே அப்பா அம்மாவை இழந்துட்ட என்னைப் 'படிக்க வச்சேன், ஆளாக்கினேன்'னு சொல்லி, 'மகளைக் கட்டிக் கிட்டா அவ்வளவும் ஃப்ரீ! இல்லாட்டி இருபது லட்சத்தை எண்ணி வைன்'னு சொன்ன வியாபாரி அந்த ஆள். அவனுக்கு மேல அவ... எனக்குன்னு ஒரு மனசு இருக்கறதையே அவளும் சரி, அவனும் சரி நினைச்சே பார்க்கலையே...''

-கண்ணன் குமுறினான்.

கிண்ணனின் மாமா கேரளாவிலிருந்து திரும்பி வந்தபோது, அவர் மகள் சந்திரா பிணமாகத் தான் அவரை வரவேற்றாள். அவரைப் பார்த்த மாத்திரத்தில் ஓடிவந்து கட்டிக்கொண்டான் கண்ணன்.

''மாமா... இனி என்னால இந்த வீட்டுல ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது மாமா. ராத்திரி எதைப் பார்த்து பயந்தாள்ன்னு தெரியல. பயத்துல ஹார்ட் பீட் நின்னுடிச்சு நடக்கக் கூடாதது நடந்துருச்சே மாமா. குறைஞ்ச விலை வீடுன்னு ஆசைப்பட்டது. இப்படி வந்து முடிஞ்சிடுச்சே மாமா.'' என்று தெருவே கேட்கும்படி ஒப்பாரி வைத்து விசும்பி விசும்பி அழுதான் கண்ணன்.

'தலையணையை அழுத்தி பெண்டாட்டியைக் கொன்னுட்டு, இப்ப அப்பாவி மாதிரி அழுது கலக்கறியேடா...' தன்னைத்தானே பாராட்டிக்கொண்டான். ஒருமாதம் ஓடிவிட்டது!

ஜெயந்தியை ரிஜிஸ்தர் ஆபிசில் வைத்து மணந்து கொண்டு, அந்த வீட்டிற்கே திரும்பி வந்தவனை தெருவே ஆச்சரியமாகப் பார்த்தது.

“வீட்டை காலி பண்ணிட்டுப் போக வந்திருந்தேன். இவ என் மனைவி’ என்று தெருவில் உள்ளவர்களிடம் அறிமுகம் செய்து வைத்தவன் ஜெயந்தியுடன் வீட்டிற்குள் நுழைந்தான்.

அவளும் ஒரு வித பயத்துடன்தான் நுழைந்தாள்.

“பயப்படாதே ஜெயந்தி. இங்க நிஜமா பேய் பிசாசுல்லாம் கிடையாது. என் மாமனையும், சந்திராவையும் மிரட்டறதுக்காக நான் செய்த செட்டப் பேய்கள்தான் இங்க இருக்கு. இருந்தாலும் தொடர்ந்து நாம இங்க குடி இருந்தா, பாக்கறவங்களுக்குச் சந்தேகம் வரும். அதனால இன்னிக்கு ஒருநாள் மட்டும் இருந்துட்டு காலி பண்ணிடுவோம்” என்று அவளை அணைத்தபடி கண் சிமிட்டினான்.

அப்போது, இருவருக்கும் இடையே யாரோ கடந்து செல்வது போல ஒரு மெல்லிய அரவம். பெட்ரூம் கதவும் திறக்கப்பட்டதுபோல ஒரு சப்தம்.

“என்னங்க... யாரோ வந்துருக்காங்க...”

“நமக்குத் தெரியாம யாரு?” கேள்வியோடு ஜெயந்தியை அணைத்தபடியே நடந்தவன், திறந்திருந்த பெட்ரூமுக்குள் பார்வையை விட்டபோது பகீர் என்றது!

உள்ளே வெறித்த விழிகளுடன் அவர்கள் இருவரையும் பார்த்தபடி, அவன் முதல் மனைவி சந்திரா!